₹10

fmpb

அறைகூவல்

Volume 52 Issue 10 October 2022

கிறிஸ்துவாக வாழ்ந்திட அழைப்பு



ஆதலால், நீங்கள் பிரியமான
பிள்ளைகளைப்போல தேவனைப்
பின்பற்றுகிறவர்களாகி,

எபேசியர் 5:1

அதேகர் வாசிக்கும் கிறிஸ்துவின் நிருபமாய் வாழ்வோம்

ஆரம்ப வரிகள்...

இயேசு கிறிஸ்துவாகவே வாழ ஓர் அழைப்பு!



இரயில் பயணச்சீட்டு பரிசோதகர் (TTE) ஒருவர், இரயிலின் கதவருகில் காகிதத்தை விரித்து அதன்மேல் அமர்ந்திருந்த ஒரு நபரைக் கண்டார். உடனே அவர் அந்த நபரிடம் 'டிக்கெட் இருக்கிறதா?' என்று பரிசோதித்தபோது, அந்நபர் தன்னிடம் உறுதிசெய்யப்பட்ட டிக்கெட் இருப்பதாகவும்; ஆனால் தனது படுக்கையில் யாரோ ஒருவர் படுத்து அயர்ந்த நித்திரை செய்வதாகவும், அதனால் அவரை தான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை என்றும் கூறினார். உடனே அந்தப் பயணச்சீட்டு பரிசோதகர் வியந்துபோய் அந்நபரிடம், "நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?" எனக் கேட்டதோடு, அந்நாளில் அப்பயணம் முடிவு பெறும்முன்பே அப்பயணச்சீட்டு பரிசோதகரும் இயேசுகிறிஸ்துவின் அடியவரானார். ஆம்! நமது சிந்தை, சொல், செயல் அனைத்தும் நாம் கிறிஸ்தவர்கள் என்பதை வெளிக்காட்டுகிறதா? ஏனெனில், நாம் இயேசுகிறிஸ்துவைப் போல் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த உலகத்தில் அநேக மதங்கள் உள்ளன. அத்தனை மதங்களும் அவற்றின் சொந்த வேதங்களைப் பின்பற்றுகின்றன. ஆனால், கிறிஸ்தவத்தில் மட்டுமே நம் வாழ்க்கையே பிறர் கிறிஸ்துவைக்குறித்து படிக்கவும் அறியவும் உதவும் வேதப்புத்தகமாக மாறுகிறது. எனவேதான் பவுல் 2 கொரி.3:3-ல், "நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்க மாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது" என்று எழுதுகிறார். ஆகவே, பவுல் கூறுவதைப்போல கிறிஸ்துவை அறியாதவர்கள் வாசிக்கும் ஒரு வேதப்புத்தகமாக அல்லது நிருபமாக நாமிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

'கிறிஸ்தவர்கள்' (கிறிஸ்து+அவர்கள்) என்ற பதம் முதல்முதலில் அப்போஸ்தலர் நடபடிகளில் (அப்.11:26) இயேசுவைப்போல் வாழ்ந்து காண்பித்த சீஷர்களுக்கு இவ்வுலக மக்கள் கொடுத்த ஒரு பெயராகும். அப்படியானால் அவர்களின் பேச்சு, செயல் மற்றும் குணம் அனைத்தும் இயேசுகிறிஸ்துவைப்போல் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் அவர்கள் கிறிஸ்தவர்களாக அடையாளம் காணப்பட்டனர். நமது தேச தந்தை காந்தி ஒருமுறை, "நான் உங்கள் கிறிஸ்துவை விரும்புகிறேன். ஆனால், கிறிஸ்தவர்கள் என சொல்லிக்கொள்ளும் உங்களை அல்ல. ஏனெனில், நீங்கள் உங்கள் கிறிஸ்துவைப்போல் இல்லை" என்று கூறினார். மேலும் அதற்கு உதாரணமாக அவர், ஒரு ரோஜா தன்னை ஒருபோதும் தான் ரோஜா என்று அறிமுகம் செய்வதில்லை. அதன் நிறம், நறுமணம் மற்றும் அதன் வெளிப்புறத்தோற்றமே அதை ஒரு ரோஜாவாக வெளிப்படுத்துகிறது எனவும் கூறினார்.

எனவே, நாம் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிற கிறிஸ்தவர்களாகவும் பரிசுத்த வேதத்தின்படி நடக்கிற வேதக்காரர்களாகவும் வாழ்ந்திட நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவின் சாயலை நம்மில் பிறர் பார்க்கட்டும். கிறிஸ்துவின் தாழ்மை, பொறுமை, தயவு, சாந்தம், கருணை, அன்பு போன்ற அவருடைய குணத்தை நமது வாழ்க்கைமுறை பிறருக்கு காண்பிக்கட்டும். 'கிறிஸ்துவுக்காக மடிவது எளிது; ஆனால், அவருக்காக வாழ்வது கடினம்' என்றாலும், நாம் அவரைப்போல் வாழ்வதற்கு அவர் தமது கிருபையை நமக்குத் தருகிறார். கிறிஸ்துவைப்போல நாமும் இந்த உலகில் நன்மை செய்கிறவர்களாய் சுற்றித் திரிந்து, நம்மிலிருக்கும் கிறிஸ்துவைப் பிறர் காணச்செய்வோம். இருளில் இருக்கும் சின்னஞ்சிறு பூச்சிகளை ஈர்க்கும் ஒளிச்சுடர்களைப்போல், இருளில் வாழும் ஜனங்களை கிறிஸ்துவின் ஒளியண்டை ஈர்க்கும் சுடரொளிகளாய் நாம் வாழ்வோம். வேதத்தில் நாம் வாசிக்கிறபடி நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப்போல் நாமும் வாழ்ந்து ஜொலித்திட நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இவ்வாழ்வு ஒரு அருமையான வாய்ப்பு. எபே.5:1,2-ல் நாம் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்துவைப்போல் வாழ அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வழைப்பைப் பெற்றிருக்கிற நாம், அதற்குத் தகுதியானவர்களாக வாழவேண்டும். அவ்வாறு இயேசுகிறிஸ்துவுக்காக வாழ்ந்து ஜொலிக்க தேவன்தாமே நமக்கு உதவி செய்வாராக!

- மெர்சி செல்வின் *(தகவல் தொடர்புத்துறை)*

ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். யோவான் 13:14-15

நாம் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. மாறாக, நமது அழிந்துபோகும் சரீரத்தில், கிறிஸ்துவின் வாழ்க்கை நம்மில் வெளிப்பட நாம் அனுமதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். - ஆஸ்வால்டு சேம்பர்.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள். சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக்கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன். 1 கொரிந்தியர் 11:1-2

பூமியிலுள்ள விசுவாசிகள் கிறிஸ்துவுக்கு அருகாமையில் பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களைப் பின்பற்றட்டும். மூப்பர்கள் பரலோகத்தில் இருப்பதைப் போல நாமும் பூமியில் தேவ சிம்மாசனத்தைச் சுற்றி அமர்ந்திருப்போம். கிறிஸ்து நம் எண்ணங்களின் இலக்காகவும், நம் வாழ்வின் மையமாகவும் இருக்கட்டும். - சார்லஸ் H. ஸ்பர்ஜன்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நமது தரிசனம்:

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

நமது ஊழியம்:

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

feedbackfmpb@fmpb.org
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

தனிப்பிரதி ரூ.10/-	வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ.48/-	ஆண்டு சந்தா ரூ.480/-
ஆயுள் சந்தா ரூ.500/-	ஆயுள் சந்தா ரூ.5000/-

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

பொதுச்செயலாளரிடமிருந்தும்...



இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்தியர்களுக்கு அவரை அறிந்திடச்செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு,

நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் உங்களனை வருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

அக்டோபர் மாதம் என்றாலே அது நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் பணித்தளங்களைப் பார்வையிடுவதற்கும், அங்குள்ள மிஷனெரிகளோடு இணைந்து உபவாசமிருந்து ஜெபிப்பதற்கும் வேறுபிரிக்கப்பட்ட மாதமாகும். இவ்வருடமும் அநேக ஜெபக்குழுக்கள் அவ்வாறாகவே பணித்தளங்களைப் போய் பார்வையிட ஏற்கனவே திட்டமிட்டாயிற்று. நான் இன்னும் அதிகமான ஜெபக்குழுக்கள் இவ்வாறு பணித்தள விஜயம் மேற்கொள்ளவும், நமது இயக்கத்தின் வருடாந்திர முக்கிய நிகழ்ச்சிகளுக்கு அநேக புதிய அங்கத்தினர்களை அங்கு அழைத்துச்செல்லவும் ஊக்குவிக்கிறேன். அனைத்திற்கும் மேலாக, அவ்வாறு பணித்தள விஜயம் செய்யும் குழுவினரிடம், அங்கு தாங்கள் சென்று 3 நாட்கள் அல்லது ஒரு முழுநாளாவது அங்கிருக்கும் மிஷனெரிகளோடு சேர்ந்து உபவாசமிருந்து மிஷனெரிகளுக்காகவும், ஊழியத்திற்காகவும், சுவிசேஷம் ஒவ்வொரு மனிதரையும் சந்திக்கும்விதமாக அந்தந்த மாநிலங்களில் இருக்கும் புண்ணிய ஸ்தலங்கள் யாவும் பலமிழந்து போகத்தக்கதாகவும் ஊக்கமாய் ஜெபிக்க கேட்டுக்கொள்கிறேன். அதற்கு தேவன்தாமே நம் அனைவர் மீதும் எரேமியா தீர்க்கன் எரே.9:1-ல் "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீருற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும்பகலும் அழுவேன்" எனக் கூறியுள்ளபடி மன்றாட்டின் ஆவியைப் பொழிவாராக!

இளைஞர் பிரிவு பொன்விழா:

நமது இயக்க இளைஞர் பிரிவு, தூத்துக்குடி பகுதியிலுள்ள முயல் தீவு என்ற இடத்தில் 1973-ல் அநேக இளைஞர்களை மிஷனெரிகளாக எழும்பச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடம் நமது இளைஞர் பிரிவு ஊழியத்தில் தேவனின் உண்மைத்துவம் விளங்கிக்கொண்டிருக்கின்ற 50-வது வருடமாகும். கடந்த காலங்களில் இவ்விளைஞர் முக்கியப்பிரிவில் தலைமைத்துவம் வகித்த மிஷனெரிகளை நினைவுகூரும் வண்ணமாக FMPB-ல் வருகிற ஜனவரி 2023-ல் இதன் பொன்விழாவை ஏற்பாடு செய்யும் வேளையில், ஒரு பெரிய இளைஞர் கூட்டத்தை நடத்த வேண்டுமென திட்டமிட்டு வருகிறோம். வரும்நாட்களில் அநேக மிஷனெரிகள் எழும்புவதற்கு தேவன் இவ்விளைஞர் பிரிவை எடுத்து பயன்படுத்த தொடர்ந்து ஜெபியுங்கள்.

FMPB - US வெள்ளி விழா:

FMPB-க்கும் அமெரிக்காவில் வசிக்கும் அதன் இந்திய ஆதரவாளர்களுக்குமிடையே ஒரு பாலமாக FMPB - US என்ற பெயரில் நமக்கு அமெரிக்காவில் ஒரு பதிவு செய்யப்பட்ட நிர்வாக அமைப்பு உள்ளது. அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு மாநிலங்களில் நமது ஊழியத்திற்காக கிரமமாக ஜெபக்கூடுகைகளையும், சில இடங்களில் ஜெப மாநாடுகளையும் நடத்தி வருகிறார்கள். கொரோனாவை முன்னிட்டு கடந்த 2 வருடங்களாக இம்மாநாடுகள் இணையதளம் மூலமாக நடத்தப்பட்டதுபோல இவ்வருடமும் அவைகள் இணையதளம் வாயிலாகவே நடத்த திட்டமிட்டு வருகின்றனர். இவ்வருட மாநாடு 25-வது வருட மாநாடானதால் அதை வெள்ளி விழாவாக FMPB - US கொண்டாடுகிறது. FMPB-US-ன் தலைவர்களோடு இணைந்து நடத்திய ZOOM கூடுகையில், கர்த்தரின் கிருபையால் இவ்வூழியத்தில் தாங்கள் இந்த 25-வது ஆண்டை அடைந்திருப்பதாகக் கூறினர். கர்த்தர்

நம்மோடும் நமக்குள்ளும் இருந்து, அவருடைய பிரதான கட்டளையை நாம் நிறைவேற்றச் செய்கிறார்.

காலண்டர் பணி:

வரும் ஆண்டு 2023-ன் காலண்டரின் ஆயத்தப் பணி நிறைவு செய்யப்பட்டு, அச்சகத்திற்கு சென்றாயிற்று. எனவே, காலண்டர்கள் குறித்த நேரத்தில் விரிவுப்பணி அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுவிடும். அந்த காலண்டர் நமது மிஷனெரித்தரிசனம் மற்றும் பொறுப்புகளை அனைவருக்கும் எப்போதும் நினைப்பூட்டுவதாக அமைய தயைக்கூர்ந்து ஜெபியுங்கள்.

விரிவுப்பணி செயலர்கள் கூட்டம்:

தமிழ்நாடு - பாண்டி விரிவுப்பணி செயலர்கள் கூட்டம் ஆகஸ்டு 29 முதல் 31-ம் தேதி வரை திருநெல்வேலியில் வைத்து நடைபெற்றது. தேவ நடத்துதலின்படி, அச்செயலர்கள் தங்களது விரிவுப்பணியை 4 பகுதிகளாக திட்டமிட்டுப் பணி செய்ய தீர்மானித்துள்ளனர். அதன் விபரமாவது:

- நமது இயக்கத்திற்கு தேவன் தந்திருக்கும் தரிசனத்தை ஒவ்வொரு கிறிஸ்தவரிடமும் பகர்வது.
- நமது ஒவ்வொரு ஆதரவாளர்களின் இல்லத்தை ஒரு ஜெபக்குழுவாக மாற்றுவது.
- நமது ஊழியத்தின் எல்லா தரப்பிலும் அதிக எண்ணிக்கையில் தலைவர்களை உருவாக்குவது.
- நமது ஊழியத்தில் வாலிபர்களையும், தொழில் வல்லுநர்களையும் ஈடுபடச் செய்வது.

வெளியீடுகள்:

நமது அனுபவமிக்க மிஷனெரிகளால் எழுதப்பட்ட வெகு சில புத்தகங்களை FMPB-ன் வெளியீட்டுத்துறை வெளியிட்டுள்ளது. தயவுசெய்து அப்புத்தகப் பிரதிகளைப் பெற்று பயனடையுங்கள். அப்புத்தகப் பிரதிகளை நமது தகவல் தொடர்புத்துறையின் வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விசாகப்பட்டினம் கார்னிவெல்:

2 வருட இடைவெளிக்குப்பின், விசாகப்பட்டினம் கார்னிவெல் அங்குள்ள FMPB விரிவுப்பணி செயலரான திருமதி & திரு. ரம்யா ராஜ் அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. தேவன் அதை அபரிமிதமாக ஆசீர்வதித்து, நற்பலன்களைக் காணச் செய்தார்.

UESI ஹைதராபாத் கூடுகை மற்றும் MOU கையொப்பமிடுதல்:

கர்த்தருக்குச் சித்தமானால், FMPB-க்கும் UESI-க்குமிடையே புதுப்பிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அக்டோபர் 2-ம் தேதி ஹைதராபாத்தில் வைத்து கையெழுத்திடப்பட இருக்கிறது.

அமெரிக்கா & மத்திய கிழக்கு இணையதள மாநாடுகள்:

இம்மாதம் 15-ம் தேதி அமெரிக்கா மாநாடும், 20&22-ம் தேதிகளில் மத்திய கிழக்கு மாநாடுகளும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. அம்மாநாடுகளின் ஆயத்தத்திற்காகவும், அதில் திரளான மக்கள் வந்து பங்கேற்கவும் ஜெபியுங்கள்.

ஜார்க்கண்ட் மருத்துவப்பணி:

பிரத்தியட்சமாக மிகத் தேவையிலுள்ள மால்தோ மற்றும் சந்தால் இனமக்களுக்கு மருத்துவப்பணி செய்ய நாம் ஜார்க்கண்டில் 10 படுக்கை வசதிகளடங்கிய மருத்துவமனையொன்றை வைத்துள்ளோம். மிகவும் தேவைப்படும் இடத்தில் ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்ய அர்ப்பணிப்புடன் கூடிய அனைத்து வகை துணை மருத்துவப்பணியாளர்கள் இம்மருத்துவ மனைக்கு தேவைப்படுகிறார்கள். எனவே, இம்மருத்துவப்பணி ஊழியத்தில் அதற்குத் தகுதியான கல்வித்தரத்தையுடைய மக்களை ஊக்குவிக்க நமது ஜெபக்குழுத்தலைவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகா மாநில முகாம்:

நமது இயக்க கர்நாடகா மாநில முகாம் இம்மாதம் 22 & 23-ம் தேதிகளில் நடைபெற உள்ளது. இதில் அதிகமானோர் கலந்து கொள்ளவும், தேசத்தைக் குறித்ததான பாரம் கலந்துகொள்வோரின் உள்ளங்களை ஆட்கொள்ளவும் ஜெபியுங்கள்.

தேவப்பணியில் உங்களுடன் பயணிக்கும்,



அருட்திரு. S. ஜாண் பெர்லின்



தேவனைப் பின்பற்றுங்கள்

தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி என்பதை கிறிஸ்துவைப்போலவே செய் எனவும் மொழிபெயர்க்கலாம். பெற்றோரைப் போலவே பிள்ளைகள் இருப்பார்கள் என்பதைப் போலவே பவுலடியார் சித்தரிக்கிறார். நல்லவைகளோ தீயவைகளோ பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள். ஆண்டவர் நமக்கு தகப்பனானால், அவரின் செயல்கள் நம்மிடம் காணப்பட வேண்டும். நாம் தேவனின் பிள்ளைகளானதால், அவரைப் பின்பற்றி வாழ வேண்டும்.

எபே.4:1-ஐ பாருங்கள். "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து" எனத் துவங்கி, 4-ம் அதிகாரத்தில் பொய், கோபம், கெட்டவார்த்தை, கசப்பு வேண்டாம் என நிறைவு செய்த பவுலடியார் 5-ம் அதிகாரத்தில் தேவனைப் பின்பற்றுங்கள் எனத் துவங்குகிறார்.

எபே. 5:1-17 வரையுள்ள பகுதியில் மூன்று காரியங்களை அவர் கூறியுள்ளார்:

I. அன்பிலே நடந்துகொள்ளுங்கள் (எபே. 5:1-2)

முன்னான காலங்களில் ஒரு திருமணமோ அல்லது மரணமோ, பிரிந்துபோன உறவுகளைப் புதுப்பிக்கும்; ஒன்றாக்கும்; கசப்புகள் கரைந்துபோகும். ஆனால், இன்று அந்நிலை மோசமாகிவிட்டது. உடைந்த உறவுகள் ஒட்டுவதில்லை. காரணம், அன்பிலே மாயம் கலந்துவிட்டது.

ஆனால் இங்கே சொல்லப்பட்டிருக்கும் அன்பு - உண்மை அன்பு, இருதயப்பூர்வமான அன்பு. 'அன்பு திரளான பாவங்களை மூடும்' என வேதம் கூறுகின்றது (1பேது.4:8).

நாம் ஏன் அன்பிலே நடக்கவேண்டும் என பவுலடியார் சில காரணங்களைக் கூறியுள்ளார்.

1. நாம் தேவனின் பிள்ளைகள் (எபே.5:1)

இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாய் மறுபடியும் பிறந்திருக்கிற நாம் திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்கள் (2பேது.1:4). தேவன் அன்புள்ளவர் என்றால் அவருடைய பிள்ளைகளும் அன்பாயிருக்க வேண்டும் என்பதே நியதி.

புதுவாழ்வு பெற்றவர்கள் அன்புள்ளவர்களாயிருக்க வேண்டும். ஏனெனில், பழைய வாழ்வு சுயநலம் கொண்டது என்பதினால் மற்றவர்களைத் தங்கள் எல்லைக்குள் அனுமதிக்க மாட்டார்கள். அங்கே போராட்டம் இருக்கும், சமாதானமிராது (ஏசா.48:22). ஆனால், புதுவாழ்வு பெற்றவர்கள் அன்பினால் நிரப்பப்பட்டு, சமாதானத்தோடு மட்டுமல்லாது சமாதானத்திற்குக் காரணராயிருப்பார்கள். எனவே, நாம் தேவனின் பிள்ளைகள் என்பதினால் அன்பாயிருக்க வேண்டும்.

2. தேவனின் பிரியமான பிள்ளைகள் (எபே.5:1)

இயேசு திருமுழுக்கு பெற்று ஆற்றைவிட்டு வெளியே வரும்போது, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" (மத்.3:17) என தேவனின் சத்தம் வானத்தி

லிருந்து வந்தது. அதேவிதமாக தேவன் நம்மையும் நேசிக்கிறார் என்பதை இயேசுவின் ஜெபத்தின் மூலமாய் நாம் காணலாம். "நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்" (யோ.17:23) என ஜெபித்தார். ஆகவே, அவர் நம்மில் அன்பாயிருக்கிறார். தேவனின் அன்பில் பிறந்து நாம் தளைத்திருப்பதினால் நம்முடைய வாழ்வின் மூலம் அவ்வன்பை வெளிப்படுத்த வேண்டும். தேவனின் நேசத்துக்குரிய பிள்ளைகளாகிய நாம் அதில் தேவனைப் பின்பற்ற வேண்டும்.

3. நம்மை அவர் விலைக்கிரயம் கொடுத்து வாங்கியிருக்கிறார் (எபே.5:2)

ஒருவன் தன் சிநேகிதருக்காக உயிரைக் கொடுப்பதைப் பார்க்கிலும் அதிக அன்பு வேறு ஒருவரிடத்திலும் இல்லை (யோ.15:13). ஆனால் நம் ஆண்டவர் நாம் பாவிகளாக இருக்கும்போதே, நமக்காக உயிர் கொடுத்தார் (ரோ.5:8,10). நம்மை அவர் உயிர் கொடுத்து மீட்டதற்குப் பதிலாக நாம் அவரை நேசிக்க வேண்டும். இயேசு தம்மைச் சிலுவையில் தியாக பலியாக ஒப்புக்கொடுத்ததைப் பவுலடியார் புதிய ஏற்பாட்டின் சுகந்த வாசனையோடும் பலியோடும் ஒப்பிடு கின்றார். இரண்டுப்பதங்களை இங்கே பயன்படுத்தியுள்ளார் "சுகந்தவாசனை" "பலி." இதனுடைய பொருள் என்னவெனில், "இது ஆண்டவருக்குப் பிரியமானது." நியாயப்பிர மாணத்தின் நிறைவேறுதலினால் இயேசு பலியானார். எனவே, பிதாவானவர் சுகந்த வாசனையாக அதை ஏற்றுக்கொண்டார்.

லேவியராகமத்தில் முதல் மூன்று அதிகாரங் களில் மூன்று பலிகளைப் பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. முதல் அதிகாரம் 'சர்வாங்க தகன பலி.' இதை கிறிஸ்து தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்ததோடு ஒப்பிடலாம். 2-ம் அதிகாரத்தில் 'போஜன பலி' பற்றி சொல்லப்பட்டுள்ளது. இதை கிறிஸ்துவின் குறைவற்ற குணாதிசயத்தோடு ஒப்பிடலாம். 3-ம் அதிகாரத்தில் 'சமாதானபலி'-யைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. இதை தேவனுக்கும் மனிதனுக்கும் சமாதானம் உண்டாக்க கிறிஸ்து மரித்தாரே அதோடு ஒப்பிடலாம். இவைகளைப் பிதா சுகந்த வாசனையாக ஏற்றுக்கொண்டார். லேவியராகமம் 4,5-ம் அதிகாரங்களில் பாவ நிவாரண பலி மற்றும் குற்ற நிவாரண பலி பற்றி சொல்லப்பட்டுள்ளது. இங்கே பலியின் நிலையை இயேசு எடுத்துக்கொண்டார். இது சுகந்த வாசனையல்ல, மன்னிப்பு (லேவி.4:35). மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பினால் இயேசுகிறிஸ்து தம்மைச் சுகந்த வாசனையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்தார். அவரைச் சேவிக்கிற நாம் சக மனிதர்களை நேசிக்க வேண்டும்.

'அன்பிலே நடந்துகொள்ளுங்கள்' எனப் பவுலடியார் ஆரம்பிப்பதற்குக் காரணம் - 'அன்பு' கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை குணாதிசயம். அன்பிலே நடப்பீர்களானால் தேவனுக்குக் கீழ்ப்படிவீர்கள். மனிதர்களைக் காயப்படுத்த மாட்டீர்கள். பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் (ரோ.13:8). அந்த அன்பு பரிசுத்த ஆவியினால் நம் உள்ளங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (ரோ.5:5).

II. வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள் (எபே.5:3-14)

நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் (யோ.8:12) என்ற ஆண்டவரை நாம் பின்பற்றுவதினால் இருளுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை.

பவுலடியார் இதை மூன்று விளக்கங்களினால் நிரூபிக்கிறார்.

1. நாம் பரிசுத்தவான்கள் (எபே.5:3-4)

நாம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப் பட்டவர்கள், இருளின் உலகத்துக்குரிய வர்கள் அல்ல. நாம் அந்தகாரத்தினின்று தேவனுடைய ஆச்சரியமான ஒளிக்கு வரவழைக்கப்பட்டவர்கள் (1பேது.2:9). எனவே, இருளின் பாவ தன்மைக்கு இணக்கம்

தெரிவிப்பது பரிசுத்தவான்களுக்கு அல்லது பிரித்தெடுக்கப்பட்டவர்களுக்கு கண்ணிய குறைச்சலாகிவிடும். ஆண்டவரின் நாமம் அவமதிக்கப்படும்.

– பவுலடியார் இவைகளைக் கோடிட்டுக் காண்பிக்கிறார்.

வேசித்தனம் (எபே.5:3) – அன்றும் இன்றும் உலகில் வியாபித்திருக்கும் ஒன்று. இதைக் குறித்து பவுல் கண்டித்து எழுதுகிறார். அறிவியல் வளர்ச்சியினால் வந்துவிட்ட சாதனங்கள் இதற்கு நேராக உன்னைத் தூண்டுமானால், அதைத் துண்டித்து விடு. கட்டுப்படுத்த முடியாத சரீர பசி தன்னை திருப்திப்படுத்திக் கொள்ள தனக்குரிய தல்லாததை எடுக்க முயற்சி செய்கிறது. மாம்சத்தின் இச்சை உலகத்தால் உண்டானது (1யோ.2:16). இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது. உப்புக்குக் கூட இருக்கக்கூடாது என டாக்டர். சாம் கமலேசன் அண்ணன் சொல்வார்கள்.

பேச்சு (எபே.5:4) – இது இதயத்தின் வெளிப்பாடு. எபே.5:3,4-ம் வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் பாவங்களின் அடிப் படை உறவுகளைப் பார்த்தால், ஒரே விதமான "பசி" தான். தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளும் 'பசி', புத்தியீனமான பேச்சுக்கள் பரிசுத்தவான்களுக்குத் தகாதவைகள்.

நகைச்சுவை தவறு என எண்ண வேண்டாம். ஆனால் மற்றவர்களைச் சேதமாக்கும், சோர்பிற்குள்ளாக்கும் கேலி, பரியாசம் வேண்டாம். அது நம் கண்ணியத்தைக் குறைக்கும்.

மற்றவர்களை உருவாக்கும் சொற்களே நமக்குத் தகும் (எபே.4:29). முட்டாள்தனமான பேச்சு நல்ல நோக்கத்தையே குலைத்துவிடும். நமது வார்த்தை கிருபை நிறைந்ததாயும், உப்பால் சாரமேற்றப்பட்டதாயும் இருக்கட்டும் (கொலோ.4:6; 3:16-17).

2. நாம் ராஜாக்கள் (தேவராஜ்யத்தின் பிள்ளைகள்) (எபே.5:5-6)

நாம் ஆண்டவர் மீது நம்பிக்கை வைக்கும் போது தேவராஜ்யத்தின் பிள்ளைகளாகிறோம். அதாவது, மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெறும்போது தேவ ராஜ்யத்துக்குள் நுழைகிறோம் (யோ.3:3). ஆனால், முழு வெளிப்பாடும் அவர் மறுபடியும் வரும்போதுதான் வெளிப்படும் (1யோ.3:2). அதற்காகக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோ.8:23). பாவத்தில் நிலைத்திருக்கிறவர்களும், அதை விரும்பிச் செய்கிறவர்களும் தேவ ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது என பவுலடியார் கூறுகின்றார். கலா.5:19-21-ம் வசனங்களில் மாம்சத்தின் கிரியைகளைச் சொன்ன பவுலடியார், இவைகளைச் செய்கிறவர்களும் தேவராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டார்கள் என திட்டமாய் கூறுகின்றார் (கலா.5:21).

எதிர்பாலரோடு திருமண உடன்படிக்கை இல்லாமல் உறவு கொண்டிருப்பவர்கள், விக்கிரக ஆராதனை செய்பவர்கள் தேவ ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது என எபே.5:5-ல் கூறுகின்றார். விக்கிரக ஆராதனையைப் பொருளாசையோடு ஒப்பிட காரணம், இவர்கள் தெய்வம் அல்லாத ஒன்றை ஆராதிக்கின்றார்கள். இந்த எச்சரிப்புகளுக்குக் காரணம், மனிதர்கள் பாவத்தைப் பழக்கமாகக் கொண்டிருப்பது தான். ஒரு இரும்பு கம்பியைச் சூடேற்றி குளிரப்பண்ணி, மறுபடியும் சூடேற்றி குளிரப்பண்ணி என மறுபடியும் மறுபடியும் செய்து கொண்டிருந்தால், அந்த இரும்பு கம்பி பெலனில்லாமல் போய்விடும். தாவீது பாவம் செய்தார்; ஆனால், மறுபடியும் மறுபடியும் அதிலே நிலைத்திருக்கவில்லை.

பவுலடியாரின் காலத்தில் கிறிஸ்தவத்தைத் தவறாகப் போதித்த கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், 'நீங்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டி ருக்கிறீர்கள்; எனவே, பாவம் செய்யலாம் பிறகு விட்டுவிடலாம்' என அறியாமையிலிருந்த கிறிஸ்தவர்களை வழிவிலகச் செய்தார்கள் (எபே.5:6). அவிசுவாசிகளின் பாவத்தை ஆண்டவர் நியாயம் தீர்ப்பதைக் காட்டிலும் விசுவாசிகளிடம் சற்று கடுமையாகவே இருப்பார். ஏனெனில், தம் பிள்ளைகள்

பரிசுத்தமாயும் மாசற்றவர்களாயும் வாழ ஆண்டவர் விரும்புகின்றார். இன்று கிறிஸ்தவத்தில் ஆவிக்குரிய நிகழ்ச்சிகளை நடத்துகின்றவர்கள், அநேகர். ஆனால், ஆண்டவரை நிழலாய் தொடர்கின்றவர்கள் மற்றும் அவரைப் பிரதிபலிப்பவர்கள் வெகு சிலரே. நாம் அவரைப் பிரதிபலிக்கும் ராஜாக்களாக இருக்க வேண்டும். நம்மை ஆண்டவர் ராஜாக்களாக்கி வைத்திருக்கிறார். எனவே தேவராஜ்யத்தின் பிள்ளைகளாகிய நாம், உலகளவிற்கு தரம் தாழ்ந்திடாமல் உலக மக்களை நம்மளவிற்கு உயர்த்திட வேண்டும். அவர்களை தேவ ராஜ்யத்திற்கு சொந்தமாக்கிட வேண்டும்.

3. நாம் வெளிச்சமாயிருக்கிறோம் (எபே.5:7-14).

இந்தப் பகுதியில் பவுலடியார் அழுத்தமாகக் கூறி எச்சரிப்பது என்னவென்றால், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். இன்னும் தெளிவாக 2 கொரி.6:11-7:1 வரை இதைப்பற்றி எழுதியுள்ளார். நாம் ஒருநாளிலே இருளுக்குள் இருந்தோம் என எழுதவில்லை, இருளாகவே இருந்தோம் என கூறுகிறார். "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள்" (எபே.5:8). ஆனால், இன்று இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். "ஆவிக்குரிய நிலையில் வெளிச்சத்தின் பிள்ளைகள் கனிகொடுக்கிறார்கள். அதை அநேகர் சுவைத்து, தேவராஜ்யத்தின் மேன்மையை அறிந்து கொள்கின்றார்கள்.

ஒரே சமயத்தில் வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும், இருளின் பிள்ளைகளாகவும் வாழ முடியாது. எனவே, ஒளியின் பிள்ளைகளாய் தேவராஜ்யத்தின் மதிப்பீடுகளோடு வாழ பவுலடியார் வலியுறுத்துகிறார். ஒளியின் பிள்ளைகள் நற்குணம் கொண்டவர்கள். இது ஆவியின் கனியின் ஒன்பது சுவையில் ஒன்று. நற்குணம் என்பது அன்பின் செயல்பாடு. ஒளியின் பிள்ளைகள் நீதியும் உண்மையும் உள்ளவர்கள் (எபே.5:9). இவர்கள் தேவனின் பார்வையில் உத்தமர்கள். மனிதர்களுக்கு முன்பாகச் செயல்களில் உண்மையுள்ளவர்கள். எனவேதான், நாம் ஊழிய வரவு செலவு கணக்குகளை அறைகூவலில் வெளியிடுகிறோம். இந்த குணாதிசயங்கள் எல்லாமே தேவனோடு உள்ள உறவின் அடிப்படையில் உருவாகுகின்றன. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து இதைப்பற்றி சொல்லும்போது, உங்கள் வெளிச்சம் மற்றவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்றார் (மத்.5:16). வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் என சொல்லும்போது, நாம் தேவ சன்னிதானத்தில் ஒளிவு மறைவின்றி வாழ்வதாகும். மனிதனுக்கு முன்பாக நீ எதையும் மறைத்து விடலாம். ஆனால், தேவனின் கண்களுக்கு முன்பாக எதையும் மறைக்க முடியாது. அவருக்கு முன்பாக அனைத்தும் வெளியரங்கமாயிருக்கிறது (எபி.4:13).

ஸ்பர்ஜன் என்ற ஒரு பெரிய பிரசங்கியாரிடம் நான் உங்களைப் பற்றி என் பத்திரிக்கையில் எழுத எனக்கு அனுமதி வேண்டும் என ஒரு நிருபர் கேட்டாராம். அதற்கு ஸ்பர்ஜன் "என் வாழ்வைக் குறித்து அனைவரும் அறியும்படிக்கு ஆகாயத்தில் எழுதுங்கள். ஏனெனில், எனக்கு மறைப்பதற்கு ஒன்றுமில்லை என்றாராம். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வெளிப்படையாக வாழுவோம்; நட்சத்திரங்களாய் ஜொலித்திடுவோம். அடுத்து, வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடப்பது என்பது அனுதின வாழ்வில் ஆண்டவரின் வெளிச்சத்தைக் காட்டுவதாகும். நம்முடைய அன்பினாலும், நடக்கையினாலும் இருளில் இருக்கும் மக்கள் வெளிச்சத்தைக் காண வேண்டும். இந்த வெளிச்சம் மற்றவர்களுக்கு வழிகாட்டும். பிசாசானவன் இந்த உலகத்தின் மனிதர்களுடைய மனதைக் குருடாக்கி வைத்திருக்கிறான் (2கொரி.4:3-4). பாவத்துக்குள்ளாகவே வைத்திருக்கிறான் (எபே.4:17-19). நம்முடைய நற்சாட்சியான வாழ்க்கையும் இயேசுவின் அறிமுகமுமே இருளில் இருப்போரை ஒளிக்குள் கொண்டுவர முடியும். இன்னொன்றையும் கவனியுங்கள்- வெளிச்சம் தேவனை வெளிப்படுத்தும்; கனியை உற்பத்தி செய்யும். அதே சமயம்

தவறையும் சுட்டிக்காட்டும். 'நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்' என்ற இயேசு (யோ.12:46) தம்முடைய சீஷர்களைப் பார்த்து, "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத்.5:14) என்றும் கூறினார். ஒரு மருத்துவர் இருளில் அறுவை சிகிச்சை செய்வதில்லை. செய்தால் உயிருக்கே ஆபத்தாகி விடும். ஒரு ஓவியன் இருளில் ஓவியம் வரைய முடியாது. அதேபோல இயேசு இல்லாமல் வெளிச் சத்தின் பிள்ளையாய் நாம் வாழ முடியாது.

இருளின் பிள்ளைகள் வெளிச்சத்திற்கு வராமலிருப்பதற்குக் காரணம், அவர்களது கிரியைகளும் வெளிச்சத்திற்கு வந்துவிடும் என்பதினால்தான். ஆண்டவர் ஊழியம் செய்த காலத்தில் மதத்தலைவர்கள் அவரை வெறுக்கக் காரணம், அவர்களுக் குள்ளாக இருந்த இருளையும், இருளின் கிரியைகளையும் அவரது பிரசன்னம் வெளிப்படுத்தினது (யோ.15:22). அதேவிதமாக கிறிஸ்தவர்கள் இருளின் பாவத்தை வெளிப்படுத்தும் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழவேண்டும். அதுமட்டு மல்ல, கனிகொடுக்கும் வாழ்வும் வாழ வேண்டும். எபே.5:12 நமக்கு எச்சரிப்பைத் தருகின்ற வசனம். இருளின் கிரியை அவலட்சணமானது. கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு எதிர்த்து நிற்க சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள் (எபே.6:13). நமக்குப் போராட்டங்கள் உண்டு. எனவே மாம்ச போராட்டங்கள் ஏற்படும்போது, வெளிச்சத்திற்கு நேராய் நாம் திரும்ப வேண்டும். கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள், இந்த உலகத்திற்கு ஒரு புதிய வெளிச்சம் உண்டானது. சரித்திரம் மாறிவிட்டது. அதேபோல கிறிஸ்தவர்கள் வெளிச்சமாய் நம்பிக்கையின் நட்சத்திரமாய் உலகிற்கு வழிகாட்ட வேண்டும்.

III. ஞானமாய் அல்லது கவனமாய் நடந்துகொள்ளுங்கள் (எபே.5:15-17)

ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்துகொள்ளுங்கள் என பவுலடியார் கூறுகின்றார். கவனமாய் இல்லாதவர்கள் தடுமாறுவார்கள்; வீழ்வார்கள். எனவே, நம்முடைய அனுதின தீர்மானத்தில் கவன மாயிருக்க வேண்டும் (சங்.32:8; ஏசா.28:29). நல்ல புத்திசாலிகள் கூட முட்டாள்தனமான காரியத்தைச் செய்துவிடுவார்கள். எனவே "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்ற (நீதி.1:7) ஞானியின் கூற்றுப்படி, கர்த்தருக்குப் பயந்து ஞானத் துடன் நடக்க வேண்டும். அநேக கிறிஸ்த வர்கள் தூக்கத்திலேயே நடந்து (எபே. 5:14-15), இயேசுவை மகிமைப்படுத்தும் வாய்ப்பை இழந்து போகின்றனர்.

நாம் ஏன் கவனமாக நடக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைப் பவுலடியார் இங்கே விளக்குகின்றார்.

1. இது ஞானத்தின் அடையாளம் (எபே.5:15)

மூடன் காற்றுப் பறக்கடிக்கும் திசையி லெல்லாம் பயணிக்கிறான். ஆனால், ஞானவான்கள் தாங்கள் பயணிக்க வேண்டிய காரியங்கள் குறித்து திட்டமிடுகிறார்கள். முடிவு எங்கே என்பதையும் தீர்மானித்து விடுகிறார்கள். ஒரு மனிதன் வீட்டைக் கட்ட வேண்டுமானால் திட்டம் அவசியம். அப்போதுதான் அவன் என்ன செய்கிறான் என்பது அவனுக்குப் புரியும். நாளைக்கு என்ன நடக்கும் என்பது நமக்கு தெரியாது என்பது உண்மைதான். ஆனாலும், திட்ட மிட்டால் மட்டுமே எதிர்பாராத சம்பவம் அல்லது குழப்பம் வரும்போது நிதானமாய் தீர்க்க மாய் முடிவெடுத்து முன்னேற முடியும். சவுல் தாவீதைத் துரத்திச்செல்வதை 1 சாமு.26-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். தாவீதின் மீதிருந்த எரிச்சல், பொறாமையினால் சவுல் அவனைக் கொல்ல நினைத்தான். சவுல் சொல்லும் வார்த்தையைப் பாருங்கள், "இதோ நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ் செய்தேன்" (1 சாமு.26:21). தவறிழைத்த பின் வருந்தி அதிக பயனில்லை. ஆகவே, நாம் ஞானமுள்ளவர்களைப்போல நடக்க வேண்டும்.

2. நாட்கள் பொல்லாதவைகள் (எபே.5:16)

பவுலடியாரின் அந்தக் காலம் ரோமர் களின் துன்புறுத்தல் துவங்கிவிட்ட காலம் (1பேது.4:12-19). எனவே, வாய்ப்பைப் பயன்படுத்தி ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும். நம் தேசத்தின் நிலையைப் பாருங்கள். ஒருபுறம் வாய்ப்புகள் குறைந்து வருகின்றது. சட்டங்கள் நெருக்கடியைத் தந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் வாய்ப்புகள் பெருகிக்கொண்டிருக்கிறது. தனிமனிதர்களிடம் சுவிசேஷம் சொல்லும் போது, செவிதிறந்து கேட்கிறார்கள்; இணக்கம் தெரிவிக்கின்றார்கள் என்பதினால் இந்த காலத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. நம் வாழ்க்கை குறுகியது (எபே.5:16)

நம் வாழ்க்கை குறுகியது என்பதினால் ஆண்டவர் தருகின்ற வாய்ப்பை அவருக்கென பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நம் கையை விட்டு வழுவிய வாய்ப்பு திரும்ப வராது. ஒரு சீன பழமொழி இப்படி கூறுகிறது, "சிகை அலங்காரத்தை உன் தலையில் முடி இருக்கும்போதே செய்துகொள்; வழுக்கையான பின் ஒன்றும் செய்ய முடியாது." எனவே, அறுவடையின் காலத்தை அழகாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

4. கர்த்தர் நமக்கு மதியைத் (பகுத்தறிவை) தந்திருக்கிறார் (எபே.5:17)

கர்த்தரின் சித்தம் அறிய நாம் நமது பகுத் தறிவைப் பயன்படுத்த வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் ''நாம் புரிந்துகொள்ள முடியாத அனுபவத்தில் கர்த்தர் தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துவார்" என எண்ணுகிறார்கள். ஆனால், அது தவறானது மட்டுமல்ல; ஆபத்தானதும் கூட. நம்முடைய மனம் புதிதாகிறதினால் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார் (ரோ.12:1-2). வேத வாசிப்பு, ஜெபம், தியானம், ஆராதனை இவைகளினால் நம் மனம் புதிதாகும்போது, அவரின் சித்தத்தை அறிந்து கொள்ளலாம். நமக்குச் சிந்தையைத் தந்திருக்கும் கர்த்தர், நாம் அதை பயன்படுத்த வேண்டும் என விரும்புகிறார். அதாவது, சிந்தித்து செயல்பட வேண்டும். நீதிமொழிகளை வாசியுங்கள். உலக காரியங்களைப் புரிந்துகொள்ளலாம். சிந்திக்க வேண்டும் என கூறும்போது முதலாவது உண்மையை அறியவேண்டும். பின்பு அதை ஆராய்ந்து, சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். பிறகு தேவ ஞானத்திற்காய் ஜெபிக்க வேண்டும் (யாக்.1:5). கர்த்தரின் சித்தத்தை வெறுமனே அறிந்துகொள்வது மட்டுமல்ல, புரிந்துகொள்ளவும் வேண்டும். புரிந்துகொண்டால்தான் செயலில் இறங்க ஏதுவாகும். எனவே, அவரின் சித்தம் அறிந்து நற்செயல் வீரராகுவோம்.

5. கர்த்தர் நமக்கென திட்டம் வைத்திருக்கிறார் (எபே.5:17)

கர்த்தர் நம்மை இரட்சித்திருப்பதினால் தனித்தனியே நமக்கென திட்டம் வைத்திருக்கிறார். அதைக் கண்டறிந்து அதற்கு நேராய் நடக்க வேண்டும். நாம் நற்கிரியைகள் செய்வதற்கென அவர் திட்டங்களை வைத்திருக்கிறார் (எபே.2:10). அது, சமுதாய சேவையாக இருக்கலாம்; மருத்துவ சேவையாக இருக்கலாம்; கல்வி, ராணுவ, அரசியல் சேவையாக இருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் நம்மை அருட்பணிக்காகத் தெரிந்தெடுத்திருக்கலாம். அவருக்குக் கீழ்ப்படிவோமென்றால், நம்மைக்கொண்டு அவர் புதிய சரித்திரம் படைப்பார். கர்த்தர் தம்முடைய திட்டத்தை தமது வார்த்தை மூலமாக வெளிப்படுத்து கிறார் (கொலோ.1:9-10). அவர் நம்மைச் சுற்றி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் (ரோ.8:28, 29). ஆவியானவர் நம்மில் வாசம் செய்வதினால் (கொலோ.3:15-16a), அவர் தமது திட்டத்தை நமக்கு வெளிப்படுத்தி, அதற்கு நேராக நம்மைவழிநடத்தி தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார்.

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவு... சமாதானத்துக்கேதுவான நினைவுகளே."
- எரே.29:11

சென்ற 2022 செப்டம்பர் மாத இதழின் 11 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...


உன்னத திட்டத்தில் நமது பங்கு!

(சுவி. சுசி பிரபாகரதாஸ்)

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே."

– எரேமியா 29:11

அதை நமது *மூத்த ஆவிக்குரிய மனிதர்களிடத்திலோ* அல்லது *ஆவியானவரின் வரங்கள், ஆவியானவரின் செயல்கள் மற்றும் வழிநடத்துதல்கள்* மூலமாக நாம் போகிற பாதை சரிதானா என்பதை அறிந்து கொள்ளலாம். அதன்பின் *சூழ்நிலையைப் பார்க்க* வேண்டும். நாம் செய்வது தேவ திட்டமாக இருந்தால், சூழ்நிலை நமக்குச் சாதகமாக இருக்கும். ஆனால், தேவ திட்டத்தைச் செய்யும் சிலருக்கு சூழ்நிலை எதிர்மறையாகவும் இருக்கும். இஸ்ரவேல் ஜனங்கள் கானானுக்குள் நுழைய முன்னேறிக்கொண்டிருந்தனர். அவர்கள் யோர்தானை நெருங்கியபோது, யோர்தான் கரைபுரண்டோடியது. ஆனால், ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரைத் தொட்டபோது வழி பிறந்தது. எனவே தேவ திட்டத்தைச் செய்ய முற்படும்போது, யோர்தான் போன்ற சூழ்நிலை நேர்ந்தாலும், தேவ வார்த்தைக்கு நாம் கீழ்ப்படியும்போது, எதிர்மறையான சூழ்நிலைகளும் மாறும். பின்பு அத்திட்டத்திற்கான *தேவைகளையும் தேவன் சந்திப்பார்.* "ஒருவனுக்கு தேவன் தமது திட்டத்தைத் தந்தால், அதன் தேவையையும் சந்திப்பார்



மற்றும் அதற்குரிய பாதுகாப்பையும் தருவார்" என்பது ஜார்ஜ் முல்லரின் கூற்று.

தேவ திட்டத்தில் நமது பங்கை நிறைவேற்ற **(i) நாம் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்** (யோனா 3:3). தேவன் கட்டளையிட்ட இடத்திற்குச் செல்ல மறுத்த தீர்க்கனாகிய யோனாவை தேவன் விரட்டிப் பிடித்தார். இதைப்போலவே தேவனுடைய திட்டம் நமக்கும் பலவழிகளில் தெரிவிக்கப்படுகிறது, அறிவிக்கப்படுகிறது, உணர்த்தப்படுகிறது. நாம் அதற்குக் கீழ்ப்படிகின்றோமா? வேதத்திலே பலவிதமான கீழ்ப்படிதல் உள்ளது. 1. பூரண கீழ்ப்படிதல் 2. அரைகுறை கீழ்ப்படிதல் 3. கீழ்ப்படியாமை. ஆனால், ஒரு மனிதனுடைய கீழ்ப்படியாமை எவ்வளவு பெரிய தீயவிளைவுகளை உண்டுபண்ணும் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். எனவே, கீழ்ப்படிதல் மிக அவசியம். **(ii) நாம் பின்னானவைகளை மறக்க வேண்டும் (பிலி.3:13).** நமது கடந்த காலத்தில் இரண்டு காரியங்கள் உண்டு. 1. நம் சாதனைகள் 2. நம் வீழ்ச்சிகள். நாம் நமது சாதனைகளை எண்ணும்போது, நம்மை அறியாமலேயே நமக்குள் பெருமை வந்துவிடுகிறது. வீழ்ச்சிகளை எண்ணும்போது, காயங்கள், மனமடிவுகள், தோல்விகள், வெளியே சொல்லமுடியாத பல அழுத்தங்கள் நம்மை அழுத்துகிறது. ஆனால், நாம் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடிச் செல்லவேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். **(iii) நாம் தியாகத்திலே வளர**

வேண்டும் (பிலி.3:11). அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ண வேண்டும். ஆனால், இந்நாட்களில் 'தியாகம்' என்ற வார்த்தை கிறிஸ்தவ வரலாற்றில் சற்று மறக்கப்பட்டுவிட்டது. ஆண்டவரின் தியாகத்தினாலே சபை உருவானது. ஊழியர்களின் தியாகத்தினாலே இம்மட்டும் சபை நிற்கின்றது. இன்று நம் இயக்கம் இவ்வளவு வளர்ந்து நிற்கிறது என்றால், அது அநேகருடைய தியாகத்தினால் தான். ஆனால் ஆண்டவருடைய தியாகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நமது தியாகங்கள் எல்லாம் ஒன்றுமே இல்லை; யாவும் குப்பையாகவும், அற்பமாகவும் உள்ளது. நாம் தியாகம் பண்ணினால், தேவன் நம்மைக் கனம் பண்ணுவார். ஆதலால், நாம் இன்னும் அதிகமாய் தியாகம் பண்ணவேண்டும். **(iv) நாம் இலக்கை நோக்கி ஓட வேண்டும் (பிலி.3:12,14).** தேவன் எதற்காக நம்மை அழைத்திருக்கிறாரோ, எதற்காக நம்மைப் பிடித்திருக்கிறாரோ, எந்த திட்டத்தை நமது கையில் கொடுத்திருக்கிறாரோ, எந்த பாரத்தை நம் மனதில் விதைத்திருக்கிறாரோ, எந்த காரியத்தைச் செய்ய ஆவியானவர் நம்மைத் தூண்டியிருக்கிறாரோ அந்த இலக்கை நோக்கி நாம் தொடர வேண்டும். அநேகர் இலக்கை நோக்கி ஓடினார்கள்; சிலர் இலக்கை விட்டு விலகிப்போனார்கள். நாம் தேவன் கொடுத்திருக்கும் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றோமா அல்லது இடையிலேயே நின்றுவிட்டோமா? ஆனால், பவுல் இங்கே 'ஆசையாய்த் தொடர்கிறேன்' என்று சொல்லுகிறார். ஒரு சிலர் ஊழியத்தை ஆரம்பிக்கும்போது, ஆசையாய் ஆரம்பிக்கிறார்கள்; பின்பு சில காலம் கழித்து அதைக் கடமையாய் நினைத்துச் செய்கிறார்கள்; பின்னர் அதை விரக்தியுடன் செய்கிறார்கள். நாம் தேவ திட்டத்தை ஆசையாய்தான் தொடர்கின்றோமா என சிந்தித்துப் பார்ப்போம்.

மூன்றாவது, தேவனுடைய உன்னத திட்டத்தில் நமது பங்கைக் கண்டுபிடித்து, அதை நிறைவேற்ற ஆசை கொண்டு, தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழும்போது, நாம் கற்பனை பண்ணமுடியாத அளவுக்கு அநேக மாற்றங்கள், வளர்ச்சிகள், முன்னேற்றங்கள், அற்புதங்கள் நடப்பதைக் காணலாம். வேத வசனம் சொல்லுகிறது – நாம் வேண்டுகிறதற்கும், எண்ணுவதற்கும் அதிகமாக தேவன் செய்கிறார் என்று. மோசே தனக்கான தேவ திட்டத்தை எரியும் முட்செடிகளுக்குள் அறிந்தான். முதலில் 'முடியாது' என்று மறுத்தான்; அதன்பின் கீழ்ப்படிந்தான். அதன் விளைவு, அவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்து நடத்திச் சென்றான். அவனைத் தொடர்ந்து யோசுவாவின் மூலம் இஸ்ரவேலர் கானான் தேசத்தைப் பெற்றுக்கொண்டனர். பவுல் ஆசியாவில் ஊழியம் செய்ய விரும்பும்போது, ஆவியானவர் அவனைத் தடுத்துப்போட்டார். ஆம், சில வேளைகளில் ஆவியானவரே ஊழியங்களைத் தடுத்தும் போடுகிறார். ஏனென்றால், தேவ திட்டம் பவுலுக்கு ஐரோப்பாவில் ஊழியம் செய்வது. எனவே, பவுலின் ஆசியா ஊழியத்தை ஆவியானவர் தடுக்கிறார் (அப்.16:6–7). தேவ ஊழியத்தில் நாம் நமது சொந்த மூளையைக் கொண்டோ அல்லது முயற்சியைக் கொண்டோ செய்யத் திட்டமிட்டால், தேவன் அதைத் தடுத்துப்போடுவார். பவுலை தேவன் தடுத்ததின் விளைவாக, லீதியாள் தொடங்கி அநேகர் அங்கே மனந்திரும்புகிறார்கள். எனவே தேவ திட்டத்தை நம் வாழ்வில் நாம் நன்கறிந்து கீழ்ப்படிந்தால், ஏராளமான நல்விளைவுகளைப் பெறலாம். இப்படியாக நாம் தேவனுடைய மகா உன்னத திட்டத்தை ஏகோபித்துச் செய்யும்போது, நமது வாழ்வில், இயக்கத்தில், தேசத்தில் மற்றும் அறியப்படாத மக்கள் மத்தியில் ஒரு மாபெரும் ஆசீர்வாதமான சரித்திரம் மலரும். அதற்கு தேவன் நமக்கு அநுக்கிரகம் ஈவாராக!



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஜெபப்பிரிவு

தாங்கும் மாநிலங்களுக்கான உபவாச ஜெப நாட்கள்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மாவட்டங்களின் மூலம் தாங்கப்படும் மாநிலங்களுக்காக ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் விசேஷமாக ஜெபிப்பது நாம் அறிந்ததே. குறிப்பாக அக்டோபர் மாதம் முழுவதும் இந்திய மாநிலங்களுக்காக நாம் ஜெபித்து வந்தாலும், மாவட்டங்களிலிருந்து ஜெபவீரர்கள் குழுவாக தாங்கும் மாநிலங்களுக்குப் பணித்தள விஜயம் சென்று அங்குள்ள ஊழியர்களோடு இணைந்து மாநிலத்தின் மீட்புக்காகவும், அங்கு நடைபெறும் ஊழியங்களுக்காகவும் உபவாசித்து ஜெபிப்பது ஓர் சிறப்பு அனுபவ மாகவே இருந்து வந்துள்ளது. இவ்வாண்டிலும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து புறப்பட்டுச் செல்லும் குழுவினருக்காக ஜெபிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் முன்னேற்றப்பணி மாவட்டங்களிலும், ஜெபக்குழுக்களிலும் அக்டோபர் 1 முதல் 31-ம் தேதி வரை தாங்கும் மாநிலத்திற்காகவும், பிற இந்திய மாநிலங்களுக்காகவும் சிறப்பு ஜெப நேரங்களை அனுசரிக்க அன்புடன் வேண்டுகிறோம். மாநிலங்களுக்கான சிறப்பு ஜெபகரிசனைகளைக் கொண்ட அக்டோபர் மாத ஜெபக்கடிதத்தை இதற்காகப் பயன்படுத்தி ஜெபிக்க பட்சமாய் வேண்டுகிறோம்.

தாங்கும் மாநிலங்களுக்கான உபவாச ஜெப விபரங்கள்

வ. எண்	பிராந்திய / முன்னேற்றப் பணி மாவட்ட பெயர்	பொறுப்பாளர்	பணித்தள விஜயத்தின் தேதி	மாநிலம்	ஜெப நாட்கள்
1	ஆவடி	திரு. எபினேசர்	12.09.'22 முதல் 19.09.'22 வரை	ஜார்க்கண்ட்	ஒரு நாள்
2	திண்டுக்கல்	திரு. ஆல்பர்ட் சாமுவேல்	15.09.'22 முதல் 21.09.'22 வரை	ஜார்க்கண்ட்	3 நாட்கள்
3	வேலூர்	திரு. அசரியா ராஜ்குமார்	16.09.'22 முதல் 26.09.'22 வரை	உ.பி. & ம.பி.	ஒரு நாள்
4	மதுரை	திரு. ஐசக் தனசிங்	20.09.'22 முதல் 25.09.'22 வரை	உ.பி.	ஒரு நாள்
5	ராஜபாளையம்	திரு. ஏ. சாம் பால்	23.09.'22 முதல் 29.09.'22 வரை	ஜார்க்கண்ட்	ஒரு நாள்
6	தூத்துக்குடி-தெற்கு	Dr. அருள்ராஜ் டேனியல்	01.09.'22 முதல் 08.10.'22 வரை	உ.பி. & குஜராத்	ஒரு நாள்
7	விருதுநகர் & சிவகாசி	திரு. ஏ. சாம் பால்	04.10.'22 முதல் 10.10.'22 வரை	ஜம்மு & பஞ்சாப்	ஒரு நாள்
8	திருவள்ளூர் மண்டலம்	திரு. திலகர் திரு. லெனின்	05.10.'22 முதல் 10.10.'22 வரை	சத்தீஸ்கட்	ஒரு நாள்

9	வண்ணாரப்பேட்டை	திரு. பிச்சைமணி	07.10.'22 முதல் 12.10.'22 வரை	மஹாராஷ்டிரா & ம.பி.	ஒரு நாள்
10	தென்காசி & நெல்லை - மேற்கு	திரு. ஞான ரத்தினம் திரு. பாண்டியன்	09.10.'22 முதல் 20.10.'22 வரை	அஸோம்	ஒரு நாள்
11	தூத்துக்குடி-வடக்கு	திரு. எட்வர்ட் ராஜதுரை	15.10.'22 முதல் 25.10.'22 வரை	உ.பி. & ஹிமாச்சல்	3 நாட்கள்
12	வேலூர்	திரு. அசரியா ராஜ்குமார்	20.10.'22 முதல் 25.10.'22 வரை	ஜார்க்கண்ட்	ஒரு நாள்
13	ஈரோடு	திரு. ஜான் பெனின்	24.10.'22 முதல் 04.11.'22 வரை	அஸோம்	ஒரு நாள்
14	தஞ்சாவூர் பிராந்தியம்	திரு. பால்ராஜ் ஆபிரகாம்	27.10.'22 முதல் 03.11.'22 வரை	குஜராத்	ஒரு நாள்
15	மதுரை	திரு. ஜசக் தனசிங்	30.10.'22 முதல் 07.11.'22 வரை	ஒடிசா	ஒரு நாள்
16	ஆம்பூர்	திரு. தேவ சுந்தரம்	03.11.'22 முதல் 07.11.'22 வரை	ஜார்க்கண்ட்	ஒரு நாள்

தலைவர்களின் அனுபவ சாட்சிகள்

1. சுமார் 10 முறை ஜார்க்கண்ட் மாநிலத்திற்கும், 4 முறை உத்தரப்பிரதேசத்திற்கும் சென்று உபவாசித்து ஜெபித்திருக்கிறேன். தாங்கும் மாநிலங்களுக்கு நேரடியாக சென்று உபவாசித்து ஊக்கமாய் ஜெபிப்பது சிறப்பான அனுபவம் மட்டுமல்லாது, தேசத்தின் மீட்புக்கும் இது அவசியமானது. அதை தீவிரமாய் நாம் செய்ய வேண்டும்.

திரு. அகஸ்டின் - நெல்லை.

2. 1992-ம் ஆண்டு துவங்கி இதுவரை சுமார் 25 முறைக்கு மேல் இந்தியாவின் பல மாநிலங்களுக்குச் சென்று, உபவாசித்து, ஜெபிக்கும் கிருபையை தேவன் எனக்குத் தந்தார். முதன்முறை 3 நாள் உபவாச ஜெபம் சற்று கடினமானதாக இருந்தாலும், பின்னர் அதுவே நல்ல அனுபவமாக மாறிவிட்டது. இங்கிருந்து ஜெபிப்பதற்கும், பிற மாநிலங்களுக்கு நேரடியாகச் சென்று ஜெபிப்பதற்கும் பெரிய வித்தியாசத்தை உணர்ந்திருக்கிறேன். இவ்வாண்டும் குழுவினரோடு ஜெபிக்கச் செல்லுகிறேன்.

திருமதி. சகுந்தலா டேனியல் - சென்னை.

3. சுமார் 30 முறைக்கு மேல் இந்தியாவின் பல மாநிலங்களுக்கு குழுவினரோடு விஜயம் செய்து உபவாசித்து ஜெபித்திருக்கிறேன். என்னுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்கும், மாநிலங்களைக் குறித்த பாரத்தைப் பெற்று கொள்ளவும் இந்த உபவாச ஜெப நாட்கள் பேருதவியாக இருந்துள்ளது. இது தொடர வேண்டும்.

திரு. ஆர்தர் மேன்யல் - திருவள்ளூர்.

4. நாங்கள் தாங்கும் ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு சுமார் 20 முறை குழுவினரோடு சென்று உபவாசித்து ஜெபித்துள்ளேன். ஒவ்வொரு ஆண்டும் அங்கு நாங்கள் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு தேவன் பதிலளிப்பதை அடுத்தாண்டு விஜயத்தில் அறிந்து அதற்காக தேவனைத் துதித்திருக்கிறோம்.

திரு. மனோகரன் - திருச்சி.

மிஷனெரிகளின் குருத்துவ அருட்பொழிவு ஆராதனை



FMPB மிஷனெரிகளின் குருத்துவ அருட்பொழிவு ஆராதனை தேவ கிருபையால் கடந்த 14.08.2022 அன்று மாலையில் திருச்சி, பிஷப் ஹீபர் கல்லூரி வளாகத்திலுள்ள St. Luke ஆலயத்தில் வைத்து மிகச் சிறப்பாக நடைபெற்றது.

C.S.I. திருச்சி – தஞ்சை திருமண்டலப் பேராயர் பேரருள்திரு. Dr. D. சந்திரசேகரன் அவர்கள் தலைமையில், குருத்துவச் செயலர் அருட்திரு. சுதர்சன், திருமண்டலச் செயலர், பொருளாளர், திருமண்டல கவுன்சில்களின் ஆயர் தலைவர்கள் மற்றும் திருச்சி மாவட்ட FMPB ஸ்கேன் மற்றும் ஜெபக்குழுத்தலைவர்கள், ஆதரவாளர்கள், C.S.I. திருமண்டலத்தின் கல்வி, மருத்துவ நிறுவனங்களின் தலைவர்கள், சபை மக்கள் என ஏராளமானோர் இந்த குருத்துவ அபிஷேக ஆராதனையில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

C.S.I. திருச்சி – தஞ்சை திருமண்டலப் பேராயர் பேரருள்திரு. Dr. D. சந்திரசேகரன் அவர்கள், தேவ பிரசன்னத்தோடு மிக அருமையாக அருட்பொழிவு ஆராதனையை நடத்தி, மிஷனெரிப்பணியின் முக்கியத்துவத்தைக் குறித்து தேவச்செய்தி அளித்தார்கள்.

FMPB–ன் பொதுச்செயலர் அருட்திரு. ஜாண் பெர்லின் மற்றும் தமிழ்நாடு & பாண்டிச்சேரி விரிவுப்பணிச் செயலர் அருட்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

நமது மிஷனெரிகள் திரு. D. மணிமாறன், திரு. R. டேனியல் டேவிட், திரு. J. டேனியல் அருள்மணி மற்றும் திரு. P.T. ஜெயசேகர் ஆகிய 4 பேரும் FMPB குருத்துவ அருட்பொழிவுக்குழு தீர்மானத்தின்படியும், C.S.I. திருச்சி – தஞ்சை திருமண்டலத்தின் செயற்குழு தீர்மானத்தின்படியும் தேவ நாம மகிமைக்கென்று கௌரவ குருத்துவ அருட்பொழிவு செய்யப்பட்டார்கள். மேலும் திருமண்டலத்திலிருந்து 5 பேரும், IMS – லிருந்து ஒருவரும், அரசரடி வேதாகமக் கல்லூரியிலிருந்து ஒருவருமாக மொத்தம் 11 பேர் அருட்பொழிவு பெற்றார்கள்.

பேராயர் பேரருள்திரு. Dr. D. சந்திரசேகரன் அவர்கள், பச்சமலையில் மிஷனெரியாக இருந்தவர்கள். அநேகமுறை நமது பணித்தளங்களுக்கு விஜயம் செய்தவர்கள். இவர் மிகுந்த கரிசனையோடும், சுவிசேஷ நற்செய்திப்பணியின் பாரத்தோடும் நமது மிஷனெரிகளை ஏற்றுக்கொண்டு குருத்துவ அங்கீகாரம் தந்தது, FMPB–க்கும் திருமண்டலத்துக்கும் உள்ள புரிந்து கொள்ளுதலையும், ஊழிய உறவையும் மிகவும் வலுப்படுத்துவதாக இருந்தது.

மிஷனெரிப்பணியும் திருச்சபையும் பிரிக்க முடியாத தேவனின் அமைப்பு. இந்த குருத்துவ அருட்பொழிவின் மூலம் திருச்சி – தஞ்சை திருமண்டல திருச்சபையின் அனைத்து அங்கத்தினர்களோடு மிஷனெரித்தரிசனத்தைப் பகிர்ந்து கொள்ளவும், ஆவிக்குரிய எழுப்புதலுக்கு உதவி செய்யவும் தேவன் கிருபை செய்வாரென்று விசுவாசிக்கிறோம்.

C.S.I. திருச்சி – தஞ்சை திருமண்டலப் பேராயர் பேரருள்திரு. Dr. D. சந்திரசேகரன் அவர்களுக்கும், குருத்துவச் செயலர் Rev. சுதர்சன், திருமண்டலச் செயலர், பொருளாளர், திருமண்டல கவுன்சில்களின் ஆயர் தலைவர்களுக்கும், திருச்சி மாவட்ட FMPB ஸ்கேன் தலைவர் திரு. ஞானதாஸ் அவர்களுக்கும் மற்றும் இந்த குருத்துவ அபிஷேக ஆராதனையில் கலந்து கொண்டு ஆதரவு தந்த C.S.I. நிறுவனங்களின் தலைவர்கள், சபை மக்கள், FMPB ஜெபக்குழுத்தலைவர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– விரிவுப்பணிச் செயலர் – தமிழ்நாடு & பாண்டிச்சேரி.



மகிமைக்குள் பிரவேசித்தார்

சென்னை, தண்டையார்பேட்டை மேற்குப் பகுதியைச் சேர்ந்த திருமதி. சாரா சாம் தீனதயாளன் (வயது-63) அவர்கள், கடந்த 15 வருட காலமாக அப்பகுதியில் நமது FMPB-யின் ஜெபக்குழுத்தலைவியாக இருந்து பணியாற்றியவர்கள். இவர் கடந்த 21.08.2022 ஞாயிற்றுக் கிழமையன்று பகல் 12.30 மணியளவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவருடைய அழகிய அர்ப்பணிப்புள்ள வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது கணவர் மற்றும் 4 பிள்ளைகளின் குடும்பங்களை தேவன்தாமே ஆற்றித்தேற்றி பெலப்படுத்த ஜெபிப்போம்.

பெண்கள் கூடுகை

திருவொற்றியூர்

நாள்: 02.10.2022
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
இடம்: TELC கிறிஸ்து நாதர் ஆலயம், திருவொற்றியூர்.

விசுவாசிகள் மூலம் அற்புதம் செய்யும் கர்த்தர்!

இராஜஸ்தான் மாநிலம், கெர்வாரா பணித்தளத்தில், பகரி கிராமத்தை சேர்ந்த நமது விசுவாசி தினேஷ்பாய் என்பவர், திடீரென இரத்த வாந்தியெடுக்கவே, அவரது குடும்பத்தார், அருகிலுள்ள சக விசுவாசியை அழைத்து ஜெபிக்கக்கூற, என்ன ஆச்சரியம்! தினேஷ்பாய் உடனே பூரண சுக மடைந்தார். இதைப்பார்த்துக் கொண்டிருந்த மற்ற மக்கள் அனைவரும் தேவன்மேல் விசுவாசத்தை வைத்ததால், அப்பகுதியில் நமது ஊழியத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத் திருக்கிறது. அல்லேலூயா!

பெண்கள் கூடுகை

நாகர்கோவில்

நாள்: 01.10.2022
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
இடம்: C.S.I. தேவாலயம், புதுக்குடி.

பெண்கள் கூடுகை

களக்காடு

நாள்: 05.10.2022
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இடம்: C.S.I. கிறிஸ்து ஆலய வளாகம், களக்காடு.

பெண்கள் கூடுகை

இராயப்பேட்டை

நாள்: 01.10.2022
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
இடம்: மெஸ்டன் சிற்றாலயம், வெஸ்லி மேல்நிலைப்பள்ளி.

பெண்கள் கூடுகை

தாம்பரம்

நாள்: 08.10.2022
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 3.30 மணி வரை
இடம்: அட்வென்ட் ஆலயம், செம்பாக்கம்.

பெண்கள் கூடுகை

ஆவுடையானூர்

நாள்: 04.10.2022
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
இடம்: தூய இம்மானுவேல் ஆலயம், ஆவுடையானூர்.

பெண்கள் கூடுகை

ஊரப்பாக்கம்

நாள்: 15.10.2022
நேரம்: மதியம் 2.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
இடம்: ஊரப்பாக்கம்.

பெண்கள் கூடுகை

தண்டையார்பேட்டை

நாள்: 04.10.2022
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
இடம்: C.S.I. கிறிஸ்துநாதர் ஆலயம், தண்டையார்பேட்டை.

பெண்கள் கூடுகை

மார்த்தாண்டம்

நாள்: 24.10.2022
நேரம்: காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
இடம்: சிங்ளேயர் ஹால், மார்த்தாண்டம்.

பெண்கள் கூடுகை

சைதாப்பேட்டை

நாள்: 05.10.2022
நேரம்: காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை
இடம்: தூய தோமா ஆலயம், சைதாப்பேட்டை.

பெண்கள் கூடுகை

பட்டாபிராம்

நாள்: 24.10.2022
இடம்: திருவள்ளூர் மண்டலம், பட்டாபிராம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுசீலா சாமுவேல்
திரு. யுவனேஷ் T.

ஜம்மு

சாம்பா:

டேவிட் அய்யனார் &
மன்பிரீத் கௌர்

துதிக்க: கூத்தா கிராமத்திலிருந்து புதிதாக 2 குடும்பங்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்து வருகின்றனர். தயானி மற்றும் ஜத்வால் ஆகிய கிராமங்களில் புதிய பெண்கள் ஜெபக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. வேதாகம வகுப்புக் குழுக்களுக்கு நமது விசுவாசிகள் கிரமமாக வருவதின் மூலம் தேவ வார்த்தைகளை அவர்கள் நன்குக் கற்றுக்கொண்டு வருகின்றனர். இப்பணித்தள விசுவாசிகள் தங்களது கிராமங்களைச் சார்ந்த பிற மக்களையும் சுவிசேஷம் சென்றடைவதற்காக நமது ஊழியர்களுக்கு உதவி செய்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது ஊழியத்திற்குத் தொந்தரவு தருபவராகவும், தனது கிராமத்தில் ஞாயிறு ஆராதனை நடத்த அனுமதி தராதவராகவும் இருந்து வருகின்ற சுங்வாலி கிராமத்தலைவர் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; எதிர்ப்புகளின் மத்தியில் சுங்வாலி கிராம விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் ஆணித்தரமாக நிலைத்து நிற்க; பல்வேறு வியாதிகளினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற ரீட்டா, லெவிசா, தர்செம் ஆகியோர் முழுசுகம் பெற; ஆலயம் கட்ட நல்லதோர் நிலம் கிடைக்க; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள நட், கம்மா மற்றும் நூனாத் கிராம மக்கள் தங்கள் வாழ்வில் தேவதொடுதலை உணர ஜெபிப்போம்.

பசோலி:

சுர்கார் ரமேஷ்பாய் & கவித்
சுனிதாபேன்; சுபானி & எமி

துதிக்க: புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணைந்துள்ளனர். 14 கிராமங்களிலிருந்து சுவிசேஷ நற்செய்திக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பல ஆண்டுகளாக வயிற்றுப்புற்றுநோயினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்த மக்னு ஜெபத்தின் மூலம் நற்சுகம் பெற்றுள்ளார். திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குப்பின் ராகேஷின் குடும்பத்தில் மழலை பாக்கியம் கிடைத்துள்ளது. அநேக கிராமங்களில் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள், சிறுவர் வேத வகுப்புகள், வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மற்றும் இரவுநேர ஜெபக்கூடுகைகள் நடத்தப்பட்டுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குரு, பாபா வணக்கம் மற்றும் பில்லி சூனிய மாந்திரீகம் போன்றவைகளில் நம்பிக்கை வைத்திருக்கும் மாந்தர்கள் அவைகளிலிருந்து பூரணமாக விடுபட; நமது ஊழியங்களை எதிர்ப்போர் கிறிஸ்துவின் அன்பால் தொடப்படவும், திருச்சபை ஆராதனைகளில் அவர்கள் ஆர்வமுடன் பங்கேற்கவும்; சுவிசேஷத்தினால் புதிகாகச் சந்திக்கப்பட்டு வரும் மஹாசா, ராஜ்புட், பகத், சமார், வால்மீகி, குஜ்ஜார் இனமக்கள் கூட்டங்கள் மற்றும் புலம் பெயர்ந்துள்ள ஜனங்கள் யாவரின் உள்ளங்களிலும் தேவன் இடைபடவும், வருகிற நாட்களில் அவர்கள் யாவரும் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணையவும் ஜெபிப்போம்.

அக்டோபர் 2
ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. வீரேந்திர குமார்
திரு. டேவிட்சன் ராஜாசிங்
திருமதி. சுனிதா வீரேந்திர குமார்
திரு. தேசாய் திலீப்பாய்

ஜம்மு பிராந்தியம்: வசாவே
எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா

துதிக்க: முதல்முறையாக சத்திய வசனம் சுவிசேஷமாக 32 கிராமங்களில் அறிவிக்கப் பட்டுள்ளது. 31 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை யிட்டுள்ளனர். ஜெபத்தின் மூலம் மக்னு வாய்ப்புற்று நோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். புதிய பெண்கள் ஜெபக் குழுக்கள், வேதாகம வகுப்புக்குழுக்கள் யாவும் நமது விசுவாசிகள் தேவ வார்த்தை யில் வளர மிகவும் பிரயோஜனமான விதத்தில் நடைபெற்று வருகின்றன. இம்மாதம் உதம்பூர் பட்டணத்தைச் சார்ந்த சீக்கிய சமூகத்திலிருந்து ஒரு குடும்பமும், மஹாசா சமூகத்திலிருந்து ஒரு குடும்பமும் புதிதாக கிடைத்துள்ளனர். மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஜக்ஜித் சிங்கிற்காக 3 நாட்கள் சிறப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டு, அவர் முழு சுகம் பெற்றதினால் தற்போது அவருடைய முழுக்குடும்பமும் இயேசுகிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்து வருகின்றனர். கல்லீரல் நோய்த்தொற்றிலிருந்து பூஜா சுகமடைந் துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சத்தியத்தைக் கேட்டிருக்கும் ஜனங்கள் உண்மையான தேவன் யாரென்று கண்டறியவும் அவரை ஏற்றுக்கொள்ளவும்; இப்பணித்தள கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பவும் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளவும்; சுங்வாலி மற்றும் பொங்வால் கிராமங்களில் இருக்கும் பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் யாவரும் விசுவாச வாழ்விற்குள் மீண்டும் அடியெடுத்து வைக்க; சுங்வாலி மற்றும் ரெடியான் கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவதற்கான நிலங்கள் கிடைக்க; லெவிசா பக்கவாதத்திலிருந்தும், தர்செம் கல்லீரல் நோய்த்தொற்றிலிருந்தும், 9 வயது சிறுமி மோனிகா கௌர் அதிக நீரிழிவு நோயின் தாக்கத்தால் ஒருநாளுக்கு 4 முறை இன்சுலின் மருந்தெடுக்கும் நிலையிலிருந்தும் சுகமடைய; புதிதாக நமது ஊழியத்தைப் பல்வேறு கோணங்களில் எதிர்க்க தொடங்கியிருக்கும் உள்ளூர் கிராம கமிட்டி அங்கத்தினர்கள், ஆர்.எஸ். புரா கிராமத்தலைவர்கள் மற்றும் நௌஷேரா பகுதி செர்மாக்டி கிராம பஞ்சாயத்து தலைவர்கள் யாவரும் மனம் மாற ஜெபிப்போம்.

ஜெபம் ஏற்படுத்திய மாற்றம்!

ஆந்திரப் பிரதேசம், சில்லமத்தூர் பணித்தளம். மொருபள்ளி கிராமத்தைச் சேர்ந்த மகேஷ் பாபு குடிப்பழக்கமும், சூதாட்டப்பழக்கமும் உடையவர். தினமும் குடித்துவிட்டு, தனது பெற்றோர்களுடனும் பிற மக்களுடனும் சண்டையிடுவதே இவருடைய வழக்கம். இதனால் சில வேளைகளில் இவர் காவல்துறையினரால் கைது செய்யப்படுவதும் உண்டு. இவரது இத்தகைய செயல்பாடுகளினால் இவரது பெற்றோர்கள் மனமுடைந்து தற்கொலைக்கு முயற்சித்தனர். அந்நேரத்தில் இவர்களது நண்பரும் நமது விசுவாசிகளில் ஒருவருமான லக்ஷ்மி நரசம்மா இவர்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை எடுத்துக்கூறி இவர்களுக்காக ஜெபித்தார். பின்பு முழு திருச்சபையினரும் இவர்களுக்காக ஜெபித்தனர். மகேஷ் பாபுக்கும் தகுந்த ஆலோசனை கொடுக்கப்பட்டது. தற்போது மகேஷின் வாழ்க்கையில் நல்மாற்றம் ஏற்பட்டு, இவர் இயேசுவின் விசுவாசியாக மாறியுள்ளார். இவரது மாற்றம் அவரது கிராம மக்களின் மனங்களை அசைத்துள்ளது. அல்லேலூயா!

அக்டோபர் 3
திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராபின்சன் ஹஸ்தக்

ஹிமாச்சலப் பிரதேசம்

ரிகாங்பியோ:

பப்லு பரசேத் & கல்பனா மாலிக்;
சங்கர் A. & ரூத் மேரி

துதிக்க: சுவிசேஷம் 20 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக இருவர் கிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 25 புதிய ஏற்பாடுகளும், ஒரு வேதாகமமும் மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. நமது ஜீப் குழு ஊழியம் மூலம் சுவிசேஷம் வேகமாகப் பரவி வருகிறது. வாலிபர் முகாம், சிறுவர்கள் முகாம், 19 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள், 59 இடங்களில் பின்தொடர்பணி ஊழியங்கள் நடைபெற்றுள்ளன. நீண்டக்கால ஜெபத்திற்குப்பின் ரூபா பள்ளத்தாக்கு கிராமத்தில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் கிடைத்துள்ளது. பிசாசு மற்றும் வலிப்பு நோயின் பிடிகளிலிருந்து ஜியாங் பூரண விடுதலை பெற்றுள்ளார். பிற இன மக்கள் கூட்டங்களாகிய சமார், ராஜ்புட், சோனார் மற்றும் நேபாளி ஆகியோர் இயேசு நற்செய்தியை விருப்பமுடன் கேட்டு வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பூர்பானி, அக்பா, ஜியாவங், ரல்லி ஆகிய புதிய கிராமங்களில் வாழும் மக்கள் இயேசுவைத் தங்கள் வாழ்வில் பெற்றிட; ஜியாவங் மற்றும் ரூபா கிராமங்களில் ஆராதனைக்குழுவொன்று புதிதாக உருவாக்கப்பட; அதிக எண்ணிக்கையில் கின்னூர் மேற்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் பௌத்தர்கள், சமார், சோனார், ராஜ்புட், நேபாளி ஆகிய இனமக்களைச் சுவிசேஷத்தினால் சந்திப்பதற்கு திரளான மக்களுதவிகள் கிடைத்திட; குளிர்காலத்திற்கு முன் சந்திக்கப்பட வேண்டிய ஆத்தும இலக்கை ஜெபத்துடன் எட்டிட தேவன் தமது கிருபையை நமது ஊழியர்களுக்கு அளவில்லாமல் காட்டிட; கடினமான சாலைப்பகுதிகளை உள்ளடக்கியுள்ள மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளில் ஜீப்பில் சென்று ஊழியம் செய்யும் போது, ஜீப் டிரைவர் மற்றும் அதன் ஊழியக்குழுவினர்களுக்கு பாதுகாப்பான பிரயாணம் வாய்க்க ஜெபிப்போம்.

உதவியதால் கிடைத்தது என்ன?

ஹிமாச்சலப் பிரதேசம், ராம்பூர் பணித்தளம். நமது சுதேச ஊழியரொருவர் முற்பகுதியில் சிலுவை அடையாளம் கொண்ட தனது இருசக்கர வாகனத்தில் நிமுண்ட் என்ற பகுதியில் ஓர் ஜெபக்கூட்டம் நடத்த சென்று கொண்டிருந்தார். மங்கலான வெளிச்சம் வீசிக்கொண்டிருந்த அப்பாதையில் இருவர் திடீரென இவரை நிறுத்தி, தங்களை வாகனத்தில் ஏற்றிச்செல்லுமாறு உதவி கேட்டனர். இருசக்கர வாகனத்தில் மூவர் செல்வது சட்ட விரோத செயல் என்பதாலும், தனக்கு வண்டி ஓட்டுவதில் சரியான அனுபவமில்லை என்பதாலும் இவர் அவர்களை ஏற்ற மறுத்தார். ஆயினும், அவர்கள் தொடர்ந்து தொல்லை கொடுத்ததால், அவர்களை ஏற்றிக்கொண்டார். செல்லும்வழியில் அவர்கள் இவர் செய்யும் வேலையைக் குறித்து விசாரித்தனர். இவர் அவர்களுக்குத் தன்னை ஒரு போதகர் என கூறினார். இவ்வாறு ஜெபக்கூட்டம் நடத்த வேண்டிய நிமுண்ட் என்ற இடத்திற்கு அவர்கள் வந்துச்சேர்ந்ததும், அவ்விடத்திலிருந்து மேலும் 1 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் தங்களைக் கொண்டுபோய் விடுமாறு கோரினர். பின்பு அவர்கள் தங்களை கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டதோடு, ஊழியர் தங்களைக் கண்டு பயப்படவேண்டாமென்றும், செய்யும் ஊழிய நற்செயலை கவனமாய் செய்யும்படியும், ஏதாவது பிரச்சனைகளைச் சந்தித்தால் தங்களை நாடும்படியும் கூறிச் சென்றுள்ளனர். எதிரிகளாயினும் அவர்களுக்கு நமது ஊழியர் இயேசுவின் அன்பை முன்னிட்டு உதவியதின் பொருட்டு, அவர்கள் நமக்கு உதவ விரும்பும் நண்பர்களாயினர். அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. தனேதி உத்தமஸ்ரீ இஸ்ரேல்

ராம்பூர்: தெளஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

துதிக்க: புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். 5 வேதாகமங்களும், 15 புதிய ஏற்பாடுகளும் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியில் நமது விசுவாசிகளை ஈடுபாடு கொள்ளச்செய்ய ஆத்துமஆதாயப் பயிற்சியொன்று சிறப்பாக அவர்களுக்கு நடத்தப்பட்டுள்ளது. நமது சுதேச ஊழியரொருவர் தனது இருசக்கர வாகனத்தில் செல்லும்போது, மினி லாரியொன்று அவர் வாகனத்தின் மீது இடித்த விபத்தில் அவர் சிற்சில காயங்களுடன் உயிர்தப்பியுள்ளார். தனது வீட்டிற்கு முன்புறத்திலிருக்கும் தன்னுடைய மாமரத்தோட்டத்திற்குச் செல்லும்போது ஏதேச்சையாக குறுக்கே வந்த கரடியிடமிருந்து தேவன் காஞ்சியை அற்புதமாகக் காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்பணித்தளத்திற்கான ஆத்தும ஆதாய இலக்குகளை ஆத்துமபாரத்துடன் அடைந்திட எடுக்கும் முயற்சிகள் யாவும் வாய்க்க; தியோதி, நாங்ரி, குக்கி, பாஜிபுல் பகுதிகளில் ஆராதனைக் குழுக்களை தேவன் எழுப்பித்தர; சுனிலின் வேலைக் காரியம் நிரந்தரமாக்கப்பட; நமது விசுவாசிகள் தங்களில் ஒருவரையொருவர் அன்பினால் ஏற்றுக்கொள்ளவும், தங்கள் வீடுகளில் ஒருவர்மீது ஒருவருக்கிருக்கும் குறைகளைச் சரிசெய்து கொள்ளவும்; சுயேட்சை போதகர்கள் நமது ஊழியங்களில் இடைஞ்சல் செய்யாமலிருக்கவும், நமது விசுவாசிகளை அவர்கள் குழப்பத்திற்கு உட்படுத்தாமலிருக்கவும்; நமது புதிய தொடர்பாளர்கள் 28 பேர் தேவன்மீது விசுவாசம் மற்றும் தேவனைக் குறித்து அறிகிற அறிவில் வளர்ந்துப் பெருக; தேவ ஊழியர்கள் மத்தியில் ஆவியின் ஒருமைப்பாடு காணப்பட ஜெபிப்போம்.

ஜியோரி: ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்

துதிக்க: நடத்தப்பட்ட உபவாச ஜெபக் கூடுகையில் அநேக மக்கள் பங்குப் பெற்றுள்ளனர். சரிதா சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். ஒருவருடம் கழித்து மனிஷா குழந்தை பாக்கியம் அடைந்துள்ளார். நமது ஊழியர்களுக்கு தேவன் நல்ல சுகத்தையும், போக்குவரத்து பாதுகாப்பையும் தந்து வழிநடத்தி வருகிறார். இப்பகுதியைச் சார்ந்த எல்லா கிராமங்களிலும் நடைபெற்ற கூடுகைகளுக்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டுவரும் நமது விசுவாசிகளின் குடும்ப நபர்கள் மனமாற்றம் பெற; ஹர்ஷ், விஜய்ரானா, சிவகுமார், கிருஷ்ணன், விதார் நிர்துஷ், பசுல், சுரேந்தர் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; நமது விசுவாசிகளிடையே காணப்படும் நீதிமன்ற வழக்குகளில் அவர்களுக்கு நற்தீர்வு கிடைக்க; வருகிற மாதத்தில் கிறிஸ்துவின் மந்தையில் இணையவிருக்கின்ற புதிய விசுவாசிகளுக்காக; இப்பகுதி திருச்சபையில் காணப்படும் 4 கர்ப்பிணி பெண்களுக்கு தேவன் சுகப்பிரசவத்தைத் தர; திருச்சபையில் இருக்கும் வியாதியஸ்தர்கள் விரைவில் சுகம் பெற; மூச்சுத்திணறலினால் கஷ்டப்படும் ஒரு குழந்தைக்கு நல்ல சுகம் கிடைக்க; சனுரூ மற்றும் கீதா தலைவலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

அக்டோபர் 5
புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

செல்வி. ராக்கி மார்த்தி

பஞ்சாப்

மால்வா:

வால்வி நேதாஜி டாடு & கல்பனா

துதிக்க: புதிதாக 50 கிராமங்களில் தேவ வார்த்தைகள் பகரப்பட்டுள்ளன. 5 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். திவானிவாலில் வைத்து நடத்தப்பட்ட இரவு ஆவிக்குரிய கூட்டத்தில் ஏறத்தாழ 500 மக்கள் கலந்துகொண்டு சத்தியத்தைக் கேட்டுள்ளனர். கமல்ஜீத் தைராய்டு பிரச்சனையிலிருந்தும், சுஜிபாய் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற்றுள்ளனர். அதிக இரத்தழுத்தத்தினால் உண்டான அபாயகரமான சூழ்நிலையின் மத்தியிலும் ரட்சணா சுகமாக இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுக்க தேவன் கிருபை பாராட்டியுள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: அதிக இரத்தழுத்தக் கோளாறி லிருந்து தீட்டாவும், சுக்விதாரும் சுகமடைய; திருமணமாகி 9 வருடங்களாகியுள்ள புஷ்பாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; கணவனை இழந்த துக்கத்தினால் தூங்க இயலாமல் கஷ்டப்படும் ருக்மாவிற்கு தேவன் மனஆறுதலை ஈந்து நல்ல நித்திரையைத் தர ஜெபிப்போம்.

ஜைத்தோ: சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா

துதிக்க: புதிதாக 10 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். கரம்ஜீத் கௌர், நவ்ஜீயோத் கௌர், பூஜா கௌர், ஆகாஷ்தீப் சிங் மற்றும் தரம்பிரீத் சிங் பிசாசின் பிடியிலியிருந்து விடுபட்டுள்ளனர். தரம்பிரீத் சிங், ஆகாஷ்தீப் சிங், மந்தாரா சிங், குல்தீப் சிங் மற்றும் சத்பால் சிங் குடி மற்றும் போதைப்பொருட்கள் பழக்கத்தி லிருந்து விடுதலை பெற்றுள்ளனர். சன்வான் கிராமத்தில் வாழும் மஜ்பீ சீக்கியர்கள் மத்தி யில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வந்தர் கிராமத்தில் ஒரு ஆராதனைக்குழு துவங்கப்பட; சுர்ஜித் கௌர், மஞ்சுதேவ் நெஞ்சுவலியிலிருந்தும், பிங்கி கௌர் பித்தப்பை கல்பிரச்சனையிலிருந்தும், குர்பிரீத் சிங் வலிப்பு நோயிலிருந்தும் சுகமடைய; அம்பேத்கார் நகரைச் சார்ந்த பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; ஜைத்தோ மற்றும் பஸகன்னா ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணிக்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

வாழ்க்கைத்துணையின் இரகசியம்!

ராஜஸ்தான், காஜுவாலா பணித்தளத்தைச் சார்ந்த நமது விசுவாசி விகாஸ் டி.வி.எஸ். கம்பெனி வைத்து நடத்தி வருபவர். இவர் மிகுந்த பெலவீனரானபடியால், அடிக்கடி வியாதிக்குட்படுவார். கடந்த 4 மாதங்களாக இவர் முதுகு வலி, இருதய வீக்கம், கல்லீரல் பிரச்சனை மற்றும் பல பிரச்சனைகளினால் பெரும் அவதிப்பட்டு வந்தார். இவருடைய மனைவி மாதுரி கிறிஸ்துவை உறுதி யாக நம்பும் ஓர் விசுவாசி. இவர் தன் வாழ்வில் எப்பிரச்சனையைச் சந்தித்தாலும் அப்பிரச்சனையை கர்த்தரின் சமூகத்தில் ஊற்றிவிடுவார். அதுபோல் இவர் தன் கணவருக்காக ஜெபித்த ஜெபத்தை தேவன் கனப்படுத்தி, இவரது கணவருடைய வாழ்வை மீட்டுக்கொடுத்துள்ளார். விசுவாசி விகாஸ் மருந்துகள் அதிகம் எடுத்துவரும் நிலையிலும் தனது மனைவியின் ஜெபத்தினால் இன்றும் உயிர்ப்பிழைத்திருக்கிறார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

அக்டோபர் 6
வியாழன்

ஹரியானா

தோஷம்: ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்

துதிக்க: சுவிசேஷம் 2 கிராமங்களில் புதிதாகப் பகரப்பட்டுள்ளது. 4 மாத காலங்களாக தங்கள் வீட்டில் குடிகொண்டிருந்த விஷப்பாம்பிடமிருந்து பைரன் மற்றும் அவரது குடும்பத்தாரை தேவன் அற்புதமாகக் காப்பாற்றியுள்ளார். நமது விசுவாசி ஹரிவான்ஷின் ஜெபத்தைக்கேட்டு, அவரது பக்கத்து வீட்டு நபரைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் உடனடியாக விடுவித்துள்ளார். நமது ஞாயிறு ஆராதனையைத் தடுத்து நிறுத்தும் வண்ணமாக நமது ஊழியர்களை மிரட்டி வந்த சுவிசேஷ எதிர்ப்பாளர்களுக்கு விரோதமாக ஞாயிறு ஆராதனை நடத்த நமக்கு இடமளித்துள்ள உரிமையாளரையே தேவன் எழுப்பி, அவர் மூலம் எதிர்ப்பாளர்கள் எச்சரிக்கப்படவும், நமது ஊழியர்கள் மீண்டும் அதே இடத்தில் ஞாயிறு ஆராதனையைத் தொடர்ந்து நடத்தவும் கிருபை அளித்துள்ளார். கட்டாய மதமாற்றம் என்று தவறான குற்றத்தைச் சுமத்தி ஒரு சுயேட்சை போதகரைக் கைது செய்திருக்கும் சூழ்நிலையில், நமது ஊழியர்களையும் விசுவாசிகளையும் எவ்வித பாதிப்புமின்றி தேவன் காப்பாற்றி வருகின்றதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: பல கடினமான சூழ்நிலைகளிலும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசப் பரீட்சையில் தோல்வியுராமல் ஜெயிக்க; ஜிந்த் இனமக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கான வாசல் திறக்கப்படவும், அவர்களிடையே ஊழியம் நன்கு செழித்தோங்கவும்; புதிய தொடர் பாளர்களிடையே மிகுந்த ஞானமாய் நமது ஊழியர்கள் சுவிசேஷத்தை எடுத்தியம்ப – ஏனெனில், அப்புதிய தொடர்பாளர்களை நமது ஊழியர்களுக்கு எதிராக திசைதிருப்ப காத்திருக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் தீய நோக்கங்களுக்கு அத்தொடர்பாளர்கள் இரையாகாமலிருக்கவும், நமது ஊழியர்கள் எதிர்ப்பாளர்களின் கைகளில் சிக்கிக் கொள்ளாமலிருக்கவும் ஜெபிப்போம்.

உத்தராகண்ட்

நானக்மட்டா:

சிவகுமார் & சுசிலா மராக்

துதிக்க: புதிதாக 6 கிராமங்களில் தேவ வார்த்தை நற்செய்தியாகப் பிரசங்கிக்கப் பட்டுள்ளது. 25 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 8 இடங்களில் சத்சங் கூடுகைகளும், 4 இடங்களில் உபவாச ஜெபக்கூடுகைகளும், 3 இடங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்களும், 7 இடங்களில் வீட்டு ஜெபக்கூட்டங்களும் சிறப்பாக நடைபெற்றுள்ளன. பல்ஜீத் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். சல்வீந்தர் சிங்கிற்காக அவரது குடும்பம் உபவாசித்து ஜெபித்த போது, அவர் அதிகபட்ச நீரிழிவு நோயி லிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீய ஆவியின் பிடியிலிருந்து ராஜு கௌர் விடுபட; கோழி வியாபாரத்தில் தன்னுடைய மேலாளரால் ஏமாற்றப் பட்டுள்ள ரிங்குவிற்கு தீர்மானிக்கப்பட்ட பணம் வந்து கிடைக்க; குடிப்பழக்கத்தி லிருந்து அம்ரித் சிங் விடுபட; குடும்பப் பிரச்சனையினால் விஷம் அருந்திவிட்ட பிட்டு சிங்கின் தொண்டைப்பகுதியிலும், வயிற்றுப்பகுதியிலும் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் குணமாக ஜெபிப்போம்.

அக்டோபர் 7
வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. விஜய் பிரசன்னா ஜசக்
திருமதி. சரோஜினி நர்சாரி

பஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

துதிக்க: கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை 3 பேர் அறிக்கை செய்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சத்தியவசனம் அறிவிக்கப் பட்டுள்ளது. ரோகித் இரத்தப்புற்றுநோயி லிருந்து சுகமடைந்துள்ளார். ராஜு மற்றும் மம்தாவின் கணவர் குடிப்பழக்கத்தி லிருந்து விடுபட்டு, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர். பிரகாஷின் குடும்பம் ஜெபத்தின் மூலம் மாந்திரீக கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. வீட்டின் மேற் கூரையிலிருந்து தவறி விழுந்தபோதும், சாலை விபத்து நேரத்திலும் தேவன் சுந்தர் லாலின் உயிரைப் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இவ்வருட இறுதிக்குள் 100 விசுவாசிகளைக் கண்டெடுக்கும் இலக்கை நமது ஊழியர்கள் அடைய; 11 முறை கருசிதைவுகள் அடைந்து இம்முறை மீண்டும் கருவுற்றிருக்கும் அனிதாவிற்கு ஆரோக்கிய மான குழந்தை சுகப்பிரசவத்தில் பிறக்க; சிறுநீர் கலவை பிரிப்பு சிகிச்சையை மேற்கொண்டுவரும் ராகேஷ் பூரண சுகமடைய; தீய ஆவியின் பிடியிலிருந்து மீனாவும், குடிப்பழக்கத்திலிருந்து எந்திர குமாரும் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

ராஜஸ்தான்

அனுப்கார்: பவுலஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ

துதிக்க: புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 13 வேதாகம வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. பித்தப்பை நீக்கம் அறுவை சிகிச்சை பெலவீனத்திலிருந்து விந்தர் கௌரையும், கருப்பை நார்த்திசுக்கட்டி நீக்கம் அறுவை சிகிச்சை பெலவீனத்திலிருந்து கஸ்தூரி யையும் தேவன் பெலப்படுத்தியுள்ளார். கை மற்றும் மார்புப்பகுதிகளில் கொழுப்புக்கட்டி புற்றுநோயினால் அவதிப்பட்டு வந்த ஜுப்பா கௌர் பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆலயம் கட்டுவதற்கேற்ற தகுந்த நிலமொன்று கிடைக்க; கிருஷ்ணா கௌர் இரத்தணு தொற்றுநோயிலிருந்தும், பரம்ஜீத் கௌர் கருப்பை நார்த்திசுக்கட்டி பிரச்சனையிலிருந்தும் முழு சுகமடைய; பிரேம் நகர் பகுதி விசுவாசிகள் கிறிஸ்துவில் நன்கு வளர; 4 LSM கிராம விசுவாசிகள் ஆலய ஆராதனைகளில் கிரமமாகப் பங்கெடுக்க ஜெபிப்போம்.

ஹனுமான்கட்:
ராஜு நாயக் & ஜான்சிபாய்

துதிக்க: தேவ வார்த்தை 2 கிராமங்களில் முதல்முறையாகப் பகரப்பட்டுள்ளது. சத்சங் கூடுகையில் 185 ராய் சீக்கியர்கள் கலந்து கொண் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். வேறொரு முறை நடத்தப்பட்ட சத்சங் கூடுகையில் அதிகமான எண்ணிக்கையில் சுரேஷ் அரோரா மற்றும் பவாரி சீக்கியர்கள் பங்கேற்று பயன்பெற்றுள்ளனர். வீட்டை விட்டு வெளியில் செல்லும்போது ஜெபித்து விட்டுச் சென்றதின் விளைவாக இரவுநேரத்தில் ஒரு பசுமாட்டின் மூலமாக ஏற்பட இருந்த விபத்திலிருந்து தேவன் மல்கேத் சிங்கை காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: மஜ்பீ, ஜாட் மற்றும் ராய் இன சீக்கியர்கள் கூட்டங்கூட்டமாக இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்க; கல்லீரல் தொற்றிலிருந்து அபிஷேக் பூரண குண மடைய; மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் பல்வீர் சிங், ரேணு கௌர் மற்றும் ரஜனி கௌர் ஆரோக்கியமான உடல்நிலையை அடைய ஜெபிப்போம்.

அக்டோபர் 8
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பால் பியர்சன் பிரின்ஸ் J.

கைர்த்தல்:

செல்வராஜ் & செல்வம்மாள்

துதிக்க: மெர்காபஸ்ஸி மற்றும் தீட்டா சபைகளின் மூப்பர்கள் ஆராதனையை முன்நின்று நடத்த பெரிதும் வாஞ்சை காட்டுகின்றனர். எதிர்ப்பினிமித்தம் பின்வாங்கிப்போயிருந்த நமது அநேக விசுவாசிகள் மீண்டும் ஆலய ஆராதனைகளுக்கு வர ஆரம்பித்துள்ளனர். நட் இன மக்கள் வாழும் மேலும் பல கிராமங்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துக் கூற தேவன் வழிநடத்தி வருகிறதோடு, அம்மக்கள் சுவிசேஷத்திற்கு செவி சாய்க்கவும் கிருபையளித்து வருகிறார். காசோலி கிராமத்திலிருந்து 3 குடும்பங்கள் புதிதாக கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். நட் இனத்தார் தவிர ஜாத்வே என்ற வேறொரு இனமக்களைக் கண்டெடுக்க தயவு காண்பித்துள்ள தேவன், அம்மக்கள் கூட்டத்திலிருந்து சரியான நற்தொடர்பாளர்களை நாம் கண்டெடுக்கவும் கிருபை காண்பிக்கப் போகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தங்களது சொந்த இன மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்த மிகுந்த ஆவல்காட்டும் பிரேம்சிங் மற்றும் அவரது குடும்பத்தாரை தேவன் அவரது சித்தப்படி நடத்த; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் தங்களது பிள்ளைகளுக்குத் தகுந்த வாழ்க்கைத்துணைகள் கிடைப்பதில் சிக்கல் வரும் என்ற தவறான சிந்தையோடு காணப்படும் நமது விசுவாசிகள் அந்த மனநிலையை மாற்றிக்கொள்ள; இரவு ஜெபக்கூட்டங்களில் பங்கெடுப்பதில் இருக்கும் பல சமுதாயத் தடைகளை ஷாசி இனமக்கள் மேற்கொள்ளவும், அவர்களில் போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் சிலர் அதிலிருந்து மீட்கப்படவும்; காசோலி கிராம சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் கிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

காஜுவாலா:

V. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

துதிக்க: புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். 2 கிராமங்களில் புதிதாக விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 4 குடும்பத்தினர்கள் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டி வருகின்றனர். 6 சிறுவர் கூடுகைகளும், 10 தனித்தாள் ஊழியங்களும், 7 கிராமங்களில் பின்தொடர்பணிகளும், 7 சுவிசேஷக்கூடுகைகளும் நடத்தப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டுகின்ற 4 குடும்பத்தினரும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை துணிவுடன் அறிக்கையிட; மிதுன் சிங் பிசாசு பிடியிலிருந்து விடுபட; இனந்தெரியாத நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஹீராபாயையும், மனவளர்ச்சியின்மையினால் பாதிக்கப்பட்டிருக்கும் சுக்பிரீத்தையும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

அக்டோபர் 9
ஞாயிறு

அஜீத்கார்:
ஜெய்பீர் சிங் & தேவி ராணி

துதிக்க: சுவிசேஷ நற்செய்தி 3 கிராமங்களில் புதிதாகப் பறைசாற்றப்பட்டுள்ளன. 100 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தீய ஆவியின் பிடிகளிலிருந்து அனிதாவும், பிங்கியும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அனந்த்புரியா கிராமத்தில் சத்சங் கூடுகை நடைபெற்றுள்ளது. முகத்தில் ஏற்பட்டுள்ள ஊரலினால் தோல் கருக்கும் பிரச்சனையிலிருந்து கரணும், இரத்த அளவு குறைவு பிரச்சனையிலிருந்து லதாவும் சுகமடைந்துள்ளனர். நமது இளம் விசுவாசிகள் ஜெபத்தின் வல்லமைக்கான இரகசியத்தை தங்களது ஆவிக்குரிய வாழ்வில் அனுபவித்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மனோஜ் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும், நல்லதொரு வேலையைப் பெற்றுக்கொள்ளவும்; கள்ளத்தொடர்பான உறவில் இருக்கும் சீமாவின் கணவர் அத்தீயப்பழக்கத்திலிருந்து விடுபட்டு, அவர்தம் மனைவியுடன் இணைந்து வாழ; கஸ்தூரியின் கணவர் ராஜு குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; 20 வயது வாலிபனான பவன் தெளிவாகப் பேசுந்திறனைப் பெற்றிட ஜெபிப்போம்.

உத்தரப் பிரதேசம்

கைம்கஞ்ச்:
எபநேசர் G. சாம் & ஜெபராணி

துதிக்க: லஜோரி கிராமத்தில் விசுவாசிகள் பயிற்சிக்கூடுகை நடத்தப்பட்டுள்ளது. விளைநிலங்களில் விதை விதைப்பிற்குப்பின் நல்ல மழை பெய்துள்ளது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியிலிருந்து பணித்தள விஜயம் மேற்கொண்டவர்களிடம் பணித்தள சாட்சிகளும், பணித்தள ஆத்தும அறுவடை தேவைகளும் தெளிவாகப் பகரப்பட்டுள்ளன. கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் குடும்பத்தினரால் உண்டாகும் உபத்திரவங்களில் நேகா தனது விசுவாசத்தில் உறுதியாக நிற்கிறார். பிரித்வி தர்வாஜா பகுதியைச் சார்ந்த நமது வாலிப விசுவாசியான ரித்திக் தனது ITI படிப்பை முடித்து விட்டு, நல்ல நிறுவனமொன்றில் வேலையில் அமர்ந்துள்ளார். பிரித்வி தர்வாஜா பகுதி சிறுவர்கள் வேத வசனங்களைக் கற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அலிகன்ஜ் கிராம நமது விசுவாசியான சசி கர்ப்பப்பை கட்டி பிரச்சனையிலிருந்தும், அவரது கணவர் சர்மோன் இரத்த தொற்றுநோய்க் கோளாறிலிருந்தும் சுகமடைய; லஜோரி கிராம கர்ப்பிணி பெண்ணான வந்தனா தனது சரீர பெலவீனத்திலிருந்து முற்றிலுமாய் குணமாக; காதில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள இருக்கும் சிலக்கா கிராம ஹன்ஸிற்கு நல்ல முறையில் சிகிச்சை முடிந்து, அவர் நன்கு கேட்குந்திறனைப் பெற்றுக்கொள்ள; பிசாசு பிடியிலிருந்து விடுதலையைப் பெற்றிருக்கும் கம்பிள் கிராம ஊர்மிளா மற்றும் அவரது மகன் குடும்பத்தார் யாவரும் தைரியமாக கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் வந்து இணைய; ஜயாபூர் கிராம 1 1/2 வயது சிறுவன் நிர்பாயிற்கு காலில் ஏற்பட்டுள்ள தீக்காயம் முற்றிலுமாக ஆறிட ஜெபிப்போம்.

அக்டோபர் 10
திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சித்ரா பொன்னுசாமி
திரு. ஹரிபாபு குந்த்ரா
திரு. சாந்து மராண்டி

ஜின்ஜக்:

சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

துதிக்க: இயேசுவின் நற்செய்தி 6 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப் பட்டுள்ளது. 10 நபர்கள் புதிதாக தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். பின்தொடர்பணி 30 கிராமங்களில் சிறப்பாக நடை பெற்றுள்ளது. சமார் மற்றும் பஞ்ஜாரா இனமக்கள் சுவிசேஷத்தின் மீது அக்கறை காண்பிக்கின்றனர். ராஜ்புட் மக்களினத்தி லிருந்து ஒரு விசுவாசி இயேசுவைத் தனது இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தன் வாழ்வில் சமாதானத்தை அடைந்தபடியால், அவர் தனது முழுக்குடும்பத்தாரையும் கூடி வரச் செய்து, சுவிசேஷத்தை அவர்களும் கேட்கும்படி செய்துள்ளார். பத்வால் திருச்சபையில் போடப்பட்டிருக்கும் ஆழ்துளைக்கிணற்று வசதியினால் தேராபூர் கிராமமே ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. தோய்கி பகுதியில் ஆலயம் கட்ட நல்லதொரு நிலம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அநேக கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதைக் காதார கேட்டி ருக்கும் மக்கள் அதற்குச் செவிசாய்க்க; மனநோயிலிருந்து நீலம் சுகம் பெற; முபாரக்பூர் மற்றும் பாபன்பூர் கிராம நமது விசுவாசிகள் தங்களது பின்மாற்றத்தி லிருந்து மீண்டு, கிறிஸ்துவை மீண்டும் விசுவாசிக்கத் தொடங்க; இவ்வருட நிதி யாண்டின் இறுதிக்குள் 200 ஆத்துமாக் களைக் கிறிஸ்துவுக்காகக் கண்டெடுக்க ஜெபிப்போம்.

தேசிய மிஷனெரிப்பயிற்சி மையம்:

N. ராஜதுரை & பிரேமா

துதிக்க: தற்போது மிஷனெரிப் பயிற்சிப் பெற்றுவரும் 14 பேருக்கு சுவிசேஷப்பணி, திருச்சபை நாட்டுதல் மற்றும் கலாச்சாரம் கடந்த பின்னணியப்பணி, சபை ஆவிக் குரிய வளர்ப்புப்பணி, மற்றும் அடிப்படை கணினி அறிவு ஆகியவை கற்றுத்தரப்பட்டு வருகின்றன. அது தவிர, அவர்களுக்கு அடிப்படை ஆங்கில மொழி ஹிந்தி மற்றும் பிறமொழி கற்றலாற்றல் வகுப்பு களும் முறையே நடத்தப்படுகின்றன. நூற்றுக் கணக்கான சுவிசேஷ இலக்கியப் பிரதிகள் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஜான்சி சிறுவர் விடுதியில் சிறுவர் ஊழியம் நடத்தப்பட்டுள்ளது. அங்கு அருகிலிருக்கும் காலியிடத்தில் மேலும் அவ்விடுதிக்கான கட்டிடப்பணி தொடங்கப்பட்டுள்ளது. புந்தல் கண்ட் பிராந்தியத்தில் வைத்து நடைபெற்ற மூப்பர்கள் பயிற்சிக்கூடுகையில் 45 மூப்பர்கள் கலந்துகொண்டு, தங்கள் விசுவாச வாழ்வில் மேலும் பலப்பட்டு, தங்களது பொறுப்பிலிருக்கும் சபைகளை முன்நின்று நடத்துவதற்கு ஊக்கப்படுத்தப்பட்டும் உள்ளனர். வட இந்திய விரிவுப்பணி செயலர்கள் 6 பேருக்கு 'காணிக்கை சேகரிப்பு செயலி' பயிற்சி சிறப்பாக அளிக்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜான்சி, கான்பூர் மற்றும் அலகாபாத் ஆகிய இடங்களில் அக்டோபர் 2 முதல் 5-ம் தேதி வரை நடைபெறவுள்ள கான்பூர் பிராந்திய சுதேச ஊழியர்களின் குடும்ப ஐக்கியக்கூடுகை, UESI சுவிசேஷ வாலிபர் முகாம் ஆகியவை சிறந்த ஆவிக்குரிய முறையில் நடந்து முடிய; பரஸ்ரி, செர்ஷா, கட்டோலா ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் மனங்களில் சுவிசேஷத்திற்கான வாசல் திறக்கப்பட; சமையல் மற்றும் பிற தேவைகளுக்கு உதவும் குடும்பங்களை தேவன் நமக்குத் தந்து உதவிட; மிஷனெரி வாழ்க்கைக்கான கண்ணோட்டத்தில் நமது மிஷனெரிப் பயிற்சிப்பெறுவோரின் ஆவி, ஆத்ம, சரீரம் எல்லா வகைகளிலும் வளர்ச்சியடைய ஜெபிப்போம்.

அக்டோபர் 11
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மேரி புஷ்பம் டேனியல்
திரு. கஜன் சம்பிரமரி

ரணியா:

மாங்வெய் ஃபோம் & நிஷா

துதிக்க: கிறிஸ்துவில் 8 நபர்கள் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 இரவுநேர ஜெபக்கூடுகைகளும், ஒரு தேடுவோர் முகாமும், 4 உபவாச ஜெபக்கூடுகைகளும், 2 வேதாகம வகுப்புகளும், 10 இடங்களில் ஊழியப்பின்தொடர் பணிகளும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. மர்குலா கிராமத்தில் ஒரு சிறிய ஆராதனைக்குழு தொடங்கப்பட்டுள்ளது. மீனா பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இவ்வாண்டு இறுதிக்குள் 80 ஆத்துமாக்களைக் கண்டெடுக்கும் தீர்மானத்தில் நமது ஊழியர்கள் முனைப்புடன் செயல்பட; திலீப், அனுராதா, கீதா, சந்திர பிரபா, பூலான்தேவி மற்றும் அஞ்சலி பிசாசின் கட்டுகளிலிருந்து விடுபட; பன்சிலால் குடும்பம் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்க; இயேசுவைப் பின்பற்றுவதற்கு தடைவிதிக்கும் நமது பெண் விசுவாசியொருவரின் கணவர் சுனில் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஹுசேரன்:

ராஜன் & ஜெபமலர்

துதிக்க: கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் 4 பேர் வந்து சேர்ந்துள்ளனர். ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 298 சிறுவர்களுக்கு விடுமுறை வேதாகமப்பள்ளி நடத்துவதற்கான தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டு, அதன் மூலம் 58 சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். தொலைந்துபோன 6 எருமை மாடுகளை அரவிந்தும் அவரது குடும்பத்தினரும் ஜெபத்துடன் தேடியபோது, காட்டிற்குள் கட்டப்பட்ட நிலையில் பத்திரமாக அந்த மாடுகள் இருந்ததைக் கண்டுபிடிக்க தேவன் உதவி செய்ததற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இவ்வருட இறுதிக்குள் 50 ஆத்துமாக்கள் மற்றும் 2 திருச்சபைகளை உருவாக்க வேண்டுமென்ற இலக்கில் ஊழியர்கள் தொடர்ந்து உற்சாகமாக முன்னேற; நிதியின் தொண்டையில் உருவாகியுள்ள கட்டியிலிருந்தும், குட்டியின் கழுத்தில் உருவாகியுள்ள கட்டியிலிருந்தும் தேவன் அற்புத சுகமருள; அணுராக் சரளமாக பேசத் தொடங்க; ஹுசேரன் பகுதியில் ஆலயம் கட்டுவதற்காக கண்டறியப்பட்டிருக்கும் நிலத்தை பதிவு செய்வதற்கான முயற்சிகள் யாவும் வெற்றியாய் முடிய; கன்னாய்க்பூர்வா திருச்சபையினர் நமது ஆலய ஆராதனைகளில் உற்சாகமாகக் கலந்து கொள்ள; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள கீர்த்தியின் கணவரும் அவரது குடும்பத்தினரும் ஓயாமல் கீர்த்தியைத் துன்புறுத்திவரும் நிலையில், கீர்த்தியின் பெற்றோர்களும் கணவனை விட்டுப்பிரிந்திட கூறும் ஆலோசனையின் மத்தியில் அவர் தனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தினரின் மனங்கள் மாற வேண்டும் என்று ஏறெடுக்கும் ஜெபத்திற்கு நல்ல பதில் கிடைக்க; காஜலுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

அக்டோபர் 12
புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சோன்பு சிங்சன் G.

மத்தியப் பிரதேசம்

டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

துதிக்க: புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டுள்ளது. பரிஜ்பூர் கிராம மக்கள் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டுவதால், தேவ வார்த்தையை அவர் களுக்கு மேலும் அறிவிக்கும்பொருட்டு, 2 ஊழிய நிகழ்ச்சிகள் அவர்கள் மத்தியில் நடத்தப்பட்டுள்ளன. நயகாவ் கிராமத்தில் ஓர் சிறப்புக்கூடுகை நடத்தப்பட்டு, அதில் 70 நபர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டுள்ளனர். விகாஷ், பிஜயா சிங் மற்றும் ரக்ஷாவின் குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வாஞ்சையுடன் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பிரேம் நகர் ஆலயக்கட்டு மானப்பணி விரைவில் தொடங்கப்பட; இப்பணித்தள மக்களைக் கிறிஸ்துவண்டை கொணர மேலும் பல ஊழியர்கள் இப் பணித்தளத்திற்கு வருகை தர; எல்லா திருச் சபைகளிலும் மூப்பர்களை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட; அனில் & ரேகா, தீபக் & சசி மற்றும் பிஜயா & பய்ஜந்தி ஆகியோரின் குடும்பங்களில் மழலை பாக்கியங்கள் அருளப்பட; மனிஷா மற்றும் காஜலுக்கு சரியான வாழ்க்கைத்துணைகள் அமைய; இரத்தச்சோகை பிரச்சனையினால் அவதிப்பட்டுவரும் நமது மிஷனெரியின் மகள் சோபியா கிரேஸ் மற்றும் மூச்சுத் திணறல் பிரச்சனையினால் கஷ்டப்பட்டு வரும் ஹர்னாம் சாகு ஆகியோர் முழுசுக மடைய; ஜித்தேந்திரா பிசாசு பிடியிலிருந்தும், பன்தி குடிப்பழக்கத்திலிருந்தும் விடுதலை பெற; சிறைவாசத்திலிருக்கும் ஜித்தேந்திரா விரைவில் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

கர்கோன் / கோகாவ்: பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா பர்தன்

துதிக்க: 16 கிராமங்களில் புதிதாக சுவிசேஷ நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. நமது விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்களின் ஒத்தாசையோடு 8 கிராமங்களில் பின்தொடர்பணி வெற்றிகரமாக நடத்தப் பட்டுள்ளது. சத்திய வார்த்தைகளைக் கேட்டிருப்போர் அதற்கு நல்ல விதங்களில் பதிலளிக்கின்றனர். பிருல், நவாபூர், லோக்ரா, கொடுவா, ரதிகேடா, சர்மோவி, சான்டி, அம்பாபுரா, படுவா, ஜலால்வாத், தூலா, கடியா மற்றும் அம்பா கிராமங்களில் கடுமை யான எதிர்ப்புகளின் மத்தியிலும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிந்துள்ளன. 30 கிராமங்களில் கிரமமாக பெண்கள் ஜெபக்குழுக்கள் இயங்கிக்கொண்டு வருகின்றன; அதில் புதிய மக்களும் கலந்து கொள்கின்றனர். சிர்து கிராமத்தில் துவங்கப்பட்டுள்ள சிறிய ஜெபக்கூடுகையில் 2 குடும்பங்கள் தவறாமல் வந்து பங்கேற்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: திருமணமாகி 3 வருடங்களாகியும் குழந்தை இல்லாமலிருக்கும் ராஜ்பூர் கிராம பாலுபாயின் குடும்பத்தில் குழந்தை செல்வம் தவழ; சிலோயியா மற்றும் பொக்கரணியா கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப் பணிகள் சீக்கிரத்தில் இவ்வருடத்திற் குள்ளாக முடிவடைய; எதிர்ப்பினிமித்தம் இப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் 10 ஆராதனைக்குழுக்களும், அதிக எண்ணிக்கையில் பின்வாங்கிப் போயிருப் போரும் மீண்டும் கிறிஸ்துவின் விசுவாசத்தில் இயங்க ஆரம்பிக்க; மூல பிரச்சனைக்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கும் பிரிகா கோக்தால் கிராம ரென்தாலாபாயிற்கு தற்போது புற்றுநோய் பாதிப்பும் ஏற்பட்டிருப்ப தினால் அவருக்கு அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

அக்டோபர் 13
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. அனுஷ் பீட்டர் ஜெபராஜ்
திருமதி. தெபோராள் விஜயராணி எட்வர்ட்

நேப்பாநகர்:
ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

துதிக்க: சுவிசேஷம் 8 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 6 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். 25 வயது மனிஷா தொடர்ச்சியாக வாந்தியெடுக்கும் மோசமான நிலையிலிருந்தபோது, அவரது உறவினர்களின் ஆலோசனையின்படி அவர் துகய்தட் கிராமத்தில் நடைபெற்ற ஜெபக்கூடுகையில் பங்கேற்று முழுமையான சுகமடைந்துள்ளார். காம்லி பாயின் வீட்டிற்குள் புகுந்த பாம்பு விசுவாசிகளின் ஜெபத்திற்குப்பின் எவ்வித பிரச்சனையுமின்றி வெளியேறியதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தங்களது மனைவிகளை ஆவிக்குரிய கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாகச் செல்லவிடாமலும், சுவிசேஷத்தின் மீது ஆவல் காண்பிக்காமலும் இருந்து வருகின்ற விஷ்ராம் மற்றும் ரமேஷ் மனம் மாற; ஷோபாராமின் மனைவியும் அவரது குடும்பத்தாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; 16 வயது பெண்ணான ரக்ஷாவும், மஞ்சுபாயும் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற; கணேஷிற்கு மீண்டும் கண்பார்வை கிடைக்க ஜெபிப்போம்.

கால்வா: ஐசக் & சீதா

துதிக்க: குடும்பத்தார் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதின் விளைவாக அனிகேத் என்ற சிறுவன் சீராக நடக்கவும், பேசவும் துவங்கியுள்ளான். காஜு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளார். இனந்தெரியாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பரிமிளா, தன் உறவினர்கள் மூலம் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு, அவரைப் பற்றிக்கொண்டதினிமித்தம் மருத்துவர்கள், மந்திரவாதிகள் மற்றும் அப்பெண்ணின் கணவர் யாவரும் கைவிட்ட போதும், பரிமிளாவிற்கு தேவன் பூரண சுகம் கொடுத்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டு, அதினால் உண்டாகும் தலைச்சுற்று மற்றும் மூச்சுத்திணறலினால் அவதிப்படும் ராம்பதி பூரண குணமடைய; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட காரணத்தினால் தனது மனைவியைக் கொல்லத்துணியும் பாலிராமின் வாழ்வில் தேவன் இடைபட; சங்கீதாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

தடுத்ததை தானாகவே தேடிச்சென்றார்!

ஆந்திரப் பிரதேசம், சில்லமத்தூர் பணித்தளம். போய்பிட்டா கிராமத்தைச் சேர்ந்தவர் லக்ஷ்மி. இவர் தீய ஆவிகளினால் ஆட்கொள்ளப்பட்டு, தனது குடும்பத்தினருக்கு அதிக தொல்லை கொடுத்து வந்தார். இவர்கள் விசுவாசிகளல்ல. எனவே, இவர் குணமாக ஏராளமான பணத்தை பூஜைக்காகவும், மாந்திரீகத்திற்காகவும் செலவழித்தனர். இவர் ஒருகாலத்தில் சுவிசேஷத்தையும் ஆலயத்திற்குச் செல்பவர்களையும் தடுத்தார். ஆனால், இப்போது இவர் ஆலயத்திற்கு தானாகவே சென்று தனக்காக ஜெபிக்குமாறு கெஞ்சி கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில் முழு சபையாரும் இவருக்காக உபவாசித்து ஜெபித்ததின் விளைவு, தேவன் இவரைத் தொட்டு சுகப்படுத்தினார். இதைப்பார்த்த இவரது முழுக்குடும்பமும் இயேசுகிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். அல்லேலூயா!

அக்டோபர் 14
வெள்ளி

பால்:

டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி

துதிக்க: சுவிசேஷம் 2 கிராமங்களில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அம்பாபானி கிராமத்திலிருந்து 2 நபர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை அவருடைய நாமத்தில் அறிக்கை செய்துள்ளனர். பிப்பள்குரா கிராமத்தில் சத்சங் கூடுகை சிறப்பாக நடைபெற்றுள்ளது. நமது கடிகாம் சபை மூப்பரின் மகளுக்கு ஏற்பட்ட கருசிதைவிற்குப்பின் தேவகிருபையால் அவர் தற்போது மீண்டும் கர்ப்பமடைந்துள்ளார். ஒரு வாகன விபத்தின் மூலம் 2 கால் பாதங்களும் நசுங்கப்பட்ட நிலையில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் நமது சுதேச ஊழியரொருவரின் 3 வயது மகனுக்கு தேவன் இம்மட்டும் ஜீவனைக் கொடுத்து பாதுகாத்து வருகிறதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தின்மீதும் குறிப்பாக சுதேச ஊழியர்கள்மீதும் எதிர்ப்பு தெரிவிக்கின்ற வனத்துறை அதிகாரிகள், கிராமத் தலைவர்கள், குருக்கள், அக்கிராம பெரும் புள்ளிகள் யாவரும் மனந்திரும்ப; தனது நிலத்தை ஆலயம் கட்டுவதற்கென அர்ப்பணித்துள்ள லக்கன் அதைச் செய்து முடிக்க; எதிர்ப்பாளர்களினிமித்தம் தங்களது விசுவாசத்தில் குழம்பிப்போய் நமது கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக வராமல் இருக்கும் நமது விசுவாசிகளின் பயம் நீங்க ஜெபிப்போம்.

பீஹார்

ராணிகன்ஜ்:

ஆனந்தன் M. & நிஷா

துதிக்க: இயேசுத்திரைப்பட ஊழியம் 2 கிராமங்களில் நடைபெற்றுள்ளது. 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டுள்ளன. கிரண்தேவி, ருக்மணி, தேவி, கௌதம் குமார் ஆகியோர் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். 70 நபர்கள் சுவிசேஷத்தை முதன்முறையாகக் கேட்டறிந்துள்ளனர். 3 இடங்களில் இரவு நேர ஜெபக்கூட்டங்கள் சிறப்பாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்புதிய ஊழியப்பகுதியில் தேவன் நமக்கு நல்ல தொடர்பாளர்களைக் கொடுக்க; கல்விப்பயிற்சி மையம் வைத்து அவ்வப்போது நமது ஊழியத்தில் உதவி செய்துவரும் ராஜேஷ் குமாருக்காக; நமது ஞாயிறு ஆராதனைகளில் தவறாமல் பங்குப்பெற்றுவரும் 6 புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட; ஓம்பிரகாஷின் மகளுக்கு மழலைபாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

அராரியா:

ஜென்னிஸ் & சுகந்தி புஷ்பம்

துதிக்க: இம்மிஷனெரிக் குடும்பத்திற்கு இப்புதிய பணித்தளத்தில் வந்து சமாதான மாய் பணியமர தேவன் ஒத்தாசை புரிந்துள்ளார். கோச்காமா என்ற புதியதொரு கிராமம் ஊழியம் செய்ய குறிக்கப்பட்டுள்ளது. இங்கே இயேசுத்திரைப்பட ஊழியம் நடந்தேறியுள்ளது. ரங்குதா கிராமத்தில் கிரமமாக ஞாயிறு ஆராதனைகள் நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரங்குதா, தேவிகன்ஜ், கஜ்வி, சங்கர்பூர் ஆகிய ஆராதனை மையங் களிலுள்ள நமது விசுவாசிகள் கிறிஸ்துவில் வளர்ந்திட; நமக்கு ஞாயிறு ஆராதனை நடத்த இடங்கொடுக்க முன்வந்திருக்கும் மனோஜ் பாரதி மற்றும் அவரது குடும்பத்தாருக்காக; புலம்பெயர்ந்து சென்றிருக்கும் சேதிலால் ரிஷிதேவ் எங்கிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் உறுதியாக இருக்க; சுரேஷ்குமார் இயேசுவை ஏற்றுக்கொள்ள; சிறுமி கீதா குமாரி கண் கோளாறிலிருந்தும், சுமித்ரா தேவி மனநோயிலிருந்தும், புல்சான் ரிஷிதேவ் விபத்தினால் உண்டான காயங்களிலிருந்தும் சுகம் பெற; சாண்டிகா & அமிர்தா குழந்தை பாக்கியம் பெற ஜெபிப்போம்.

அக்டோபர் 15
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பாகி சதீஷ்

ஜார்க்கண்ட்

அமலகாச்சி:

கஜன் சம்பிரமரி & ரோஷிலா

துதிக்க: புதிய பணித்தளமொன்று துவங்கப்பட்டுள்ளது. நீண்டக்கால பெலவீனத்திலிருந்து தேவன் நல்ல சுகத்தை நமது சுதேச ஊழியர்களுக்குத் தந்துள்ளார். ஞாயிறு ஆராதனையின்போது முறிந்துவிழுந்த மரக்கிளையின் விபத்திலிருந்து அம்மரத்திற்குக் கீழ் நின்ற பிள்ளைகளையும், இருசக்கர வாகனத்தையும் தேவன் எந்த சேதமுமின்றி காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: காசநோய், வலிப்புநோய் மற்றும் சிரங்குகளினால் கஷ்டப்படும் மக்களும், ஊட்டச்சத்து குறைபாட்டினால் அல்லலுறும் பிள்ளைகளும் பூரண சுகம் பெற்றிட; அரசாங்கப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் வகுப்பிற்கு ஒழுங்காக வரவும், பிள்ளைகளும் ஆர்வமாகப் பள்ளிக்குப் படிக்க வரவும்; இப்பகுதி சபைகளைச் சார்ந்த சபை மூப்பர்கள் கர்த்தருக்கென்று வைராக்கியமாக வாழ; வாசிக்கத் தெரியாமல் கஷ்டப்படும் சபைமூப்பர்களுக்கு எழுத்தறிவு கொடுக்கப்பட; இக்கிராம மக்கள் யாவரும் முழுமனதோடு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

தம்னி: ஜாண்பால் ஹாரிஸ் & விமலா டெய்சி

துதிக்க: LTI சண்டிகோலாவில் அருட் செய்தி கொடுப்பதற்கான பயிற்சி யளிக்கப்பட்டுள்ளது. கந்திகோடா மற்றும் குட்டமு ஆலயங்களின் முகப்புப்பகுதி சீரமைக்கப்பட்டுள்ளன. விஜய் மால்தோ, பங்ரோ மால்தோ, மீசா மால்தோ சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டுகின்றனர். ரமேஷ்வர் மால்தோ பாம்புக் கடியிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளார். ரூத் மால்தோவிற்கு அவர்தாமே தனக்கென ஜெபித்தபோது திகில் கனவுகளிலிருந்து தேவன் தந்துள்ள நல்விடுதலைக்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: தட்டாஜிபிட்டா கிராம விசுவாசிகளுக்கும், கிறிஸ்தவரல்லாதோருக்கும் இடையே சமாதான உறவுகள் காணப்பட; 4 பாஸ்ட்ரேட்டுகளில் உருவாக்கப்பட்டிருக்கும் சிறு குழுக்கள் பிரச்சனையின்றி தொடர்ச்சியாக இயங்க; பின்மாற்றமடைந்திருக்கும் ஜோனத்தான் மால்தோ, ரூபன் மால்தோ, கோபின் மால்தோ, ஜோயல் மால்தோ மற்றும் மத்தியாஸ் மால்தோ திரும்பவும் விசுவாச வாழ்விற்குள் வர; தொலைந்து போயிருக்கின்ற புஸ்ருகுடியா சபை மூப்பரின் இருசக்கர வாகனம் மீண்டும் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

எதிர்ப்பு ஆதரவாக மாறியது

மத்திய பிரதேசம் தார் பணித்தளத்தில் அர்ஜுன் காலனியில் ஆறு அங்கத்தினர்களுடன் நமது ஆராதனை மையம் நடைபெற்று வருகின்றது. திடீரென்று எதிர்ப்பாளர்கள் அந்த ஆராதனை மையத்தை மூடி, விசுவாசிகள் கூடுவதை தடுத்து நிறுத்தினர். விசுவாசிகள் ஜெபித்தனர். இரு மாதங்களுக்குள்ளாக ஆராதனை மையம் மீண்டும் தொடங்கியது. இந்த முறை ஐந்து புதிய அங்கத்தினர்களுடன் மொத்தம் 11 அங்கத்தினர்கள் ஆராதனை மையத்தில் கர்த்தரைத் தொழுகின்றனர்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. விஜயராணி ரூபன் ரவி
திரு. சுச்சாவோ S.

கோபிகந்தர்:

ஜாண் தினேஷ் & பின்னி ஞானம்

துதிக்க: இரவுநேர ஜெபக்கூடுகைகள் 2 கிராமங்களில் சிறப்பாக நடத்தப் பட்டுள்ளன. 2 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. பணித்தள அளவில் 3 நாள் உபவாசக் கூடுகை யொன்றும் ஒரு வாலிபர் கூடுகையும் நடைபெற்றுள்ளன. மிட்டுன் தெகிரி காச நோயிலிருந்து முழுவதுமாகச் சுகமடைந் துள்ளார். நமது மிஷனெரியையும், சுதேச ஊழியரையும் அவர்கள் சந்தித்த விபத்தினின்று தேவன் கிருபையாய் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: 753 விசுவாசிகள் வாழும் இப்பணித்தளத்தில் வெகு சிலர் மாத்திரமே ஞாயிறு ஆராதனையில் பங்கேற்கும் இந்நிலை மாற; நிலக்கரி ஆதாயம் கொண்ட நிலமாக தம்னிசுவா கிராமம் இருப்பதினால், வியாபார நோக்கில் அலையும் வியாபாரிகள் அங்குள்ள மரம், செடி, கொடிகளை அழித்து இக்கிராமத்தை ஆக்கிரமித்துக் கொள்ள திட்டமிடுகின்றனர். அவ்வாறு அவர்கள் செய்ய முற்பட்டால், நமது விசுவாசிகள் தங்கள் வீடு மற்றும் நிலங்களை இழக்கக்கூடும். எனவே, இக்கிராம மக்களின் வாழ்வுநிலைகள் பாதிக்கப்படாமலிருக்க அவ்வியாபாரிகளின் மனநிலைகள் நல்லதாய் மாற; திருமண மாகி 10 வருடங்களாகியும் குழந்தை யில்லாமல் இருக்கும் தம்னிசுவா ஆலய மூப்பருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; நமது ஊழியங்களைத் தடுக்கவும், மால்பகாரியா மக்களை மிஷனெரிகளுக்கு எதிராக அநேக விஷயங்களைப் பேசும்படி தூண்டவும் செய்கின்ற அம்பர்ஜோலா கிராமத்தலைவர் மனம் மாற; தங்கர்காவ் கிராமத்தில் ஓர் ஆலயம் கட்டுவதற்கான அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

அமரபாடா:

வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா

துதிக்க: முதல்முறையாக 12 கிராமங் களில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடைபெற்றுள்ளது. 14 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். காயின் மராண்டி குடலிறக்கப்பிரச்சனையிலிருந்தும், ஷாஷி கிஸ்கு மூளை மலேரியா காய்ச்சலிலிருந்தும், எலியாஸ் மால்தோ நிமோனியா மற்றும் குடற்புண் காய்ச்சலி லிருந்தும், மஞ்சு ஹெம்ரோம் மற்றும் சுட்கா மராண்டி காசநோயிலிருந்தும் சுகம் பெற்றுள்ளனர். அதிக மின்னழுத்த கோளாறினால் உண்டாக இருந்த விபத்தி லிருந்து பாஹா ஹெம்ரோமின் உயிரை தேவன் காப்பாற்றி தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: ஃபத்தேஹ்பூர், தல்ஜிஹாரி, ஜோடாசிமால் மற்றும் போத்ரா பகுதி களிலுள்ள மக்கள் இயேசுவை ஆண்ட வராக ஏற்றுக்கொள்ள; நமது சுதேச ஊழியரான ராஜ்முனி முர்முவின் மனைவி பித்தப்பை கோளாறிலிருந்தும், சபீனா சோரேன் காலாஜார் நோயிலிருந்தும், ஜுனாஸ் ஹெம்ரோம் காசநோயிலிருந்தும், சுனில் கர்மாக்கர் வலிப்பு நோயிலிருந்தும், லக்ஷ்மன் மராண்டி மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், பத்ராஸ் மராண்டி சிறுநீரகக்கோளாறிலிருந்தும், எலியாஸ் மராண்டி கல்லீரல் பிரச்சனையிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

அக்டோபர் 17
திங்கள்

யேகோவா யீரே சிறுவர் விடுதி – போடுவா: சோன்பு சிங்சன் & டிங்நய் நேங் சிங்சன்

துதிக்க: மலேரியா நோயிலிருந்து விரேந்தரும் தினேஷும் சுகம் பெற்றுள்ளனர். இவ்வருடம் நமது விடுதியில் 10-ம் வகுப்பு முடித்துள்ள பிள்ளைகளுக்கு தும்காவிலுள்ள எஸ்.பி. கல்லூரியில் 11-ம் வகுப்பிற்கு சேர இடம் கிடைத்துள்ளது. இம்மாதம் முழுவதும் இவ்விடுதியிலுள்ளோருக்கு தேவ அன்பும், பராமரிப்பும், பாதுகாப்பும் இடைவிடாது கிடைத்துக்கொண்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பி.ஏ., பட்டப்படிப்பைச் சமீபத்தில் முடித்துவிட்டு, தற்போது பி.எட்., படிக்க திட்டமிட்டு, தேர்வு முடிவிற்காகக் காத்திருக்கும் ஜெயராஜ் தீமோத்தேயுக்காக; பாக்கூரில் பி.எட்., படித்துக்கொண்டிருக்கும் மனோஜ் மோகன் தனது படிப்பை நன்கு படித்துத் தேற; சந்து ஆன்ட்ரி காசநோயிலிருந்து குணமாக; நமது மிஷனெரிக்குடும்பம், விடுதியில் தங்கியிருக்கும் உள்ளூர் பணியாளர்களின் 5 குடும்பங்கள் மற்றும் விடுதியிலிருக்கும் பிள்ளைகள் அனைவருக்கும் தேவன் ஆரோக்கியமான வாழ்வைக் கட்டளையிட ஜெபிப்போம்.

நோனிஹாட்:
பென்ஹர் M. & மேரி ஜான்சி ராணி

துதிக்க: சுவிசேஷம் 16 கிராமங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. 8 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். பந்தன் கிராமத்தில் ஒரு புதிய திருச்சபை உருவாக்கப்பட்டுள்ளது. பெரும் விபத்திலிருந்து பாபுராம் காப்பாற்றப் பட்டுள்ளார். மிரு மூர்மு மஞ்சள்காமாலை நோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். பயத்தின் ஆவியிலிருந்தும், பெலவீனத் திலிருந்தும் நமது புதிய விசுவாசி யொருவரின் குடும்பத்தை தேவன் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: ஷாந்தி ஹஸ்தக், ஷர்மிளா மராண்டி மற்றும் சுக்லால் ஹெம்ரோம் ஆகியோரின் குடும்பங்கள் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுவதோடு நின்றுவிடாமல், கிறிஸ்துவைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ள; ஷாந்தி ஹஸ்தக் மற்றும் ஷர்மிளா மராண்டி மனநோயிலிருந்தும், மிச்சோர் வயிற்றுக்கட்டியிலிருந்தும், சுக்ருமுனி ஹஸ்தக் யானைக்கால் வியாதியிலிருந்தும் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

யாருமற்ற நேரத்தில் நடந்தது என்ன?

ஜார்க்கண்ட், ஹன்ஸ்தியா பணித்தளம். அம்காச்சி கிராமத்தைச் சார்ந்த வயோதிபர் ஒருவர், நமது புதிய விசுவாசி. இவர் நமது ஆலய ஆராதனைக்கு அவ்வப்போது வந்துச் செல்பவர். இவரது மகன்கள் மற்றும் மருமகள் கள் யாவரும் நமது விசுவாசிகளே. இவர்கள் யாவரும் ஆண்டவரை அதிகம் நேசித்தனர். வாழ்வாதார தேவைகளுக்காக பிள்ளைகள் யாவரும் குடும்பமாகப் பிற மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். இந்த வயோதிபர் மாத்திரம் தனியாக அக்கிராம வீட்டில் வசித்து வந்தார். ஒருநாள் இவரது பக்கத்து வீட்டு நபர் குடிபோதையில் தெரியாமல் ஓர் பாம்பிடம் சிக்கிக் கொண்டார். பாம்பு அவரைத் தீண்ட தொடங்கியது. வலி தாங்க முடியாமல் அம்மனிதர் உதவிக்கு கதறியதைக் கேட்ட இவ்வயோதிபர் ஓடோடிச் சென்று, அவருக்கு உதவ முயற்சித்தார். எனினும், அவரை மருத்துவமனைக்கு தூக்கிச் செல்ல யாருமில்லாததினால், "இயேசுவே, இவரைக் காப்பாற்றும்!" என சிறியதாக ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்ட தேவன், போதையில்இருந்த அம்மனிதனின் உயிரைக் காப்பாற்றினார். தேவனுக்கே மகிமை!

அக்டோபர் 18
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுமிதா தாஸ் மொஹன்தியர்
திரு. ஸ்ரீதர் மொபிடெனி
திரு. டேனியல் சேனாபதி

மேற்கு வங்காளம்

பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

துதிக்க: புதிதாக 21 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 5 கிராமங்களில் பெரிதளவில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் நடைபெற்றுள்ளன. சுதந்திரதின நாளில் கொடியேற்று விழாவை முன்னிட்டு, 3 கிராமங்களில் சுவிசேஷம் நற்செய்தியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சல்போனா கிராம ஆலய ஆராதனையை முன்நின்று நடத்த அக்கிராம வாலிபர்கள் முனைப்பு காட்டுகின்றனர். மஞ்சள் காமாலை நோயிலிருந்து சோம்கிஸ்குவை சுகப்படுத்தியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மழை பற்றாக்குறையினால் வாழ்வாதார தேவைகளின் பொருட்டு இடம்பெயரும் நமது சபை மூப்பர்கள் மற்றும் சபைகளிலுள்ள முக்கியமான மக்கள் யாவருக்கும் அவர்களது சொந்த இடங்களிலேயே நல்ல வேலை வாய்ப்புகள் அமையவும், அவ்வாறு பற்பல இடங்களுக்கு இடம் பெயர்ந்திருக்கும் அனைத்து மக்களும் அங்கு நற்சாட்சியுள்ள வாழ்வு வாழவும்; நமது இளம் வயது விசுவாசிகளுக்கு தகுந்த வாழ்க்கைத்துணைகள் அமைய; நீம்தங்கா, முத்ருதங்கா, உளத்தூர் மற்றும் மானிக்பூர் ஆகிய இடங்களிலுள்ள ஆராதனை மையங்கள் யாவும் திருச்சபைகளாக மாற; சல்போனாவில் ஆலயம் கட்ட நல்ல நிலமொன்று கிடைக்க; விஜய் மூர்முவின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ ஜெபிப்போம்.

இட்டாஹார்: அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

துதிக்க: சுவிசேஷம் 10 கிராமங்களில் முதல்முறையாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. ஜகால் கிராமத்திலிருந்து 2 புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்துள்ளனர். பாம்பு கடித்தபோதும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் அன்ஜோலி ஹன்ஸதக் அற்புதமாக தப்பிப் பிழைத்துள்ளார். மோசஸ் என்பவரும் அவருடைய மனைவியும் பிற புலம்பெயர்ந்த பணியாளர்களோடு சுகவீனமாகி, மற்றவர்கள் யாவரும் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுத்த சூழ்நிலையில், இத்தம்பதியர் மாத்திரம் ஜெபத்தினால் ஆச்சரியமாக சுகம் பெற்றுள்ளனர். சோனா சோரேன் பெண்ணியப் பிரச்சனையிலிருந்தும், தலாகுடி பஸ்கி வயிற்று வீக்கத்திலிருந்தும் பூரண குணமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தன்னார்வ ஊழியர்களாகப் பணிசெய்ய துடிக்கும் தலா மூர்மு மற்றும் சித்தரஞ்ஜித் மூர்முவின் குடும்பங்கள் தேவனால் பெரிதும் பயன்படுத்தப்பட; பொகுய்குட்டு கிராம ஆலயக்கட்டுமானப் பணிக்கான தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட; தலாகுரியா பெஸ்ரா கல்லீரல் மற்றும் சிறுநீரகக் கோளாறிலிருந்தும், மாமுனி பெஸ்ரா காசநோயிலிருந்தும் சுகம் பெற; பெஞ்ஜமின் ஹெம்ரோம் மற்றும் சுஜன் ஹெம்ரோம் குழந்தை செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; நமது புதிய திருச்சபையொன்றின் மூப்பர்கள் கிறிஸ்துவில் வளர்ச்சியடைய; இலக்காக வைத்திருக்கும் 20 ஆத்தும கனிகளை வருகிற நாட்களில் கண்டுபிடிக்க ஜெபிப்போம்.

அக்டோபர் 19
புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹவிலா பரமானந்த்

அஸோம்

தேமாஜி: நாத்தான் குமார்
பெபர்த்தா & நிருபோமா

துதிக்க: ஜெங்ராய் மற்றும் சிசமாரா கிராமங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் சிறப்பாக நடந்துள்ளது. தேக்ஜுரி மற்றும் பாஞ்சாலி கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் நல்ல முறையில் நடை பெற்றுள்ளன. சுமார் 300 மக்கள் கூடி சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேட்கும் வாய்ப்பை தேவன் இவர்களுக்கு ஈந்திருப் பதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: மிரி இனமக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள; நமது ஊழியத்தை இங்கே தொடர ஏராளமான தொடர்பாளர்கள் நமக்குக் கிடைக்க; இப்பணித்தளத்தில் ஊழியத்தைத் துரிதப்படுத்த அர்ப்பணிப்புள்ள சுதேச ஊழியர்கள் கிடைக்க; முன்கழுத்து கழலைப்பிரச்சனையிலிருந்து நிருபோமா விற்கு பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

லக்கிம்பூர்:
ஆரோன்சிங் நர்சாரி & ரீனா

துதிக்க: ஒரு நபர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். இரவுநேர சுவிசேஷக் கூடுகையில் 500 மக்கள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். 31 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன. 11 இடங்களில் இரவு ஜெபக் கூட்டங்கள் சிறப்பான முறையில் நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: போர்பந்தா தாகு ஆலயக்கட்டு மானப்பணி விரைவில் முடிவடைய; பின்மாற்ற மடைந்துள்ள நமது விசுவாசிகளான புரோஜன் நாரா, துளராம் சங்ரா மற்றும் அவரது மனைவி மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; இனிவரும் நாட்களில் நடக்கவுள்ள வெளிப்புற சந்திப்பு ஊழியம், இரவுநேர சுவிசேஷக்கூட்டங்கள், விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடப்போகும் கூட்டங்கள் யாவும் மிகுந்த ஆவிக்குரிய பலனளிப்பதாக இருக்க ஜெபிப்போம்.

சத்தீஸ்கட்

சம்ப்பா:
வினோத்குமார் சிங் & பிரவதிமணி

துதிக்க: கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் புதிதாக 7 நபர்கள் தஞ்சமடைந்துள்ளனர். கடந்த சுதந்திர தினத்தன்று நடைபெற்ற ஒருநாள் கூடுகையில் கலந்து கொண்ட பெண்கள் ஒவ்வொருவரும் இனி வரும் 3 மாதங்களுக்குள் தனித்தனியே 5 பெண் களைப் புதிதாக கிறிஸ்துவின் தொழுவத்தில் கொண்டுவந்து சேர்ப்பதாக தீர்மானம் எடுத்துள்ளனர். கர்ப்பப்பை புற்றுநோயினால் அவதிப்பட்டுவந்த அமரிக்கன்பாய் ஜெபத் திற்குப்பின் உடல்நிலை சற்று நன்றாக இருப்பது போன்று உணருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அகல்தாரா என்ற இடத்தில் ஆராதனைக்காகப் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள துணை மையத்தில் வாரந்தோறும் அதிகமான விசுவாசிகள் வந்து ஆராதனையில் பங்கேற்க; திலாய், லத்தினா, கோத்மி, கோம்ரூமா, கோர்பா, மெஹன்ட், சிமேரியன், சோபான் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைய; 5 வருடங்களில் 880 கிராமங்கள், 14 தாலுகாக்கள் என வைத்திருக்கும் ஊழிய இலக்குகளை ஜெபத்துடன் எட்டிட; 14 தாலுகாக்களிலும் ஆத்தும பாரம் கொண்ட நபர்கள் ஊழியத்திற்கென பணியமர்த்தப்பட; நமது மிஷனெரியின் இளைய மகன் ஷிஃபா நன்குப் பேசுவதற்கான சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் அம்மகனுக்கு தேவையான நல்ல மனவளர்ச்சியும், பேசுந்திறனும் கர்த்தரால் கிருபையாய் அருளப்பட ஜெபிப்போம்.

அக்டோபர் 20
வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மார்த்தா சோரேன்

பாண்டே:

பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா

துதிக்க: 6 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப் பட்டுள்ளன. 3 நாள் உபவாச ஜெபக்கூடுகை சிறப்பாக நடைபெற்றுள்ளது. 17 வேதாகம வகுப்புகளும், 49 வீட்டு ஜெபக்கூட்டங்களும், ஒரு தேடுவோர் முகாமும் நடத்தப்பட்டுள்ளன. புத்து லக்குமி தீய ஆவியின் பிடியிலிருந்தும், வயிற்று வீக்கத்திலிருந்தும் சுகம் பெற்றுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தின்மீது அக்கறை காட்டும் 3 குடும்பத்தினரும் நமது ஞாயிறு ஆலய ஆராதனைகளில் கிரமமாகப் பங்கேற்கவும், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்யவும்; மய்னிபாய் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபடவும், பூலி கோவாச்சி இரத்தசோகை பெலவீனத்திலிருந்து சுகம்பெறவும் ஜெபிப்போம்.

ஒடிசா

ராய்ரங்பூர்: குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்

துதிக்க: கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை 9 புதிய நபர்கள் அறிக்கை செய்துள்ளனர். நமது ஊழியத்தை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, பிஜாதாலா என்ற இடத்தில் ஆய்வுப்பணி மேற்கொள்ளப் பட்டாயிற்று. ஃபூர்லாய் டுடு மற்றும் துர்கா சோரேன் தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். 6 குடும்பங்கள் நமது ஞாயிறு ஆராதனைகளில் தவறாமல் பங்குப் பெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரனோ ஹெம்ரோம் உடல் வீக்கத்தி லிருந்தும், அர்சு முர்மு மனஉளைச்சல் மற்றும் மனநோயிலிருந்தும் சுகமாக; ஒரு இலட்ச சந்தால் இனமக்களைச் சுவிசேஷத்தினால் சந்தித்துவிட வேண்டு மென்ற நீண்டக்கால இலக்கை மனதில் கொண்டு, நமது ஊழியர்கள் ஜெபத்துடன் செயல்பட; சந்தால் இனமக்கள் மத்தியில் சுவிசேஷப்பணியாற்ற அதிகமான சுதேச ஊழியர்களும், தன்னார்வ ஊழியர்களும் கிடைக்க ஜெபிப்போம்.

பிரச்சனையின் மேல் பிரச்சனை!

மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளம், துகய்தட் கிராமத்தைச் சார்ந்த பாவர்சிங்பாயின் மகன் அருண். இவன் பொர்காவிலுள்ள பள்ளி விடுதியொன்றில் தங்கி 6-ம் வகுப்பு படித்து வருகிறான். இவன் சுகவீனமாயிருந்ததினால் இவனது தந்தை இவனைப் பார்க்க வந்தபோது, இவனை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வாஞ்சித்தார். அவ்வாறு தந்தையும் மகனுமாக வீட்டிற்குப் போகும்வழியில் இருள் சூழ்ந்து, பெரும் மழை பெய்யத்தொடங்கியது. வழியிலே மழையினால் பெருக்கெடுத்து ஓடும் 2 ஆறுகளையும் இவர்கள் கடக்க வேண்டியதாயிருந்தது. பின்பு இவர்களது இருசக்கர வாகனத்தின் டயரும் சேதமடைந்தது. வண்டியைச் செப்பனிட்டு, இவர்களது கிராமத் திற்குச் செல்ல மேலும் 10 கி.மீ தூரம் இருந்ததால், அவர்கள் காட்டு வழியாகப் போகும்போது தூரத்தில் சாலையோரமாக சில மனிதர்கள் கம்புகளோடும், தடிகளோடும் நிற்பதைப் பார்த்தனர். அப்போது அக்கூட்டத்தில் ஒருவன் வாகனத்தை நிறுத்த முயற்சித்தப்போதிலும், பாவர்சிங்பாய் வண்டியை நிறுத்தாமல் வேகமாக அவ்விடத்தை விட்டு கடந்து சென்று தப்பினர். பின்பு அக்கூட்டத்தினர் வழிபறிகொள்ளையர்கள் என்பதை அறிந்து தேவனுக்கு நன்றி கூறினர். வழியில் ஏற்பட்ட அத்தனைப்பிரச்சனைகள் மத்தி யிலும் தந்தையும் மகனும் இரவில் பத்திரமாக வீடுவந்து சேர்ந்தனர். அல்லேலூயா!

அக்டோபர் 21
வெள்ளி

குஜராத்

விஜயநகர்: விஜய் குமார் & சுஷீலா

துதிக்க: இயேசுகிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் 4 புதிய நபர்கள் சேர்ந்துள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் 355 பேர் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். மழைக்கால ஆபத்து மற்றும் நோய்களிலிருந்து நமது மிஷனெரிகளும், விசுவாசிகளும், சுதேச ஊழியர்களும் பாதுகாக்கப்பட்டுள்ளனர். தீய ஆவியின் ஆட்கொள்ளுதலினால் திடீரென கண் பார்வையை இழந்திருந்த தீபக், தான் ஜெபித்தபோது மீண்டும் பார்வை திறனைப் பெற்றுள்ளார். பில்லிசூனிய கட்டினால் கட்டப்பட்டிருந்த ரமேஷ்பாயின் மனைவி காந்தாபேனை ஜெபத்திற்காக சிக்ரீ திருச்சபைக்கு அழைத்துச் சென்றபோது, திடீரென அவர் அங்கிருந்து காணாமல் போய் காட்டிற்குள்ளே சுற்றித்திரிந்த அவரை ஜெபத்தின் மூலம் பத்திரமாக வீடு திரும்பச் செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சாம்பிலைபன்வா மற்றும் சிக்ரீ திருச்சபையினருக்கு ஆலயங்கள் கட்டப்பட; மருத்துவர்களால் கைவிடப்பட்டு, சிறுநீரகக் கோளாறினாலும், வயிற்றுவலியினாலும் கஷ்டப்பட்டுவரும் நாகுதாஸ் அற்புத சுக மடைய; நமது ஊழியத்தையும், அங்கே ஆலயம் கட்டப்படுவதையும் எதிர்க்கும் தபய்சா கிராமத்தலைவர் கைலாஷ்பாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ஒன்றன்பின் ஒன்றாக குடும்பத்தில் பிரச்சனைகளைச் சந்தித்துவரும் ஜீவாபாயின் மனைவி தீய ஆவியின் பிடியிலிருந்தும், பிள்ளைகள் பள்ளிக்குச் செல்ல இயலாத நிலையிலிருந்தும், ஜீவாபாய் வேலைக்குச் செல்ல முடியாத நிலையிலிருந்தும் விடுபட; கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன் கருசிதைவினால் அல்லல்பட்டு, தற்போது நமது ஆராதனைக்குத் தொடர்ச்சியாக வருகிற சாம்சுபேனிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; 8 வயது சிறுமி ஆஷா புத்தி சரியற்ற நிலையிலிருந்தும், லிம்பாபாய் 6 மாதங்களாக இருக்கும் ஊரல் பிரச்சனையிலிருந்தும், கானுபேன் தீய ஆவியின் பிடியிலிருந்தும் விடுபட்டு பூரண சுகமடைய ஜெபிப்போம்.

கடோத்:

ஜீவரத்ன பீரோ & சிப்போரா

துதிக்க: சுவிசேஷ வசனங்கள் 3 கிராமங்களில் முதல்தடவையாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஒருவித பூஞ்சை நோயினால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைக்குள்ளாகி இருந்த நமது மிஷனெரி சகோதரி. சிப்போரா மீண்டும் நல்ல சுகத்துடன் பணித்தளத்திற்குத் திரும்பியுள்ளார். கெட்ட ஆவியின் பிடியிலிருந்து காஞ்சன்பேன் விடுதலை பெற்றுள்ளார். விகான் கிராம பீம்சிங்பாயின் மகனுக்கு திருச்சபை மக்கள் கூடி ஜெபித்தபோது, சரீரம் முழுமைக்கும் இருந்த கட்டிகளிலிருந்து பூரண சுகம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீய ஆவியின் பிடியிலிருந்து தேவனால் விடுவிக்கப்பட்ட நற்சாட்சியைத் தனது சமூக மக்களுக்கு தைரியமாக எலிசாபேன் எடுத்துரைக்க; கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ராகேஷ் பாய், திவ்யாபேன், பாரதிபேன், ஹீனாபேன், லக்ஷ்மிபேன், ஹன்சாபேன், சஞ்ஜய்பாய், சான்சார்பேன், ராஜுபாய், சீதாபேன், மான்பாய், நிருபேன், நித்திக்பாய், லீலாபேன் ஆகியோருக்காக; விகான் கிராமத்தில் நல்லதொரு ஆலயம் கட்டப்பட; சுமித்ரா மற்றும் கல்பனாவின் குடும்பங்களுக்கு மழலை செல்வங்கள் அருளப்பட ஜெபிப்போம்.

அக்டோபர் 22
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெபராணி அசரியா ராஜ்குமார்
திருமதி. மரிதாய் லியோனா பிரத்யூஷ்

போடேலி:

ஏசுபாபு & உஷா

துதிக்க: சுவிசேஷம் 2 கிராமங்களில் முதல் முறையாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது சுதேச ஊழியர்களுக்கு வேதாகமப்பயிற்சி நல்ல முறையில் கொடுக்கப்பட்டுள்ளது. 2 நாள் உபவாச ஜெபக்கூடுகை நமது சபை மூப்பர்களுக்கும், சுதேச ஊழியர்களுக்கும் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. ஊழியப்பின்தொடர்பணி, பெரியவர் மற்றும் சிறுவர்களுக்கான வேதாகம வகுப்புகள் முறையே நடத்தப்பட்டுள்ளன. பஜ்ஹாரிபேன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மஜிபாயின் எருமை மாட்டை பாம்பு கடித்துவிட்டபோது, விசுவாசிகள் அதற்கென ஜெபித்த ஜெபத்தை தேவன் கேட்டு, அந்த மாட்டை அற்புதமாக உயிர் பிழைக்கச் செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: தட்வி இனமக்கள் மத்தியில் சிறுவர் ஊழியம் நடைபெறவும், அச்சிறுவர்கள் மூலம் அவர்களது பெற்றோர்களும் கர்த்தரை இரட்சகராக ஏற்கவும்; நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் புட்டியா வசாஹட் பகுதியைச் சார்ந்த இஷியாபாய் மனம் மாற; தனது மனைவி மற்றும் சகோதரனால் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்னி கிராம ரமேஷ்பாயை தேவன் ஆவியில் பெலப்படுத்தவும், அவருடன் அவரது குடும்பத்தார் வந்து இணைந்து அவர்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

பாவ்நகர்:

அகிலேஷ் குமார் & கிரண்தேவி

துதிக்க: கடந்த மாதத்தில் கோப்டி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் விளைவாக அங்கிருந்து இம்மாதம் புதிதாக 3 குடும்பங்கள் கிறிஸ்துவின் கிருபைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். லக்கடியா மற்றும் ராஜ்பாரா கிராமங்களில் முதல்முறையாக சுவிசேஷம் 55 நபர்களுக்கு பறைசாற்றப்பட்டுள்ளது. ஒரு குஜராத்தி குடும்பம் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளது. ஜெபத்தின் மூலம் குடிப்பழக்கத்திலிருந்து ஜெயாபேனின் கணவர் விடுதலை பெற்றுள்ளார். கோப்டி கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு வீட்டு ஜெபக்கூட்டத்தில் 5 குடும்பங்கள் பங்கேற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது புதிய விசுவாசிகளில் ஒருவரான ஆஷாபேனின் கணவர் அவர்தன் மனைவியை ஏற்றுக்கொண்டு, அவருடன் இணைந்து வாழ; கோப்டி கிராமத்தைச் சார்ந்த ஒரு புதிய நபரும், பண்டித பின்னணியத்தைச் சார்ந்த குலாப்பாய், அஜய்பாய், ஸ்ரீனிவாஸ் ஆகியோரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சத்தியத்தைக் கேட்டிருக்கும் ராஜ்பாரா மற்றும் லக்கடியா மக்கள் யாவரும் இயேசுவை விசுவாசிக்க; வரும் மாதத்தில் நடைபெற இருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சி மிகுந்த பலனுள்ளதாக அமையவும், இன்னும் சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத அநேக புதிய கிராமங்களுக்கு தேவன் நமது ஊழியர்களை எடுத்துச்செல்லவும் ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெயந்தி கிரேஸ் ஜெபக்குமார்

ஃபோக்டி – தலைமைத்துவப் பயிற்சி மையம்:

ரூபன் ரவி & விஜயராணி ரூபன்

துதிக்க: சஹயாத்ரி பிராந்தியத்தில் இளம் சுதேச ஊழியர்களுக்கு "ஆவியின் வரங்கள்" என்ற தலைப்பில் ஒரு பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. சாத்புரா பிராந்தியத்தைச் சார்ந்த பணித்தளங்களான கவாண்ட், ஜலோட், நஸ்வாடி, போடேலி மற்றும் தபோய் ஆகிய இடங்களிலுள்ள 22 சுதேச ஊழியர்களுக்கு "திருச்சபை மற்றும் ஆராதனை," "பாவம், இரட்சிப்பு, பரிசுத்தம், மகிமைப்படல், நித்திய வாழ்வு மற்றும் ஆக்கினைத் தீர்ப்பு" ஆகிய தலைப்புகளில் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் பயிற்சி வகுப்புகளாக "பொதுவான நல்வாழ்வு" குறித்து நமது 4 மிஷனெரிக் குடும்பங்களுக்கு நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சாத்புரா பிராந்தியத்தைச் சார்ந்த செலம்பா, தெடியபாடா, வாலியா, சொரம்பா மற்றும் கடோத் பணித்தளங்களிலுள்ள சுதேச ஊழியர்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளபடி ஒரு வாரம் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்த; மத்திய மண்டலத்தைச் சார்ந்த 17 மிஷனெரிக் குடும்பங்களுக்கு "தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சி" குறித்து நடத்தப்பட; அலகாபாத் வேதாகம கல்லூரி முதல்வர் வருகை தரவிருக்கிற பட்டமளிப்பு விழாவில் நமது தலைமைத்துவ பயிற்சி மையத்தில் சமையல் பணியாளராகப் பணிபுரிந்து வருகின்ற சுதேச ஊழியர் சஞ்சய் பாயிற்கு அளிக்கவிருக்கிற நற்சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சிக்காக; நிக்கிதாபேனிற்கு சுகப்பிரசவம் வாய்க்க ஜெபிப்போம்.

தாத்ரா & நகர் ஹவேலி

சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

துதிக்க: போன்தாவில் நடைபெற்ற வாலிபர் பயிற்சி நிகழ்ச்சியில் 55 வாலிபத் தலைவர்கள் பங்குப் பெற்றுள்ளனர். வரோலி கிராமத்திலிருந்து 3 குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆற்றுநீருக்குள் தவறி விழுந்த 4 வயது சிறுவன் கார்த்திக் 7 வயது சிறுவனொருவனால் காப்பாற்றப்பட்டுள்ளான். கடந்த 7 வருடங்களாக பிசாசின் பிடியில் சிக்கித்தவித்த சந்தோஷ்பாய் ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த 3 வருடங்களாக சிறுநீர்தொற்றினால் கஷ்டத்தை அனுபவித்த 10 வயது சிறுவன் கமலேஷ் பூரண சுகமடைந்துள்ளான். புல்லோடு சேர்த்து பாம்பையும் அரிந்துவிட்ட ஜீவ்லிபேன் அற்புதமாக அதன் கடியிலிருந்து தப்பிப் பிழைத்துள்ளார். கொடூர வெள்ளப்பெருக்கில் சிக்கித்தவித்த சோனியாபாயை தேவன் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: நடக்கவும் பேசவும் இயலாதபடி இருக்கும் 4 வயதான சுமித் அற்புத சுகம் பெற; காதுவி மனநோயிலிருந்தும், வேதிகாபேன் வலிப்புநோயிலிருந்தும், ராதாபேன் தைராய்டு பிரச்சனையிலிருந்தும் சுகமடைய; சீகன்பாய் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்க; ஹர்ஷத்பாய், ராஜேஷ்பாய், ஜர்வல் கிராம ஈஸ்வர்பாயும் கிரமமாக ஆலய ஆராதனையில் பங்கேற்க ஜெபிப்போம்.

அக்டோபர் 24
திங்கள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பியூலா ஜெபக்குமாரி பர்னபாஸ்
திருமதி. சீத்தாமணி கிஸ்கு

கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

துதிக்க: சுவிசேஷத்தின் மூலம் புதிதாக 163 நபர்கள் கிறிஸ்துவைக்குறித்து கேள்விப்பட்டுள்ளனர். பாவனார் கிராமத்தில் நடத்தப்பட்ட வாலிபர் கூடுகையில் 45 வாலிபர்கள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். ராதன்பேன் காது பிரச்சனையிலிருந்தும், ரவினாபேன் பெண்ணியப் பிரச்சனையிலிருந்தும், பங்கஜ் தோல் வியாதியிலிருந்தும் மற்றும் 18 வருடங்களாக கஷ்டப்பட்டு வந்த காமு மனஉளைச்சலிலிருந்தும் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பிரியான்சி தீய ஆவியின் கட்டிலிருந்து விடுபட; நமது புதிய விசுவாசியான ரமேஷ்பாயின் குடும்பத்தில் காணப்படும் ஆண் குழந்தை சாவு சாபத்திலிருந்து அக்குடும்பத்தினர் விடுதலை பெற; 3 வருடங்களாக சீழ் பிடித்திருக்கும் புண்களினால் வேதனைப்பட்டுவரும் சீதாராம்பாயிற்கு சுகம் கிடைக்க; தீபிகாபேன், டேனியல்பாய், வனிதாபேன் மற்றும் கீதாபேனிற்கு இருக்கும் வயிற்றுக் கட்டிகளிலிருந்தும், ஈஸ்வருக்கு நெஞ்சு வலியிலிருந்தும் சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

மகாராஷ்டிரா

அக்கல்குவா:

ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

துதிக்க: புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 5 நபர்கள் தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். 2 புதிய ஏற்பாடுகளும், 6 வேதாகமங்களும் மக்கள் மத்தியில் பகிரப்பட்டுள்ளன. 6 கிராமங்களில் பின்தொடர்பணி செய்யப் பட்டுள்ளது. சந்தீப், யோகேஷ், ஜாலாபாய், சுமித்ராபேன், அனிதாபாய், கெம்யாபாய் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து மீட்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வரும்நாட்களில் நடக்க விருக்கும் பெண்கள் மேளா, இரவுநேர ஜெபக்கூட்டங்கள், வாலிபர் கூடுகை அனைத்தும் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருக்க; ரவீந்திரன் மற்றும் தீபக் தீய ஆவியின் பிடியிலிருந்து மீட்புப்பெற; ஆஸ்துமா வியாதியிலிருந்து ஜிர்மி தாதாவும், பக்கவாதத்திலிருந்து காளிபாய் மற்றும் அமர்சிங்கும், தைராய்டு பிரச்சனை யிலிருந்து விவேக்கின் தாயாரும் சுகமடைய; யாரெல்லாம் ஆராதனையில் கலந்துகொண்டார்களோ அவர்களெல் லாரும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

சரீர கட்டியும், கயிறு கட்டும்!

மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித்தளம். பீம்தா கிராமத்தைச் சேர்ந்த 36 வயது அன்ஜிதா 8 வருடங்களாக கழுத்தில் உண்டான கட்டியினால் மிகவும் அவதிப்பட்டு வந்தார். பின்பு தார் மருத்துவமனையில் அதற்கான அறுவை சிகிச்சையை மேற்கொண்டு நன்கு சுகமடைந்தார். ஆனால், எதிர்பாராதவிதமாக இவர் பைத்தியம் பிடித்தவர்போல் மாறி, தனது உடைகளை கிழித்துக்கொண்டு திரிந்ததினால் கயிறுகளால் கட்டி வைக்கப் பட்டார். ஒருநாள் நமது விசுவாச சகோதரிகள் இவரைச் சந்தித்து இவருக்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். இன்று தேவகிருபையால் இவர் பூரண சுகமாகி, நமது ஜெபக்கூடுகை களில் தவறாமல் வந்து கலந்துகொள்கிறார். அல்லேலூயா!

அக்டோபர் 25
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பிரேமா ராஜதுரை

சுர்கானா:

விஜய்பாபு & தேவ கிருபை

துதிக்க: புதிதாக 13 கிராமங்களில் இயேசுவின் அன்பு நற்செய்தியாக அறிவிக்கப்பட்டுள்ளது. 5 நபர்கள் புதிதாக கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். பின்மாற்றமடைந்திருந்த 2 குடும்பங்கள் கிறிஸ்துவை மீண்டும் விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். ரேகாபேன் பிள்ளைப்பேற்றினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார். சிண்டே கிராமத்தில் சுவிசேஷ வாசல் திறக்கப்பட்டுள்ளது. யாரோ ஒரு சிலரால் மன்தா பேனின் கால்நடைப் பிராணிகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டப்போதிலும், அவரது ஜெபத்தினால் மறுநாளே அவைகள் சுகத்துடனும் ஆரோக்கியத்துடனும் காணப்பட தேவன் தந்துள்ள கிருபைக் காகத் துதிப்போம்.

ஜெபிக்க: திருமணமாகி 4 வருடங்கள் கடந்தபின்பும் குழந்தையில்லாமல் இருக்கும் தீரஜ் தால்வியின் குடும்பத்தில் குழந்தை பாக்கியம் அருளப்பட; கண்பார்வையின்மை மற்றும் வெண் குஷ்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் கிருஷ்ணாபாய் மற்றும் ஹெருபேன் முழுசுகம் பெற; கடந்த 3 வருடங்களாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்டுவரும் 4 வயது சிறுவன் சுனிலுக்கு தேவன் மான்கால்களைப் போன்ற வலுவான கால் களைத் தந்து நடக்கச் செய்ய; பொரிகவாதா ஆலயக்கட்டுமானப்பணி சீக்கிரத்தில் முடிவடைய ஜெபிப்போம்.

தலாசரி:

மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

துதிக்க: புதிதாக 2 கிராமங்களிலிருந்து 25 நபர்கள் இயேசுகிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 8 இடங்களில் நடைபெற்ற ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகள், 4 இடங்களில் நடைபெற்ற பெண்கள் கூடுகைகள், 4 இடங்களில் நடைபெற்ற ஞாயிறு வேதவகுப்புகள் யாவையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பிறரால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஒசர்விகாரா கிராம ஆராதனை மீண்டும் தொடங்கப்பட்டு, அதில் நமது விசுவாசிகள் கலந்து கொண்டு தங்களது விசுவாசத்தை உறுதி செய்ய; வடா மற்றும் கட்கோனா கிராமங்களில் இரவு ஜெபக்கூட்டங்கள் நடத்த திறந்தவாசல் கிடைக்க; சுவிசேஷத்தைப் பரப்ப தலாசரி பணித்தள விசுவாசிகளால் உருவாக்கப்பட்டுள்ள குழு அங்கத்தினர்களை தேவன் வல்லமையாக எடுத்து பயன்படுத்த; நமது விசுவாசிகளிடையே ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக ஜெபிப்போம்.

ஜெபத்தினால் நின்ற உதிரப் போக்கு!

சத்தீஸ்கார், சம்பா பணித்தளம், ப்டஹரா கிராமத்திலுள்ள ரேஷ்மி என்ற பெண் அநேக மாதங்களாக உதிரப் போக்கினால் கஷ்டப்பட்டாள். பின்பு ஒரு நாள் அவளும், மதுப் பழக்கத்திற்கு அடிமையாகி இருந்த அவளது கணவரும் நமது சக்கர் பீடா திருச்சபையின் ஆராதனைக்கு வந்தனர். நமது ஊழியர்கள் அவர்களுக்காக ஜெபித்த போது, தேவன் இருவரையுமே விடுவித்தார். அல்லேலூயா!



உபவாச ஜெபநாள்

ஆலப்பள்ளி – ஆஷீர்வாத் விடுதி:

குல்தீப் சிங் & குர்பிரீத் கௌர்

துதிக்க: ஊழியப்பின்தொடர்பணி 42 கிராமங்களில் நடைபெற்றுள்ளது. 9 புதிய குடும்பங்கள் நமது ஜெபக்கூடுகைகளில் வந்து கலந்து கொள்கின்றனர். 70 சிறியளவு ஜெபக்குழுக்கள் நடத்தப்பட்டுள்ளன. 122 வேதாகம வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த 30 வருடங்களாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்த துட்ஷிராமை தேவன் அதிலிருந்து விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: சேட்டன், சுனில் கெடாம், சிண்டுபாய், அவினாஷ் பகிரத் மற்றும் கணேஷின் குடும்பங்கள் இரட்சிக்கப்பட; 6 வயது சிறுவனான அர்பன் மட்டாமி சீராக நடக்கவும், பேசவும், சாப்பிடவும் ஆரம்பிக்க; ஆத்தும ஆதாயப்பணியில் திருச்சபை மூப்பர்கள் உற்சாகமாக ஈடுபட; கணேஷ் மூச்சுத்திணறலிலிருந்தும், மன்னிபாய் சரியாக நடக்க உட்கார இயலாமல் இருக்கும் நிலையிலிருந்தும் சுகம் பெற; பந்துக்பள்ளி மற்றும் சித்தகனேர் ஆகிய பகுதிகளில் ஆலயங்கள் கட்ட நினைத்திருக்கும் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்பட ஜெபிப்போம்.

முக்காடா: M. சங்கர் & ஆனந்தி

துதிக்க: சிஞ்சுதாரா மற்றும் டொன்டுல் கிராமங்களில் சுவிசேஷம் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மொரண்டா கிராமத்தில் நடத்தப்பட்ட பௌதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூட்டத்தில் 40 பேர் கலந்து கொண்டு தேவ வார்த்தையைக் கேட்டுள்ளனர். போஷிரா திருச்சபையில் வைத்து நடைபெற்ற மூப்பர்களுக்கான பயிற்சிக்கூடுகையில் 24 மூப்பர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர். தோடர்பாடாவில் இயேசுத்திரைப்பட ஊழியம் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இங்குள்ள சபைகளில் வாலிபர் ஐக்கிய கூடுகைகள் நடைபெற; தீய ஆவியின் கட்டிலிருந்து சுனில் விடுவிக்கப்பட; சாவர்பாடா கிராம விட்டல் காகா காசநோயிலிருந்து சுகம் பெற; சாவர்பாடா கிராம ராஜுவின் மனைவி லலிதா அதிக இரத்தப்போக்கு பிரச்சனையிலிருந்து முற்றிலுமாய் குணமடைய; நமது பகல்நேர பராமரிப்பு பிள்ளைகளைப் பாம்புக்கடியிலிருந்தும், பிற தீய சக்திகளின் போராட்டங்களிலிருந்தும் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

அவர் கட்டளையிட அமர்ந்தது!

மத்தியப் பிரதேசம், நேப்பாநகர் பணித்தளம். மஞ்ச்ரோத் கிராமத்தைச் சார்ந்த லதாபாய், நமது விசுவாசி. இவர் பொரி மற்றும் வறுத்த சன்னா கடலையை விற்பவர். இது இவர்களுடைய பாரம்பரிய வியாபாரம். ஒருநாள் பர்கன்பூர் என்ற இடத்தில் இவ்வுணவுப் பொருட்களை விற்பதற்காக அவைகளைக் கூடையில் எடுத்துக்கொண்டு, பேருந்தில் இவர் பயணம் செய்து கொண்டிருந்தார். வழியில் ஒரு பயணி தனது ஆட்டுடன் பேருந்தில் ஏறினார். அந்த ஆடு பேருந்தில் அங்குமிங்குமாக ஓடி, சிறுநீரும் மலமும் கழித்துக்கொண்டிருந்தது. இதைப்பார்த்த லதாபாயிற்கு தனது உணவுப் பொருட்களை அந்த ஆடு சேதப்படுத்தி விடுமோ என்ற அச்சம் எழுந்தது. எனவே, இவர் மனதிற்குள்ளாக அந்த ஆடு அமைதியாக ஓரிடத்தில் அமர இயேசுவிடம் சிறிய வேண்டுதல் செய்தார். என்ன ஆச்சரியம்! ஜெபித்தவுடனேயே அந்த ஆடு லதாபாய் இறங்குமிடம் வரும்வரை அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்தது. அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண் M.

காண்ட் பாரா:

பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி

துதிக்க: சுவிசேஷம் 10 கிராமங்களில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 6 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளனர். 9 இடங்களில் விசுவாசிகளுக்கான இரவு கூட்டங்களும், 6 கிராமங்களில் பின்தொடர்பணி ஊழியங்களும், 4 இடங்களில் 3 நாள் உபவாசக் கூடுகைகளும், 2 இடங்களில் வாலிபர் கூடுகைகளும், 3 இடங்களில் வெளிப்புற சந்திப்பு இரவு கூட்டங்களும் நடைபெற்றுள்ளன. பின்மாற்றமடைந்திருந்த 2 குடும்பத்தினர்கள் நமது ஆலய ஆராதனைகளில் தவறாமல் வந்து கலந்துகொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: டோங் கிராம ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிவடையவும், அது தேவ நாம மகிமைக்காக விரைவில் பிரதிஷ்டை செய்யப்படவும்; கணேஷ், அமர்சிங், சினுபேன், பீத்துபேன் மற்றும் அசோக்கின் குடும்பம் யாவும் கிறிஸ்துவின் கிருபை நிழலுக்குள் வர; விலாஸின் குடும்பத்தில் தேவ சமாதானம் தங்கியிருக்க; நவாப்பூர் பணித்தளத்திலிருந்து பிரிந்துச்சென்ற திருச்சபையினர் மீண்டும் வந்து ஐக்கியப்பட; ஸ்ரீவ், கட்வாக்லி, பலம்பரா, கரோத், வத்ஃபாலி, கோல்தா ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கு வாசல்கள் திறக்கப்பட; வந்தனா மற்றும் துர்காபேன் வயிற்றுக்கட்டியிலிருந்தும், ஜெய்சிங் மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், அமர்சிங் நெஞ்சு வலியிலிருந்தும் மற்றும் பிரபாகர் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

சாலீஸ்காவ்:

திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

துதிக்க: புதிதாக 2 கிராமங்களில் சத்திய வார்த்தை சுவிசேஷமாகப் பகரப்பட்டுள்ளது. சுனிதா அற்புதமாக ஜெபத்தின் மூலம் பிசாசு பிடியிலிருந்தும், புற்றுநோயிலிருந்தும் சுகவிடுதலை பெற்றுள்ளார். 2 புதிய நபர்கள் இயேசுவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆஸ்துமா வியாதியிலிருந்து ருக்மாயியும், கல்லீரல் தொற்றுநோய் மற்றும் நெஞ்சு வலியிலிருந்து பிரமிளாவும் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்ட நல்ல நிலம் கிடைக்க; இங்கு ஊழியத்தைத் துரிதமாகச் செய்ய அர்ப்பணிக்கப்பட்ட சுதேச ஊழியர்கள் பணியமர்த்தப்பட; அதிக மழைக்காலங்களில் நமது விசுவாசிகள் பாதுகாக்கப்படவும், நன்கு பராமரிக்கப்படவும்; அங்குஷ் காது கேளாமை பிரச்சனையிலிருந்தும், மனோஜ்பாய் வலிப்பு நோயிலிருந்தும் சுகம் பெற; நமது சுதேச ஊழியரின் மனைவி ஒரு மாதக்காலமாக நடக்க முடியாமலிருக்கும் நிலையிலிருந்து மீண்டும் நன்றாக நடக்க ஆரம்பிக்க ஜெபிப்போம்.

அக்டோபர் 28
வெள்ளி

நேர் & கான்தேஷ்பீலி வேதாகம மொழிப்பெயர்ப்புப்பணி:

அஜய்குமார் லிமா & பிரத்யாசினி

துதிக்க: இயேசுவின் நற்செய்தி 35 கிராமங்களில் முதல்முறையாகக் கூறப் பட்டுள்ளது. 5 புதிய நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதோடு, அவருடைய விசுவாச மந்தைக்குள்ளும் தஞ்சம் புகுந்துள்ளனர். கலாம்பீர் கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி தொடங்கப் பட்டுள்ளது. கணேஷ்வர் என்ற சிறுவன் சிக்கலான இருதய நோயினால் பாதிக்கப் பட்டிருந்தபோது, விசுவாசிகளின் ஜெபத் தினால் அவன் நன்கு சுகம் பெற்றுள்ளான். லலிதா என்ற நமது இளம் விசுவாசி தாதியர் படிப்பிற்கு வாய்ப்பு தேடிக் கொண்டிருக்கும்போது திடீரென மன நோயினால் பாதிக்கப்பட்டு, எவ்வித மருந்தி னாலும் குணப்படுத்த இயலாது என்ற நம்பிக்கையற்ற சூழ்நிலை உருவான போதிலும் விசுவாசிகள் அவருக்காக ஏறெடுத்த சிறப்பு ஜெபத்தின் மூலம் அவர் மீண்டும் சுகம் பெற்றுள்ளார். பாம்பு கடித்தபோதும் ஜெபத்தின் விளைவாக தீபா அதிசயமாக உயிர்த்தப்பி பிழைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்

ஜெபிக்க: நடந்துகொண்டிருக்கும் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்புப்பணி விரைவில் நடந்தேற; எல்லா ஆராதனைக்குழுக் களிலும் சபைகளிலும் காந்தேஷ்பீலி மொழியின் புதிய ஏற்பாடுகள் பயன்படுத்தப் பட; காந்தேஷ்பீலி மொழியில் ஒலிவழி வேதாகமப்பணி விரைவில் முடிக்கப்பட்டு, வெளியிடப்பட; மல்பூர் மற்றும் காதிபாடா கிராமங்களில் நடைபெற்றுவரும் தற்காலிக ஆலயம் அமைக்கும்பணி சீக்கிரத்தில் நிறைவுபெற; நாகை மற்றும் கோக்லா கிராமங்களில் ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பிக்க; அஞ்சலி காது பிரச்சனையிலிருந்தும், அமித் கீழே விழுந்ததினால் ஏற்பட்டுள்ள காயங் களிலிருந்தும், ராஜ்பாய் இனந்தெரியாத நோயிலிருந்தும், குலாப் பிம்பள்சி பக்கவாத நோயிலிருந்தும் பூரண குணமடைய ஜெபிப்போம்.

திரிந்தவர் திருந்தினார்!

மகாராஷ்டிரா, ஜிம்மலாகட்டா பணித்தளம். தான்வாலா கிராம 30 வயது பெண்மணி சுப்பு, திருமணமாகி 3 குழந்தைகளுக்கு தாய். 8 வருடத்திற்கு முன்பு திருமணமாகும்போது நற்குணமுடையவராக இருந்த இவர், திடீரென திருமணத்திற்குப்பின் சில வருடங்களில் மிகவும் மாறிப்போனார். இவர் தன் கணவரைக் கொல்ல முயற்சித்ததால், இவரது கணவர் இவர் மாந்தி ரீகக் கட்டிற்குள் இருப்பதாக நினைத்து பயந்து, வீட்டை விட்டு வெளியேறி, வேறுபெண்ணை திருமணம் செய்து கொண்டார். சுப்புக்கு புத்தி சுயாதீனம் முற்றிப்போய், அநேக முறை காடுகளுக்குள்ளும் நெடுஞ்சாலையிலும் சுற்றித்திரியலானார். அவ்வாறு ஒருமுறை ஜல்வானியா செல்லும்வழியில் இவர் திரிந்துகொண்டிருப்பதைப் பார்த்த நமது விசுவாசியொருவர், இவரைத் தம்முடன் அழைத்து வந்து சிலோட்டியா என்ற இடத்தில் தங்க வைத்தார். பின்பு இவரை அழைத்துக்கொண்டு 2022 ஆகஸ்டு 22-24 வரை நடைபெற்ற 3 நாட்கள் தேசிய உபவாச ஜெபக்கூடுகைக்குச் சென்றார். அந்நாளில் இவர் சத்துருவினால் மிகுந்த வேதனைக்குள்ளானபோது நமது மிஷனெரிகளும் திருச்சபையாரும் இவருக்காக ஜெபித்த ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு, தேவன் இவரை சத்துருவின் போராட்டத்தி லிருந்து விடுவித்தார். ஒருவாரத்திற்குள்ளாகவே இவர் முழுவதுமாகக் குணமாகி, தற்போது தனது பணியைத்தானே செய்து கொண்டு, தேவனிடத்தில் ஜெபித்தும் அவருக்கு நன்றி செலுத்தியும் வாழ்ந்துவருகின்றார். அல்லேலூயா!

அக்டோபர் 29
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹட்நெயில்ஹிங் தல்சாகம்

ஜிம்மலாகட்டா:

ஸ்ரீனிவாசா & சுனிதா

துதிக்க: இப்பணித்தளத்தில் 170 நபர்கள் புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். மந்திரவாத கட்டிலிருந்து கௌரய்யா விடுவிக்கப்பட்டு, அவரது பெலவீனமான சரீரம் தற்போது நன்கு பெலனடைந்துள்ளது. ஸ்துதி மல்லேஷ் வேலதி உள்நாக்கு அலர்ஜி பிரச்சனையிலிருந்து பூரண குணமடைந்துள்ளார். மாரபள்ளி கிராமத்தில் பெண்கள் கூடுகை சிறப்பாக நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மாரபள்ளி, எரகடா மற்றும் பெர்காபட்டி கிராமங்களில் கிறிஸ்துமஸ் நாட்களுக்கு முன் பகுதி-நிரந்தர அளவிலான ஆலயங்கள் கட்டி முடிக்கப்பட; தொண்டை சம்பந்தமான பிரச்சனையிலிருந்து சுதாகர் மாதவியும், பக்கவாதநோயிலிருந்து ரத்னாபாய் பரதேசியும், மனவளர்ச்சியின்மையிலிருந்து பிரகன்யாவும், மனஉளைச்சல் பிரச்சனையிலிருந்து சாராதாவும் சுகம் பெற்று, அவர்களுடைய முழுக் குடும்பத்தினர்களும் இயேசுவின்மீது நம்பிக்கை வைக்க; கோண்ட்ஸ், மடியா கோண்ட்ஸ், மன்யா கோயா, நதக்கானி மற்றும் கொமட்டிஸ் சமுதாயத்தினர் இயேசுவை இரட்சகராக ஏற்க; மெர்பள்ளி, சிரபள்ளி, எரகடா, பெர்காபட்டி, தர்ஷாவாடா, தச்சிலிபிட்டா மற்றும் உமனூர் கிராமங்களிலுள்ள திருச்சபையினர் ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட; மல்லையா பொர்குத், ஹன்ஸக்கா, பிரியங்கா ஆகியோர் கர்த்தரை உறுதியாக விசுவாசிக்கவும், அவர்களது முழுக்குடும்பமும் கர்த்தரால் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

கர்நாடகா

கஜேந்திரகடா:

மஞ்ஜ்யா நாயக் & ரத்னா

துதிக்க: புதிதாக 4 விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 3 கிராமங்களில் முதல் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களும், 5 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. 20 இடங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் செய்யப்பட்டுள்ளன. 35 வீடுகள் ஊழியத்தின் பொருட்டு சந்திக்கப்பட்டுள்ளன. 10 இடங்களில் வெளிப்புற சந்திப்பு இரவு கூட்டங்களும், 3 தேடுவோர் முகாம்களும், 70 நபர்களுக்கு தனித்தாள் சுவிசேஷப்பணியும் மற்றும் 6 வேதாகம வகுப்புகளும் நடத்தப்பட்டுள்ளன. தீய ஆவியின் பிடியிலிருந்து கீதா விடுவிக்கப்பட்டுள்ளார். ரேணுகாம்மாவின் இரு மகன்களுக்கும் அரசாங்க விடுதிகளில் சேருவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வரும்நாட்களில் நடக்க விருக்கும் ஆவிக்குரிய கூடுகைகளுக்காக; கர்நாடகா நிர்வாக சேவை (KAS) தேர்வு முடிவுகளுக்காகக் காத்திருக்கும் பிரவீனுக்காக; கஸ்தூரி மற்றும் அவரது மாமியாருக்கு இருக்கும் நிலப்பிரச்சனை சமாதானமாய் முடிவடைய; குல்ஜம்மாவிற்கு வயிற்றுக்கட்டி பிரச்சனையிலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. எஸ்தர் G.

ஆந்திரப் பிரதேசம்

சில்லமத்தூர்:

பால் ரவிராஜ் & ஹேமலதா

துதிக்க: கொடிகொண்டா ஆலயத்தில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 52 வாலிபர்கள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். 4 பேர் புதிதாக கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். கிராமத்தலைவர் மற்றும் கிராம மக்களனைவரும் சூழ்ந்திருக்க சுதந்திர தின விழா அன்று நமது விசுவாசிகள் சுதந்திரப் போராட்ட வீரர்களைப்போல உடையுடுத்தி, அவ்விழாவைச் சிறப்பித்தனர். கொடிகொண்டா ஆலய வளாகத்தில் ஆழ்துளை கிணறு போடப்பட்டு, அதோடு நீரில் மூழ்கியிருக்கும் வகையில் மோட்டார் அமைக்கும் பணியும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. குர்னூல் சிறையில் தவறான வழக்கு சம்பந்தமாக அடைக்கப்பட்டிருந்த ஜாண் விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரோதம், பண்டபள்ளி, சனிபள்ளி, புதலி, கோடூர், தோப்பு மற்றும் சோமகட்டா கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவதற்கான நிலங்கள் விலைக்கு வாங்கப்பட; இப்பணித்தள திருச்சபைகள் தன்னிச்சையாக இயங்கத்துவங்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் ஊழிய நிகழ்ச்சிகள் மூலம் நமது ஊழியர்கள் இம்மாத ஊழிய இலக்குகளை எட்டிட ஜெபிப்போம்.

குப்பம்:

பால் குப்புசுவாமி & சைலா

துதிக்க: ஞாயிறு ஆராதனைகள் நமது 10 திருச்சபைகளிலும் நேர்த்தியாக நடைபெற்று வருகின்றன. 15 இடங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் செய்யப்பட்டுள்ளன. 75 கிராமங்களில் வீடு சந்திப்புகள் நடைபெற்றுள்ளன. 4 கிராமங்களில் முழு இரவு ஜெபக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 6 கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு இரவு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 3 நபர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். சாந்திபுரம் சபையில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 60 வாலிபர்கள் கலந்து கொண்டு ஆவிக்குரிய பயன்பெற்றுள்ளனர். அஞ்சலம்மா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இனிவரும் நாட்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள கூட்டங்களுக்காக; சிவன்னாவின் குடும்பம், லலிதாம்மா, அசோக்கின் குடும்பம், பாண்டுவின் குடும்பம், ரத்னம்மா ஆகியோர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் அடியெடுத்து வைக்க; ராமக்கா மற்றும் அஞ்சலம்மா இருதய பிரச்சனையிலிருந்தும், ஹரிஷ் புற்றுநோயிலிருந்தும், கீதா வாதநோய்ப் பிரச்சனையிலிருந்தும், ராஜா & ஜெயா எய்ட்ஸ் நோயிலிருந்தும் சுகம் பெற; ஹரிஷின் குடும்பத்தில் தேவ சமாதானம் உண்டாக ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுச்சானோ யந்தன் த்சாங்சே சங்தம்

தமிழ்நாடு

தமிழ்நாடு மண்டல அலுவலகம்:

ஆல்பின் & விஜயராணி

துதிக்க: இம்மாதம் 28 நபர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை அவர் நாமத்தில் அறிக்கை செய்துள்ளனர். நமது விசுவாசிகள் தங்களது வீட்டு விழாக்களை கிறிஸ்தவ முறையில் நடத்துவதோடு, அவ்விழாக்களுக்கு கிறிஸ்துவை அறியாத தங்களது உறவினர்களையும் நண்பர்களையும் அழைப்பித்து, அவர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவித்து வருகின்றனர். எக்கந்தஹள்ளி கிராமத்தில் இயேசுத் திரைப்பட ஊழியம் நடத்த அங்குள்ள பஞ்சாயத்து தலைவரிடம் அனுமதி பெற்று, அம்முழு கிராமத்தினரும் இயேசுத் திரைப்படத்தைக் கண்டு பயனடைந்ததோடு, மேலும் 11 கிராமங்களில் இத்திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகள் நடத்தி முடிக்கவும் தேவன் கிருபை பாராட்டியுள்ளார். மருத்துவ முகாம்கள் மூலம் நமக்குப் புதிய தொடர்பாளர்கள் ஊழியத்திற்குக் கிடைக்கின்றனர். 3 நாள் உபவாச ஜெபக்கூடுகை பெரியமலையில் வைத்து சிறப்பாக நடந்தேறியுள்ளது. 4 நபர்கள் புதிதாக நமது ஆலய ஆராதனைகளில் பங்கேற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது ஆலய ஆராதனைகளில் பங்கேற்கும் அந்த 4 நபர்களும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய; தமிழ்நாடு மண்டலப்பிரிவின் கீழ் உள்ள 35 பணித்தளங்களைச் சார்ந்த 103 ஆலயங்களில் கிரமமாக ஆராதனைகள் நடத்தப்படவும், அங்குள்ள ஊழியப் பணிகள் ஆவிக்குரிய பலனுள்ளதாகக் காணப்படவும்; சிறிய ஜெபக்குழு மற்றும் வேதாகம வகுப்புக்குழுக்கள் எல்லா திருச்சபைகளிலும் ஆரம்பிக்கப்பட; தங்கள் வீடுகளில் உறவினர்களையும், நண்பர்களையும் கூடிவரச் செய்து விழாக்களை நமது விசுவாசிகள் நடத்தும் போது, அவ்விழாக்களில் அவர்கள் எடுத்துரைக்கும் சுவிசேஷ வார்த்தைக்கு அங்குக்கூடிவரும் மக்களின் மனக் கண்கள் திறக்கப்படவும், அவர்கள் யாவரும் இயேசுவை இரட்சகராக ஏற்கவும்; நமது பெண் விசுவாசிகளின் வீடுகளிலுள்ள ஆண்மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; நமது இளம் விசுவாசிகளுக்கு தகுந்த வேலைவாய்ப்புகளும், வாழ்க்கைக்துணைகளும் அமைய ஜெபிப்போம்.

தொந்தரவு மாறி, தேவ நாமம் மகிமைப்பட்டது!

சத்தீஸ்கட், பாண்டே பணித்தளம். பிப்லி கிராமத்தைச் சேர்ந்தவர் புத்துலெக்மி. இவர் தீய ஆவிகளின் தொந்தரவிற்கு ஆளானதினால் இவருடைய வயிறு வீக்கம் பெற்று சரீரம் விரிந்தது. எனவே, அக்கிராம மக்கள் இவருக்கு உதவ நினைத்து பல்வேறு சிகிச்சை முயற்சிகளைச் செய்தும், அனைத்தும் வீணாகிப்போயின. இறுதியில் அக்கிராமத்தலைவர் இவருக்காக ஜெபிக்க நமது மிஷனெரிகளையும், சுதேச ஊழியர்களையும் அழைத்தார். அவர்கள் வந்து ஊக்கமாக ஜெபித்தபோது, இவர் முற்றிலும் சுகமடைந்தார். அக்கிராம மக்கள் மத்தியில் தேவ நாமம் மகிமைப்பட்டது. அல்லேலூயா!

நிதி அலுவலகத்திலிருந்து

இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

Online Banking

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

ICICI Bank UPI ID: fmpb01@icici

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

FMPB SB COLLECT என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.



In google search type: **FMPB SB Collect**
it will show **State Bank Collect - Online SBI**
Tick the box
☑ (Click check box to proceed for payment)
Proceed
State of Corporate / Institution: Select **All India**
Type of Corporate / Institution:
Select **Religious Institutions**
Go
Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**
Submit
Select Payment Category: **Donations and subscriptions**

380 மிஷனெரி ஆல்பம்

தமிழ்நாடு, மதுரையில் வாழும் கிறிஸ்தவத் தம்பதியரான திரு. தினகர் & திருமதி. ராணி அவர்களுக்கு மூத்த மகனாக 13.05.1976-ல் சகோ. மித்ரன் பிறந்தார். இவரது குடும்பத்தில் காணப்பட்ட கிரமமான வேத வாசிப்பு மற்றும் குடும்ப ஜெபங்கள் தவிர, இவர் அனைத்து ஞாயிறுகளிலும் நடைபெறும் ஜெபக்கூடுகைகளிலும் தன்னை ஒரு அங்கமாக ஈடுபடுத்திக் கொண்டார். இவர் தனது திருச்சபை வாலிபர் சங்கத்தின் மூலம் திருச்சபைச்செயல்பாடுகளிலும், கிராம ஊழியப்பணிகளிலும் மிக உற்சாகமாக ஈடுபட்டு வந்தார்.

எனினும், இவர் ஒரு பெயர் கிறிஸ்தவராகவே வாழ்ந்து வந்த நிலையில், 1999-ம் ஆண்டில் நமது ஊழியர் அருட்திரு. அறிவர். ஜே.ஜே. ஹாரிஸ் மூலம் ஊக்குவிக்கப்பட்டு, அந்நாட்களில் கோவையில் நடைபெற்ற நமது மாநில முகாமில் மதுரை - சகல பரிசுத்தவான்களின் ஆலயச்சபை வாலிபர்களோடு பங்கேற்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்; அம்முகாமின் 2-ம் நாள் சந்தியா வேளையில், நாடக ஒலி ஒளி காட்சி மூலம் பகரப்பட்ட நமது ஊழியர்களின் வாழ்க்கை வரலாறுகள் மற்றும் லூக்.10:2-ன் அடிப்படையில் டாக்டர். சாம் கமலேசன் அண்ணன் பிரசங்கித்த தேவச்செய்தியின் வாயிலாகவும் ஈர்க்கப்பட்டு, கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அன்றிலிருந்து இவரது ஜெபவாழ்வு மாறினது. இவரும் தன் வாழ்வை முழுநேர ஊழியராகக் கர்த்தருக்கென சேவை செய்ய அர்ப்பணித்தார். இருந்தாலும் நாளடைவில் இவர் தனது ஊழிய அழைப்பை மறந்து, உலகப்பணியில் இணைந்தார். ஆயினும், எப்பணியிலும் இவரால் நிரந்தரமாக இருக்க இயலாது போனதால், இவர் தனது ஆலயத்தில் நடைபெற்ற வாலிபர்கூட்டத்தில் பங்குப்பெற்றபோது, தேவன் தமது அழைப்பை மீண்டுமாக அதே லூக்.10:2-ன் மூலம் இவருக்கு ஞாபகப்படுத்தினார். ஆதலால், இவர் மறுபடியும் தன் வாழ்வை ஊழியம் செய்ய அர்ப்பணித்தார். பின்பு அதில் தேவ வழிநடத்துதலுக்காகக் காத்திருந்தபோது, FMPB மதுரை முன்னேற்றப்பணி அலுவலகத்தில் தன்னார்வ ஊழியராக இணையும்படி அருட்திரு. ஹாரிஸ் இவரை அழைத்ததின் நிமித்தம், இவர் 4 1/2 வருடங்கள் முன்னேற்றப்பணி ஊழியத்தில் பணியாற்றினார்.

குறிப்பாக அந்நாட்களில் இவர் நமது மதுரை ஜெபக்குழுத்தலைவர்களோடு சேர்ந்து ஊழியப் பணித்தளங்களுக்குச் சென்று, அங்கு நமது விசுவாசிகளின் வாழ்வில் நிகழும் இயேசுவின் அற்புத சாட்சிகளைக் கண்டும் கேட்டும், FMPB-யின் மூலம் முழுநேர ஊழியராக தேவப்பணியாற்ற தீர்மானித்தார். இவரது தாயாரும் இவரை அவர் தன் கருவில் சுமக்கும்போதே முழுநேர பணிக்கென அர்ப்பணித்திருந்தார். ஆகவே, மே மாதம் 2007-ல் இவர் நமது இயக்கத்தில் ஊழியராக இணைந்தார்.

பின்பு இவர் 2003-ம் ஆண்டிலிருந்து 2007-ம் ஆண்டு வரை ஜார்க்கண்ட்டிலுள்ள மால்தோ இனமக்கள் மத்தியில் பணிபுரிந்து வந்த நமது ஊழியர் சகோதரி. நிர்மலாவை 29.06.2007-ல் தேவ சித்தப்படி திருமணம் செய்து கொண்டார். இச்சகோதரி திருநெல்வேலி மாவட்ட சுரண்டையைச் சார்ந்த திரு. பக்தசிங் & திருமதி. எபனேசர் என்ற கிறிஸ்தவத் தம்பதியருக்கு மூத்த மகளாக 24.09.1978-ல் பிறந்தார். இவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தனது 8-ம் வகுப்புப் படிக்கும் பருவத்தில் ஒரு SU முகாமில் தன்னை தேவப்பணிக்கென முழுநேர ஊழியராக ஒப்புக்கொடுத்தார். பின்பு இவர் இன்ஜினியரிங் துறையில் டிப்ளமோ படிப்பை சேலத்தில் முடித்தார். ஆனால், இவர் தனக்கான தேவ அழைப்பை மறந்து விட்டு, உலகப்பணிக்கான நேர்காணல்களில் கலந்து கொள்ள முயலும்போது, அநேக தடங்கல்களைச் சந்தித்தார். பின் அதன்பொருட்டு லூக்.9:60,62-ம் வசனங்களின் மூலம் மீண்டும் தேவ அழைப்பைத் தனக்குள் திரும்பப்பெற்றார். பின்பு அதற்கான தேவ வழிநடத்துதலுக்குக் காத்திருக்கும்போது, ஒரு முகாமில் இவர் பங்கேற்க நேரிட்டது. அங்கு இவர் ஊழியர் ராக்லாண்ட் ஜயரின் வாழ்க்கை சரிதையின் மூலம் ஈர்க்கப்பட்டு, தனக்குரிய ஊழிய அழைப்பை உறுதி செய்து கொண்டார். பின்னர் 2001-ம் ஆண்டு நமது இயக்கத்தில் ஊழியராக இணைந்து, 2002-ம் ஆண்டில் ஜான்சியிலுள்ள நமது மிஷனெரிப்பயிற்சி மையத்திற்கு ஓராண்டுப் பயிற்சிக்காகச் சென்றார்.

திருமணத்திற்குப்பின் இத்தம்பதியினர் 5 1/2 ஆண்டுகள் ஆந்திராவிலுள்ள ராமகுப்பம் பணித்தளத்திலும், 2013-ம் ஆண்டிலிருந்து மகாராஷ்டிராவிலுள்ள தானே மற்றும் நவி மும்பை ஆகிய இடங்களில் முன்னேற்றப்பணியிலும் பணியாற்றினர். இவர்கள் தற்போது முன்னேற்றப்பணி ஊழியங்களை முன்னிட்டு கடந்த 4 வருடங்களாக நாக்பூரில் தங்கி, விர்தார்பா மற்றும் சத்தீஸ்கட் பிராந்தியத்தில் ஊழியம் செய்து வருகின்றனர்.

இத்தம்பதியருக்கு தேவன் 2 மகன்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்தவன் மெல்வின் பிளஸ்ஸோ (D.O.B. 15.05.2008) 10-ம் வகுப்பிலும், இளையவன் ஆல்வின் ஜாஷ்வா (D.O.B. 26.09.2011) 6-ம் வகுப்பிலும் படித்து வருகின்றனர். இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது அனுதின ஜெபத்தின் மூலம் தாங்குவோம்.



திரு. மித்ரன் & திருமதி. நிர்மலா குடும்பம்

Regd. Newspaper for India No.17759/69

போ (அ) அனுப்பு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

கர்நாடக மாநில முகாம் 2022

எரேமியா 29:11

கருப்பொருள்

உன்னத திட்டத்தை நோக்கி

அக்டோபர் 22-23

சனி - காலை 8.00 முதல் ஞாயிறு - மாலை 7.30 மணிவரை

இடம்

இந்தியா கேம்பஸ் குருசேட் ஃபார் கிரைஸ்ட்

எண்ணூர் ரோடு, லிங்கராஜபுரம், பெங்களூர் – 560084.

சிறப்பு செய்தியாளர்கள்



Rev. Dr. டெக்ஸ்டர் S. மாபன்
Vice-President, Karnataka Central Diocese, CSI



Rev. S. ஜாண் பெர்வின்
Gen. Sec., FMPB



Rev. I.K. ஆபிரகாம்
FMPB



Rev. D. பால் சாலமோன்
FMPB

நோக்கங்கள்

- பங்கேற்பாளர்களை ஆழ்ந்த ஆவிக்குரிய அனுபவத்திற்கு கொண்டுசெல்லுதல்
- மிஷனரி பாரத்தை வழங்குதல்
- தலைவர்களின் ஈடுபாட்டை மேலும் வளப்படுத்துதல்

Contact: **FMPB - KARNATAKA SNEHALAYA** # 173, 4th Cross, Chikkanappa Layout, Byrathi, Kothanur, Bangalore - 560 077.

☎ : **Rev. Vijay** - 6385187552, **Bro. Elango** - 9902288750, **Rev. Edwin** - 8292390481, **Bro. Raja** - 9036671342, **Rev. Robert** - 9654373422, **Bro. Roby** - 7462985568, **Bro. Anand Kumar** - 9686436937, **E-mail:** elangovan@fmpb.org

ஜெபியுங்கள், பங்குபெறுங்கள் & ஆசீர் பெறுங்கள்

Published by: S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***